கர்நாடக சங்கீத வித்வான்கள்

சூலமங்கலம் பிரம்மஸ்ரீ
வைத்தியநாத பாகவதர் (பிரம்மம்)



கர்நாடக சங்கீத வித்வான்கள்

சூலமங்கலம் பிரம்மஶ்ரீ
வைத்தியநாத பாகவதர் (பிரம்மம்)

கலாக்ஷேத்ரா பிரசுரம்
திருவான்மியூர் சென்னை-600 041

Printed at
Kalakshera Press
Thiruvanmiyur Madras-41

42-4

முன்னுரை

என்னுடைய பிதாமகர் பிரம்மஸ்ரீ சூலமங்கலம் வைத்திய நாதபாகவதர் அவர்கள் ஹரிகதா காலட்சேபம் என்னும் அருமை யான கலையை மிகச் சிறப்புடன் கையாண்டு மகத்தான புகழை யடைந்தவர். அவர் சுமார் 40 ஆண்டுகள் (1903-1943) திருவையாறு சத்குரு தியாகராஜஸ்வாமிகளின் ஆராதனை உற்சவத்தை, ''சின்னக் கட்சியினை செயலாளராக மிகவும் பக்தி சிரத்தையுடன் நடத்தி வந்தார்கள். தியாகப் பிரம்மத்தைப் போலவே, சூலமங்கலம் வைத்தியநாதபாகவதர் அவர்களும் 'ஆபத் சன்யாஸம்' பெற்று 21-10-43 அன்று சமாதி அடைந்தார்.

சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர், தமது காலத்தில் பிரபலமாக விளங்கிய கர்நாடக சங்கீத வித்வான்களைப்பற்றிய ரஸமான குறிப்புகளை கல்கியில் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தார். இன்றைய வித்வான்களும், வித்யார்த்திகளும் அவர் களைப்பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பளிக்க ''கர்நாடக சங்கீத வித்வான்கள்'' என்ற தலைப்பில் வெளியான அக்குறிப்பு களைத் தொகுத்து ஒரு புத்தமாக வெளியிட்டிருக்கிறேன். சங்கீத வித்யார்த்திகள், ரஸிகர்கள் மற்றும் பலரும் இப்புத் தகத்தைப் படித்து பயனுறுவார்களென்று நம்புகிறேன். அன்பர்கள் அனைவரும் பிரம்ம ஸ்ரீசூலமங்கலம் வைத்தியநாத பிரம்மத்தின் சமாதிக் கட்டிடம் கட்டி முடிக்க பெரும் பொருளுதவி செய்ய வேண்டுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன். 'கல்கியில்' வெளியான குறிப்புகளை புத்தமாக வெளியிட அனுமதிதந்தமைக்கு 'கல்கி' ராஜேந்திரன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

இப்புத்தகத்தை வெளியிட மிகவும் உதவிய ஸ்ரீ C. T. நாச்சியப்பன், (கலாக்ஷேத்திரா பப்ளிகேஷன்ஸ்) அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சூலமங்கலம் வைத்தியநாத பிரம்மத்தின் சமாதிக்கு அன் பளிப்பாக நிதி அனுப்புகிறவர்களும், புத்தகப் பிரதிகள் வாங்க விருப்பமுள்ளவர்களும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுமாறு கோரு கிறேன்.

11-B சூர்யா அபார்ட்மென்ட்ஸ்
18, Balaiah Avenue
Luz, Mylapore, Madras-600 004

இப்படிக்கு உங்கள்
சூலமங்கலம்
M. ராம்மோஹன்.

அபிநந்தனம்

சூலமங்கலம் பிரம்மஸ்ரீ வைத்தியநாத பாகவதர் அந்த காலத்து மகாவித்வான்களைப்பற்றி எழுதிய இந்த அரிய நூலைப் படிக்கும் நேயர்களுக்கு பிரம்மஸ்ரீ பாகவதர் அவர்களுடைய அனுக்கிரஹம் நிச்சயமாகக் கிடைக்கும் என்பது என்னுடைய திண்ணமான கருத்து. அவர் ஒரு மகான். வெறும் கதாகாலட்சேபம் செய்தவர் அல்ல. ஸ்ரீதியாகப் பிரம்மத்தினிடம் அளவு கடந்த பக்தி கொண்டு ஸ்ரீஸ்வாமிகளின் ஆராதனை மஹோத்ஸவத்தைத் திறம்பட பரம ஆசார சம்பத்துடன் நடத்தியவர். அதே போன்று திருவிச நல்லூர் அய்யர்வாள் உத்ஸவத்திலும் மிகவும் ஈடுபட்டிருந்தார்.

அவருடைய கதாகாலட்ஷேபத்தை நான் என்னுடைய 14 வயதிலேயே கேட்டவன். அது ஒரு ஆனந்தத் தேனாக என் காதில் பாய்ந்து என்னையும் இந்தத் தொண்டில் ஈடுபடக்காரணமாயிருந்தது. என் தந்தையாரைப் பார்க்க சில சமயம் அவர் வருவதுண்டு. அப்பொழுது அவர்கள் இருவரும் சல்லாபம் செய்து கொண்டிருக்கும் பொழுது நானும் அவ்விடமிருந்து செவி சாய்த்து அதில் சொக்கிப் போயிருக்கிறேன். ஸ்ரீராமாயணம், பாகவதம், இவைகளில் காணப்படும் அறிய கருத்துக்கள் அடங்கிய ஸ்லோகங்களும் அதன் உட்பொருள்களையும் இருவரும் விமரிசையாக எடுத்து பேசும் பொழுது அதை மாணவனாக நான் கேட்டு என் அறிவை வளர்த்துக் கொண்டதனால் தானோ, இந்த 52 ஆண்டுகளாக கதாகாலட்ஷேபத்தில் ஈடுபட்டு வருகிறேன் என்று நினைக்கிறேன்.

இன்று கதாகாலட்ஷேபம் குப்பையில் போடப்பட்டுள்ளது. அதைச் செய்கிறவர்களைக் கேலி செய்யும் ஸங்கீத வித்வான்கள், அவர்களை ஆதரிக்கும் சபைகள், பத்திரிகை விளம்பரங்களால் வாழ்ந்து நிற்க நினைக்கின்றன. ஹரிகதா பண்டிதனை ''கதை சொல்கிறவன்'' என்று கேலி செய்து தானே மகிழ்ந்து கொள்கிறது.

सत्कथा श्रवणात् पापं
त्रिविधं नश्यति ध्रुवं

என்பது நம்முன்னோர்களுடைய வாக்கு.


அதைச் செய்பவன் பொழுதுபோக்குக்கு கதை சொல்லி ஜனங்களை தூங்க வைக்கிறவன் என்று சொல்கிறது ஸங்கீத மகா

ஞானம் கொண்டவர்களாக தங்களை நினைத்துக் கொள்ளும் இந்த கூட்டத்தார் கர்நாடக சங்கீதமே சினிமா சங்கீதத்திற்கு பாரம்பர்யமாக சொல்ல நினைக்கிறது. மைக் இல்லாமல் எந்த சங்கீத வித்வானுல் பாடி நாலுபேரையாவது திருப்தி செய்ய முடியுமா? ச்ருதியை ரொம்பவும் கீழ் ஸ்தாயியில் வைத்துக் கொண்டு, அதில் அரும்பாடுபட்டுச் சேர்த்து ராகம் என்று ஒன்று பாடி, ஒரு கீர்த்தனம் எடுத்து அதில் சாகித்தியங்களை இஷ்டப்படி பிரித்து பிராண்டி, நிரவல்பண்ணி, நாலு ஆவர்த்தணம் ஸ்வரம் போட்டு மேல் மத்திமத்தில் கழைக்கூத்தாடியின் நிறை கூட்டி அப்ளாஸ் (Applause) வாங்கி, மிருதங்கம், கடம் இவர்களை மோதச் செய்து விட்டு, கச்சேரியில் கர்நாடக சங்கீதத்தை காப்பாற்றி வருவதாக ஆயிரக் கணக்கில் பணம் (ரேட்) வாங்கி, ஏரோப்ளேனில் பறந்து பத்மஸ்ரீ, பத்மபூஷ்ண, பத்மவிபூஷ்ண ஏனைய பட்டங்களை வாங்கினால் வெற்றி பெருமிதமாக நினைக்கிற இந்த மகாமேதாவிகளுடைய காலத்தில் இன்று பாகவதர்வாள் இல்லாமல் போனதை நினைக்கும் பொழுது பகவானுக்கு நன்றி சொல்ல வேண்டும். அவர்களையும் கதை சொல்கிறவன் என்று பேசி எழுதி பெருமைபடக்கூடிய பத்திரிகை விமரிசகர்கள் இருக்கிற காலம் அல்லவா இது, ஸ்ரீ ஸத்குரு தியாகப் பிரம்மத்தின் உத்ஸவத்தில் பஞ்சரத்ன கீர்த்தனைகளைப் பாடினால்தான் ஸ்வாமிகள் ஆத்மா சாந்தி அடையும் என்று தவறான அபிப்ராயம் உலவி வருகிற நாளில் பஞ்சரத்னங்களைப் பாடக்கற்றுக் கொண்டவன் சங்கீத மஹாவித்வான் ஆகி விட்டோம் என்ற சபலபுத்தியும் உலவி வருகிறது.


பிரம்ம ஸ்ரீ பாகவதர் அவர்கள் பேசிக் கொண்டே (உரையாடல்) வருகையில் ஒரு ராகத்தை அதன் ஜீவனைக் காட்டும் இடத்தில் பிடித்து சங்கதி போட்டு சதஸை பரவசப்படுத்தியிருக்கிறார். அந்த சதஸ்ஸில் அந்தக் காலத்தில் பழம் தின்று கொட்டை போட்டவர்கள் என்று சொல்லக்கூடிய அறிஞர்கள் நிறைந்திருந்தார்கள். குறைந்த பக்ஷம் 5 மணி நேரம் நின்று கொண்டே அம்ருத தாரையாகப் பொழியக் கூடியவர் ஸ்ரீ பாகவதர்வாள். ஒரு தம்பூரா ச்ருதி, ம்ருதங்கம், பின்பாட்டு இவைதான் பக்கவாத்யங்கள். ச்ருதியுடன் இழைத்து நிற்கும் குரலும், பேச்சில் எத்தனை ஸ்லேஷைகள் (இரண்டு அர்த்தம் கொள்ளக் கூடிய சொற்கள்) யாரையும் புண்படுத்தாமல் உயர்ந்த ஹாஸ்யம் இப்படி எல்லாம் நிறைந்த ஒரு காலட்க்ஷேப நிகழ்ச்சியை இந்தக் காலத்தில் எங்கே கேட்கப் போகிறோம்? பிரம்மஸ்ரீ திருப்பழணம் பஞ்சாபகேச சாஸ்திரிகளும் மாங்குடி சிதம்பர பாகவதரும், மற்றும் அவர் வழி வந்தவர்கள், அவர்களின்

பின்பாட்டின் சிறப்பில் பெருமை பெற்றவர்கள். அந்தக் காலத்தின் இசையை கட்டுரை நிறைந்த இந்த நூலின் மூலமாக நாம் நன்கு உணரமுடிகிறது. அந்த நற்காரியத்தை எடுத்து நடத்திக் கொடுத்த அவர் பேரன் ஸ்ரீ ராம் மோகனுக்கு தமிழ் அறிந்த உலகம் கடமைப் பட்டிருக்கிறது.

12, வெங்கட்ராமன் தெரு, T. S. பாலகிருஷ்ண சாஸ்திரி
ராஜா அண்ணாமலைபுரம்
சென்னை-600 028.



LAKSHMANACHARIAR
(Harikatha Performer)




PANCHAPIKESA BHAGAVATHAR
(Harikatha Performer)



MANGUDI CHIDAMBARA BHAGAVATHAR
(Harikatha Performer)



MAMUNDIYA PILLAI
(Kanjeera Player)




GOVINDASWAMY PILLAI
(Violinist)



SIVAKOLUNDU
(Nadaswaram)



ALAGANAMB
(Mridangist)



THIRUKODIKAVAL KRISHNIER
(Violinist)

சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர்

தஞ்சாவூரிலிருந்து சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவி லுள்ள சூலமங்கலம் என்னும் கிராமத்தில், ஒரு எளிய, தெய்வ பக்திமிக்கக் குடும்பத்தில் 1868-ம் ஆண்டு திரு. வைத்தியநாத பாகவதர் பிறந்தார்.

எட்டாவது வயதிலேயே தந்தையை இழந்துவிட்ட போதிலும் வைத்தியநாத பாகவதர் புதுக்கோட்டை 'மஹாராஜாக் கல்லூரி'யில் இடைநிலைப் பட்டப் படிப்பு (F.A.) வரை படித்துத் தேர்ந்தார். இதைத் தொடர்ந்து சைதை ஆசிரியர்கள் கல்லூரியில் பயிற்சி பெற்றார். அப்போது, அங்கு காலம் சென்ற ரைட் ஹானரபிள் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்த்திரியும், ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்காரும் அவருடைய வகுப்புத் தோழர்களாக இருந்தனர்.

பின், இவர் மன்னார் குடியில், மேற்பார்வை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். சங்கீத ஆர்வம் மிக்கவராக இருந்ததால், தன் ஆசிரியர் தொழிலை விட்டு விட்டு, ஹரிகதை செய்வதில் வல்லுனரான கிருஷ்ண பாகவதரின் திறமையால் ஈர்க்கப்பட்டு, தானும் அவருடைய மரபையே பின்பற்றி ஹரி கதை செய்ய லானார். விரைவிலேயே, ஸ்ரீ வைத்தியநாத பாகவதர் 'சரித் திரங்களைச் சொல்லுவதில் தனக்கென ஒரு பாணியை உரு வாக்கிக் கொண்டார். கதையின் ஊடே பொருத்தமான தியாக ராஜகிருதிகளைப் புகுத்தி, அவைகளை மெறுகேற்றுவது போன்ற சில உத்திகளில் அவர் தன்னிகரில்லாதவராத் திகழ்ந்தார். அவருடைய 'சரித்திரங்களை' ஆழ்ந்த பக்தியுடையதாகவும், ஜனரஞ்சகமான நகைச்சுவையை பரவலாக வைத்தும் அமைத் தார். தியாகராஜ கிருதிகளைப் போலவே தமிழ்ப் பாடல் களையும் ஆர்வத்துடன் திறமையாகப் பாடிவந்தார். அறுபத்து மூன்று நாயன்மார்களின் சரித்திரங்களையும் தமிழ்ப் பாடல் களைக் கொண்டே அற்புதமாய்க் கலாட்சேபம் செய்வதில் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

அவருடைய ஆழ்ந்த தமிழ் புலமை பல பெரிய தமிழறிஞர் களின் மதிப்பையும், பாராட்டையும் அவருக்குப் பெற்றுத்தந்தது. அவர் வடமொழி, தெலுங்கு, மராட்டி, ஹிந்தி, கன்னடம் ஆகிய மொழிகளிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். தம் கிராமத்தில் வருடாவருடம் தெலுங்கு நாட்டிய நாடகங்களை அற்புதமாகத் தயாரித்து மேடை ஏற்றியிருப்பதிலிருந்து அவ

ருடைய நாட்டிய சாஸ்திர ஞானம் பற்றியும் நாம் அறிய முடிகிறது. ''சிவலீலா'', ''சக்திலீலா'' என்ற இரு நாடகங்களை இயற்றி அவர் ஒரு சிறந்த நாடகாசிரியராகவும் பெருமையுற்றார். இவை டி. கே. எஸ். சகோதரர்கள், நவாப் ராஜா மாணிக்கப்பிள்ளை ஆகிய பிரபல நாடகக் குழுவினரால் மேடை ஏற்றப் பட்டன.

நாற்பது வருடங்களுக்கும் அதிகமாக அவர் தம் இல்லத்தில் 'ராதாகல்யாண' உற்சவம் நடத்தி வந்தார். மஹா வைத்திய நாத சிவன், பூச்சி அய்யங்கார், திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர், பழனி கிருஷ்ணய்யர் ஆகிய பிரபல வாய்ப்பாட்டுக்காரர்கள், மிருதங்க விற்பன்னர்களான தஞ்சாவூர் 'நாராயணசாமியப்பா, துக்காராம், மாமுண்டியாப்பிள்ளை, தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை மற்றும் பெயர் பெற்ற புல்லாங்குழல் வித்வான் சரப சாஸ்திரிகள் ஆகியோர்கள் இவ்வுற்சவங்களில் பங்கு பெற்று சிறப்பித்தனர்.

இந்துக் கலாசாரத்தின் மீது அவருக்கு இருந்த பக்தி, ராமாயணம், மஹாபாரதம் மற்ற புராணங்கள் பற்றின அவருடைய ஆழ்ந்த அறிவு, தன்னலமில்லாத பெரியோர்களின் வழிமுறைகளில் அவருக்கு இருந்த ஆழ்ந்த பற்றுதல் – இவை எல்லாம் அக்காலத்துக் கலைஞர்கள் பலருக்கு ஒரு முன் மாதிரியாக அமைந்தன.

அவர் தியாக பிரம்மத்தின் மீது கரைகாணா பக்திகொண்டவர். 'சின்னக் கட்சி'யின் செயலாளர் என்ற முறையில் நாற்பது ஆண்டுகளுக்கு (பின் எல்லாக் குழுக்களும் ஒன்றாக இணைந்து அதை நடத்தத் தொடங்கியது வரை) தியாகப் பிராரம்மத்தின் ஆராதனையை ஏற்று நடத்தி வந்தார்.

தியாகப் பிரம்மம் போன்ற பல பெரும்மகான்களின் மரபை ஒட்டி அவரும் ''ஆபத்சன்யாஸம்' ஏற்றுக் கொண்டு பிறகு அக்டோபர் இருபத்தொன்று, 1943-ல் சூலமங்கலத்தில் சமாதி அடைந்தார்.

ஸ்ரீ வைத்தியநாத பாகவதரின் மறைவிற்குப்பின் அவருக்கு அஞ்சலி செய்தி 'கல்கி' எழுதியது ''அவருடைய பிரிவினால் கர்நாடகசங்கீத உலகம் அடைந்திருக்கும் பெரும் நஷ்டத்தை, அவர் எழுதி வைத்துவிட்டு சென்றிறிருக்கும் அனுபவக் குறிப்புகள் ஓரளவு ஈடு செய்யலாமென்று நம்புகிறோம்.''

1. மகா வைத்தியநாதய்யர்

சோழ நாட்டில் தஞ்சைமா நகரத்திற்குச் சமீபத்திலுள்ள வையை என்ற ஊரில் பிறந்து மகா கியாதி பெற்ற மகா வைத்தியநாத சிவன் அவர்களுடைய கானத்தை முதல் முதலில் திருவையாற்றில் பல வருஷங்களாய் நடந்து வருகிற ஸப்த ஸ்தான உத்ஸவ காலத்தில் கேட்கும்படி நேர்ந்தது. சுமார் 20,000 ஜனங்களின் மத்தியில், பதினைந்து மண்டபம் சாம்ப சிவய்யர் பிடிலுடனும் துகாராமப்பா மிருதங்கத்துடனும் பாடினார். ஆஹா அந்த கானம் இன்னும் என் மனதை விட்டகல வில்லை. அதன் பெருமையை எவ்வாறு வர்ணிப்பேன்? ஒரு வருக்கும் கிட்டாத ஈடில்லாத சாரீரத்துடன், உயர்ந்த சோழ தேசத்து பாணியை வகித்து, 'சங்கர விபோ' என்று உபக்ரமம் செய்து, தேரிஞ, தாரிஞ, அதரிஞ என்ற வார்த்தைகள் இல்லா மல் பாடிய கல்யாணி ராகமும், ''தாரகப்ரும்ம ஸ்வரூபா'' என்ற பல்லவியும், மற்றும் அநேக ராகங்களும் கிர்த்தனங்களும் அன்றையக் கச்சேரியின் பெருமையை அளவிட முடியாமற் செய்தன.

சிவன் அவர்களுக்கு முதலில் வைத்தியநாதய்யர் என்று தான் நாமதேயம். அவருக்கு திருவாடுதுறை ஆதீனத்தால் மகா வைத்தியநாதய்யர் என்ற பட்டம் அளிக்கப்பட்டது. ஒரு சமயம் காரைமா நகரில் இவர் கச்சேரி செய்யுங்கால், அஷ்டாவ தானம் வாலு அய்யர், சிலேடைப்புலி வேம்பத்தூர் பிச்சு வய்யர், சின்னசாமி பாரதி முதலானவர்கள் சபையில் கூடி யிருந்தார்கள். அப்போது வைத்தியநாதய்யர் அவர்களுடைய பெயருடன் 'மஹத்' சப்தம் சேர்க்கப்பட்டதற்குக் காரணத்தை அஷ்டாவதானம் வாலு அய்யர் பின்வருமாறு தெரிவித்தார்:-

''ஸத்ய லோகத்தில் மும்மூர்த்திகளில் ஒருவரான பிரும்ம தேவர், பரமேச்வரனுக்கு மகா தேவன் என்றும், ஸ்ரீமன் நாராயணனுக்கு மகா விஷ்ணு என்றும் பெயர் இருக்க, தமக்கு மாத்திரம் 'மஹத்' சப்தம் இல்லாததை நோக்கி வருந்தி,

தமக்கு மஹத் சப்தம் எப்பொழுது கிடைக்குமோ என்று இச்சை கொள்ள, பரம் பொருள் இதை நோக்கி இச்சைக்கு ஜன்மம் உண்டென்று நிச்சயித்து, அதைப் பூர்த்தி செய்யப் பிரும்ம தேவரை வைத்தியநாதய்யராகப் பூலோகத்தில் ஜனிக்க செய்து 'மஹத்' சப்தத்தை அளித்து இச்சையைப் பூர்த்தி செய்தார்.''

இதைக் கேட்ட சபையோர் எல்லோரும் மிகவும் சந்தோஷித்து அங்கீகாரம் செய்தார்கள்.

எனக்கு முக்கிய சிநேகிதரும், கர்நாடக சங்கீதத்திற்கு ஆதார பூதர் என்று சொல்லத் தக்கவருமான மாயவரம் வீணை வைத்தியநாதய்யர் அவர்களின் கிரகத்தில் ஐப்பசி மாதத்தில் ஒரு சமயம் மகா வைத்தியநாதய்யர் கச்சேரி செய்தார். அப்பொழுது தலைஞாயறு பல்லவி சோமுவய்யர், சிதம்பரம் கிருஷ்ணய்யர், விசலூர் கிரீசய்யர் முதலான வித்வான்கள் கூடியிருந்தார்கள். அன்று ஒரு அதிசய சம்பவம் நடந்தது. அய்யர்வாள் அபாரமாக ஸாவேரி ராகம் பாடிப் பல்லவி பாட யத்தனம் செய்யுங்கால், மேற்கண்ட வித்வான்கள், ஒருவராலும் ஸாத்யப்படாத ஒருதுர காலத்தை அமைத்துப் பல்லவி பாடும்படி அவரைக் கேட்டுக் கொண்டார்கள். அதை அய்யர் அவர்கள் அலட்சியமாக மூன்று காலமும் பாடி ஸ்வரம் பாடுகையில், துர காலத்தில் பாடுகிற ஸ்வர ஸ்தானங்கள் சரியாய்ப் பிடிக்கப்படவில்லையோ என்ற சந்தேகத்தினுல் திரும்பத் திரும்பப் பாடச் சொல்ல, அய்யரவர்கள் வாயு வேக மனோ வேகமாக ஸ்வரங்களை அடுக்கிப் பாடுங்கால் அந்த ஸ்வர ஸ்தானங்கள் சரியா, இல்லையா என்பதை இவர்கள் மனதினுல்கூட ஸ்மரித்து நிர்ணயிக்க முடியாமல் போய்விட்டது! அன்று பாடிய ஸாவேரியைத்தான் இன்னமும் அநேகம் பேர் ''சிவன்வாள் மாயவரம் ஸாவேரி'' என்று சொல்லிக் கொண்டி டிருக்கிறுர்கள்.

ஒரு சமயம் தஞ்சைமா நகர் வெண்ணுற்றங் கரையில் அநேக ஜமீன்தார்கள், மிராசுதார்கள் கூடி அய்யர் அவர்களின் கச்சேரியை ஏற்பாடு செய்திருந்தார்கள். அய்யர் அவர்களுடைய வைதிக சிரத்தையைத் தெரிந்து கொள்ளாமல் கச்சேரி மாலை ஆறு மணிக்கென்று விளம்பரம் செய்துவிட்டார்கள். இதை நம்பி அநேகம் பிரமுகர்கள் ஐந்தரை மணிக்கே அங்கு வந்து தயாராயிருக்க, குறிப்பிட்ட நேரத்தில் அய்யரவர்கள் வர வில்லை! விசாரிக்குங்கால் அய்யரவர்கள் வெண்ணுற்றில் ஸந்தியா

கால அனுஷ்டானம் செய்து கொண்டிருப்பதாகத் தெரிந்தது. ஒரு மணி நேரத்துப் பிறகே சிவன்வாள் வந்து கச்சேரி ஆரம்பித்தார்கள். அது பரியந்தம் சபையோர்கள் எல்லோரும்காத்திருந்து அய்யரவர்களை வரவேற்றுக் கச்சேரியை ஆனந்தித்தார்கள். இதிலிருந்து இவருடைய வைதிக சிரத்தையும், ஜனங்கள் இவருடைய சங்கீதத்தில் கொண்டிருந்த கௌரவமும் நன்கு வெளிப்பட்டன.

அய்யரவர்கள் கச்சேரி செய்யுங்கால் சரீரத்தில் ஒருவித விகார சேஷ்டையும் இல்லாமல், தரித்த விபூதி அழியாமல் பாடுவார். எப்போதும் மந்தஹாஸ முகத்துடன் விளங்குவார்.

சிவன்வாளும், அக் காலத்தில் அவருடன் ஸமமாய் விளங்கின பட்டணம் சுப்ரமணிய அய்யர், குன்னக்குடி கிருஷ்ணய்யர் முதலான வித்வான்களும் கச்சேரி செய்த விதத்தையும், தற்காலம் கான வித்தை ப்ரவீணர்கள் கச்சேரி செய்கிற விதத்தையும் இங்கு சற்று ஒப்பிட்டுக் கவனிக்கத் தக்கதாக இருக்கிறது. அக்காலத்தில் கச்சேரியை ஆரம்பித்து நாலு ஐந்து கீர்த்தனங்கள் பாடின பிறகு, கன ராகத்தில் ஒன்றரை அல்லது இரண்டு மணி நேரம் ஆலாபனம் செய்து, அதே ராகத்தில் முக்கால் அல்லது அரை இடத்தில் பல்லவி அமைத்து ஸர்வ ஜனங்களும் அநுபவிக்கும்படியாய்ப் பாடி, பிறகு அபூர்வ ராகங்களில் கீர்த்தனங்கள் இரண்டு பாடி, சுமார் நாலுமணி நேரத்திற்குக் குறையாமல் கச்சேரி செய்து முடிப்பார்கள். அவர்களுடைய கானத்தைக் கேட்டு ஆனந்திக்கிற ஜனங்கள் இதைப் பாட வேணும், அதைப் பாடவேண்டாம் என்று குறிப்பிட்டுச் சொல்ல மாட்டார்கள். ஏனென்றால் வித்வான்கள் எதை கானம் செய்தாலும் அதுவே பூர்ணமாக நிரம்பி, மற்றொன்றில் அபேட்சை ஏற்படாமல் செய்துவிடும். ராக ஆலாபனம் சுமார் இரண்டு மணி நேரத்திற்குமேல் நடந்தாலும், ஆலாபனத்தின் ருசியானது ஜனங்களுக்கு ராக ஆலாபனமே செய்து கொண்டிருந்தால் போதும். பல்லவி தேவையில்லை என்று தோன்றச் செய்யும். பல்லவி பாட ஆரம்பித்து விட்டாலோ, பல்லவி உயர்ந்ததா, ராக ஆலாபனம் உயர்ந்ததா என்று நிர்ணயிக்க முடியாமல் போய்விடும். கச்சேரி கேட்டவர்கள் எவ்வளவு காலமானாலும் அதை மறக்கமுடியாதபடி இருக்கும். சமம், அரை இடம், முக்கால் இடம் இவைகளில் பல்லவி எடுத்துப் பாடுவதைத் தவிர, வேறு விஷமமான இடங்களை எடுத்துப் பாட அதீத பரிக்ஞானமிருந்தாலும் அந்த வழியில் அவர்கள் போகிற வாடிக்கையில்லை.

அய்யர் அவர்கள் மைசூர், திருவாங்கூர், ராமனாதபுரம், புதுக்கோட்டை முதலான சமஸ்தானங்களால் வரவழைக்கப் பட்டு மாதக் கணக்காக அவ்விடங்களில் வைத்துக் கச்சேரிகள் செய்து விசேஷப் பரிசுகள் பெற்றுப் பெருமை அடைந்ததுண்டு.

பூமண்டலத்தில் கர்ணனே மறுபடியும் உருவெடுத்து வந்தவர் என்று சொல்லத் தக்க ராமனுதபுரம் சமஸ்தானம் பாஸ்கர சேதுபதி அவர்கள், அக்காலத்தில் சங்கீத மும்மூர்த்தி களாய் விளங்கிய நமது மகா வைத்தியநாதய்யர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர், குன்னக்குடி கிருஷ்ணய்யர் இம்மூவரை யும் ஒருங்கு சேர்த்து ஒரே சமயத்தில் பாடிக் கேட்க வேணு மென்று ஆவலுற்ருர். அவ்விதமே அவர்கள் ஒருங்கு சேர்ந்து கச்சேரி நடத்தும் போது, அய்யரவர்கள் தோடி ராகத்தை முதலில் உபக்ரமம் செய்து பாடினார். அதையே மற்ற இரு வித்வான்களும் பாடினார்கள். பிறகு ''கானலோல கருணு'' என்ற பல்லவியை ஆதி தாளத்தில் ஐயரவர்கள் எடுத்துப் பாட, அதையே சுப்ரமணிய அய்யரும் கிருஷ்ணய்யரும் பாட, கச்சேரி யானது தேவர்களும் கந்தர்வர்களும் கொண்டாடும்படியாக அமைந்தது. பிறகு வித்வான்கள் எல்லோரும் பாஸ்கர சேதுபதி அவர்கள் முன்னிலையில் ஐயரவர்களிடம் 108 அக்ஷரங்கள் அடங்கிய ஸிம்ம நந்தன தாளத்தில் ஒரு பல்லவி பாடவேணு மென்று அபேட்சிக்க, காம்போதி ராகத்தில் ராஜ ராஜேஸ்வரி பேரில் ஐயர் ஒரு பல்லவி அமைத்து உடனே பாடி எல்லோரை யும் சந்தோஷிக்கச் செய்தார்.

மகா வைத்தியநாத சிவன் கானவித்தையில் மேன்மை அடைந்திருந்தது மட்டுமின்றி, தமிழ் பாஷையிலும் வட மொழியிலும் உயர்ந்த பண்டிதராக விளங்கிப் பரிசு பெற்றிருக் கிறார்.

தம்முடைய சாரீரமானது தாம் உள்ள வரையில், அதே காம்பீர்யத்துடன் இருக்க வேணுமே என்ற பயத்தினால் சாரீ ரத்தைக் காப்பாற்றுகிற விஷயத்தில் அவர் சர்வ ஜாக்ரதையா யிருந்தார். அதற்குத் தெய்வ பலம் முக்யம் என்பதை அறிந்து, ஈச்வரனுக்குத் தேன் பால் முதலிய அபிஷேகங் களைச் செய்து பக்தியுடன் பூஜிப்பார். ஆகார நியமத்தினுல் தான் சாரீரம் நிலைக்குமென்பதையும் அறிந்து அதற்குத் தக்க படியும் நடந்து வந்தார்.

இடைமருதூர் என்கிற க்ஷேத்திரத்தில் எப்படிக் கீழ்க் கோபுர

வாசலில் பட்டினத்தடிகளும், மேலக் கோபுர வாசலில் பத்திரகிரியாரும் வெகு காலமிருந்து விளங்கி வந்தார்களோ, அம்மாதிரியே பஞ்சநத க்ஷேத்திரத்தில் மகா வைத்ய நாதய்யரும் பட்டணம் சுப்பிரமணிய அய்யரும் கீழ்க் கோபுர, மேலக் கோபுர வாசல்களில் வசித்து வந்தார்கள்.

சிவன்வாள் பெரியோர்களிடத்தில் வைத்திருந்த பயபக்தி குறிப்பிடத்தக்கது. எந்த இடத்திலாவது எந்நேரத்திலாவது யாராவது பெரியோர் இவர் முகமாய் ஒரு கீர்த்தனம் கேட்க வேணுமென்று அபேட்சித்தால், கொஞ்சமும் தயங்காமல் பக்க வாத்தியங்கள் இல்லாமல் உடனே பாடிச் சந்தோஷப்படுத்தி பெரியோர்களுடைய ஆசியைப் பெறுவார்.

இவரிடத்தில் மற்றொரு விசேஷ குணம் இவருடைய சகோதர பக்தியாகும். இவருக்கு அளிக்கும் சம்பாவனைகளைத் தம்முடன் கூட ஒத்தாசையாய்க் கானம் செய்து வந்த தமையனார் ராமஸ்வாமி சிவனிடத்தில் கொடுக்கச் செய்வார். தவிர, அவருடன் கூடப் பிறந்த சகோதரர்கள் மூவருடன் தம்முடைய காலத்தில் பாகப் பிரிவினை செய்து கொள்ளாமல், பிறகு யதாபாகம் செய்துகொள்ளும்படி ஏற்பாடு செய்தார்.

எந்த விதமான சதஸாயிருந்தாலும், ஐயரவர்கள், ''நமப்பார்வதிபதயே'' என்று புண்டரீகம் போட்டு ஈசனை வணங்கிவிட்டுத்தான் கச்சேரியை ஆரம்பிப்பார். கச்சேரியின் அந்தியத்திலும் அப்படித்தான். அவருக்கு இவ்வளவு மேன்மை கிடைத்ததன் காரணம், திருவையாறு முதல் அதைச் சார்ந்த ஏழு ஸ்தலங்களையும் புதுப்பித்து மகா கும்பாபிஷேகம் ஏக காலத்தில் நடத்தி ஜீவன் முக்த தசையில் விளங்கின ஸ்ரீ சுந்தர ஸ்வாமிகளுடைய கருணைக்கு அவர் பாத்திரமாகி இருந்தது தான். மேற்படி ஸ்வாமிகளுடைய அதிஷ்டானம் புதுக்கோட்டை சமஸ்தானம் அரிமளத்தில் இன்றளவும் விளங்கிவருகிறது.

ஐயரவர்களுடைய பெருமையைச் சுருக்கிச் சொல்லில் திருஸ்தாயி சாரீரம், தேஜோமயமான சரீரம், சிவபக்தி, பரநாரீ ஸஹோதரத்வம், திரவியத்தைக் கையினால் தொடாத வைராக்யம், ஸௌலப்யம், பெரியோர்களிடத்தில் பக்தி ஆகிய மேன்மைகள் பொருந்தியவர். இவரைப் போல் ஈடு இல்லாத சாரீர மாதுர்யமும் கான வித்தையில் ஆழ்ந்த ஞானமும் ஒருவருக்கும் இது வரையில் ஏற்பட்டதில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். இனி ஏற்படுமோ என்பதும் சந்தேகந்தான்.

2. பட்டணம் சுப்ரமணிய அய்யர்

மகா வைத்தியநாதய்யருக்குச் சமமாக விளங்கியவரும் என்னிடத்தில் விசேஷப் பிரியமுள்ளவருமான பட்டணம் சுப்ரமணிய அய்யர் அவர்களுடைய கானத்தை நான் முதல் முதலில் திருவையாற்றுக்கு மேற்கேயுள்ள திருநெய்யானத்தில் அவருடைய மைத்துனர் சேஷய்யர் பிடிலுடனும், நன்னுமிய்யா டோலக்குடனும் (மிருதங்கம் இல்லாமல்) கேட்கும்படி நேர்ந்தது. அதில் பாட்டு பிடில் டோலக் மூன்றும் தாரதம்யம் காண்பிக்காமல் ஒன்று சேர்ந்து ஒரே நாதமாக இருந்தது. அன்று அவர் கரஹரப்ரியாவில் பாடிய ''விடமுஸேயவே'' என்ற கிருதி இன்னும் என் மனதை விட்டகலவில்லை.

டோலக் வாத்தியத்திற்கென்றே அவதாரம் செய்த நன்னுமிய்யா என்பவருடைய தாள ஞானம் மிகவும் மெச்சத் தகுந்தது. இவர் சங்கீதத்திற்கு ஒற்றுமையாக வாசிப்பார். எந்தக் காலத்தைக் கொடுத்து வாசிக்கச் சொன்னாலும் அதற்கு மூன்று காலமும் நிர்ணயமாகக் காட்டி வாசிப்பார். ஒருவர் கையிலும் நாளது பரியந்தம் பேசாத 'பரன்' இவர் கையில் சோபித்தது ரொம்பவும் குறிப்பிடத் தகுந்தது.

மிருதங்கம் வாசிப்பதில் சந்திரன் போல் விளங்கின தஞ்சாவூர் நாராயணஸ்வாமி அப்பா அவர்கள் இவருடைய வாத்யத்தை கேட்டு மதிமயங்கி நன்னுமிய்யா கையில் பேசுகிற 'பரனை'த் தானும் கொஞ்சம் ஸாதகம் செய்து வாசிக்க வேணுமென்று எத்தனம் செய்து வாசித்தார். நன்னுமிய்யாவுக்குப் பிறகு அப்பாவின் கையில்தான் நன்னுமிய்யாவின் பரன் கொஞ்சம் இருந்தது.

* * *

சுப்ரமணிய அய்யர் அவர்களின் கச்சேரியை அன்று கேட்ட பிறகு எங்கள் சொந்த ஊரிலும், மதராஸிலும், திருவையாற்றிலும் அநேகம் தடவை கேட்டிருக்கிறேன். ஸ்ரீ தியாகப் ப்ரும்மத்தின் கீர்த்தனங்களை, பிரும்மம் செய்த பிரகாரமே சுத்தமாயும் ஸ்ரீ தியாக ப்ரும்மத்தின் மனது சந்தோஷிக்கும்படியும் பாடிக் கச்சேரி செய்தவர் இவர் என்று சொல்ல வேண்டும். இக் காரணத்தை முன்னிட்டுத்தான் தியாகப்ரும்ம அனுக்ரகத்தினால் இவர் செய்த கீர்த்தனங்களில் வெங்கடேசா என்கிற முத்திரை இல்லாவிடில் தியாகப் பிரும்மத்தின் கீர்த்தனம் தானோ என்று சந்தேகிக்கும்படி இருக்கிறது.

கானவித்தையின் லட்சண லட்சியம் இரண்டிலும் மிகவும் ஆழ்ந்த சமமான ஞானம் இவருக்கிருந்தது. இவருடைய கர்நாடக ஞானத்திற்கு ஈடு இவரே என்று சொல்லலாம். இவருடைய கானத்தையும் மகா வைத்தியநாதய்யர் கானத்தையும் சிலர் ஒப்பிட்டுப் பார்ப்பது உண்டு. மகா வைத்யநாதய்யரின் கானத்தைத் தேவகானம் என்றும், பூமண்டலத்தில் ஒரு மனுஷ்யன் எவ்வளவு சாதித்துக் கரை காண முடியுமோ அதை சாதித்துக் கரை கண்டவர் சுப்ரமணிய அய்யர் என்றும் சொல்லுவார்கள். இவருடைய சாரீரத்தின் காம்பீரியம் குறிப்பிடத் தகுந்தது. பால்ய முதல் விடாமல் உழைத்து சாதகம் செய்து சாதித்த சாரீர மாகையால், இவருடைய கச்சேரி எக்காலத்திலும் சோடை அடைவதில்லை.

எப்படி பிரும்மஞானிகள் சதா பிரும்மத்தினிடத்திலேயே மனதை வயப்படுத்தி ஆனந்திப்பார்களோ அம்மாதிரியே ஆகாரம், நித்திரை காலம் தவிர மற்ற நேரமெல்லாம் நமது அய்யர் சங்கீத சாஸ்திரத்திலேயே லயித்து மனனம் செய்து கொண்டும் பாடிக் கொண்டும் கற்பனை செய்து கொண்டும் இருப்பார். அக்காலத்தில் கர்நாடக சங்கீத ஞானம் பரவி வலுத்ததற்கு முக்கிய காரணமாயிருந்தவர் பட்டணம் சுப்ரமணிய ஐயர்.

* * *

ராமனுதபுரம் சமஸ்தானத்தில் பிரபல ஜமீன்தாராய் விளங்கிய ஸ்ரீ பாண்டித்துரை அவர்கள் கர்நாடக சங்கீத அபிவிருத்திக்கு ரொம்பவும் ஊக்க மளித்த ஒரு முக்கியஸ்தர். அவர்கள் ஐயர்வாளுடைய சங்கீதத்தின் பெருமையையும் கௌரவத்தையும் செம்மையாய் அறிந்து திருவையாற்றில் ஐயருடைய ஜாகைக்கு அடிக்கடி வந்து அவருடைய கச்சேரியைக் கேட்டு ஆனந்தித்திருக்கிறுர்கள். ஐயரவர்களுடைய சங்கீத வித்தை அழியாமலிருக்கும் பொருட்டு, தம் சமஸ்தானத்திலிருந்தப் பூச்சி அய்யங்கார் என்ற ஸ்ரீநிவாஸ அய்யங்காரை இவரிடத்தில் சிஷ்யராக இருக்கச் செய்து மிகவும் பிரசித்தி அடையும்படி செய்தார். ஒரு சமயம் அய்யரவர்கள் ஜாகையில் பாண்டித்துரை முன்னிலையில் துகாரமப்பா மிருதங்கத்துடன் ஐயரின் கச்சேரி நடந்தது. பூச்சி அய்யங்காரும் பின்னுல் தம்பூரா வைத்துக்கொண்டு பாடினார். அது சமயம் மகா வைத்யனுதய்யர் அவர்களும் விஜயம் செய்தார். அன்று அய்யர் பாடிய கல்யாணி ராகத்தையும் பல்லவியையும் அவர் கேட்டு ரொம்பவும் மெச்சி சிரக் கம்பம் செய்து விட்டுச் சென்றுர். இது போல்

சுப்ரமணிய அய்யரவர்களும் மகா வைத்யநாதய்யர் கச்சேரிக்கு வந்து ஆனந்திப்பதுண்டு.

* * *

மகா வைத்யநாதய்யர் அவர்களைப் போலவே சுப்ரமணிய அய்யர் அவர்களும் அநேக மகாராஜாக்களால் கொண்டாடப் பட்டுப் பரிசு பெற்றிருக்கிறார். சில ராகங்களையும் கீர்த்தனங்களையும் தஹனத்தையும் பாடுவதில் இவருக்கு ஈடு ஒருவருமே கிடையாது. இவர் ஸ்ரீ தியாகப்ரும்ம கீர்த்தனங்களைக் கையாண்டு வருகையில் அநேக சங்கதிகள் அமைந்த பெரிய கீர்த்தனங்களைக் கச்சேரியில் பாடி, ஜனங்களுக்கு வெறுப்பு இல்லாமல் சந்தோஷப்படுத்துவார். வெகு கனமுள்ள சாரீரத்தை உடைய இவர் தார ச்ருதியை வைத்துக் கொண்டு மேல் மத்திய பஞ்சமங்களில் அலட்சியமாக சஞ்சாரம் செய்து விசேஷ ப்ருகாக்களுடன் பாடியது இன்னும் என் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஐயரவர்கள் தாம் ஒரு புதிய சாஹித்யத்தைச் செய்தவுடன் தம் புத்திக்கு அது எவ்வளவு அழகாகத் தோன்றினாலும், மற்ற வித்வான்களிடத்தில் பாடி அவர்கள் ரஸித்த பிறகுதான் அதைச் சிஷ்யர்கள் மூலம் பிரசாரம் செய்வார்.

இவர் மைசூர் சமஸ்தானம் சென்றிருக்கையில் அங்குள்ள வித்வான்கள் இவரைக் 'கன்னட கௌளா'' ராகத்தைக் கனராகமாய் விஸ்தரித்துப் பாடி அதில் பல்லவியும் பாட வேணுமென்று கேட்க, அவ்விதமே இவர் அந்த ராகத்தையும் அதில் பல்லவியையும் அபாரமாகப் பாடிப் பரிசு பெற்றார். இவர் அநேகம் தில்லானுக்கள் செய்திருக்கிறார். ''திரனு தீம் தீம் த திரனு'' என்ற செஞ்சுருட்டி ராக தில்லானுவை மைசூர் மகாராஜா அவர்கள் கேட்க நேரில் பாடி இரண்டு கைக்கும் தோடா பரிசு பெற்றார். இந்தத் தில்லானுவை மகா வித்வான் திருக்கோடிக் காவல் பிடில் கிருஷ்ணய்யர் தனிக் கச்சேரி செய்யுங்கால், கடைசியில் வாசித்து முடிப்பது வழக்கம். இவருடைய கீர்த்தனங்கள் பிரசித்தி பெற்றிருந்தாலும் முக்யமாக சென்னையில் அநேக புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் இவரால் நேரில் கற்பிக்கப்பட்டு விசேஷப் பெருமையுடன் இன்னமும் விளங்கி வருகின்றன. இவர் கணபதி உபாஸகர். விநாயக சதுர்த்தி உத்ஸவத்தைத் தம் கிரஹத்தில் விசேஷ வைபவத்துடன் நடத்தி வந்தார். ஐயரவர்கள் சரீர போஷணையில் மிக்க கவனம் செலுத்துவதுண்டு. சுகியென்றால் அவரைத்தான் சொல்ல வேண்டும்.

3. குன்றக்குடி கிருஷ்ணய்யர்

மகா வைத்யநாதய்யரவர்களுக்கும் பட்டணம் சுப்ரமணிய அய்யரவர்களுக்கும் சமமாகவே குன்றக்குடி கிருஷ்ணய்யரும் விளங்கி வந்தார். கர்னாடக சங்கீதத்தில் மேற்கண்ட இருவரைப் போலவே இவருக்கும் ஆழ்ந்த ஞானம் உண்டு. இவருடைய கானத்தை நான் முதன் முதலில் இவருடைய ஜாகையில் குன்றக்குடியில் கேட்கும்படி நேர்ந்தது. அன்று இவர் 'உசேனி' ராகத்தை ரொம்பவும் அழகாகப் பாடியதுடன் அதில் ஒரு சாபுதாளப் பல்லவியும் பாடினார். இன்னும் இவரால் கவனம் செய்யப்பட்ட கீர்த்தனங்களையும் கேட்டேன். பிறகு அநேகம் தடவைகள் இவருடைய கச்சேரிகளைக் கேட்கும்படியான சந்தர்ப்பம் வாய்ந்தது. விசேஷமாய்ச் சில அபூர்வமான தாளங்களில் பல்லவிகளை அமைத்துக் கொண்டு பாடுவதில் இவருக்குப் பிரியம் உண்டு. தாளத்தில் தனக்குச் சமமானம் ஒருவரும் இல்லை என்று நினைத்துக் கொண்டு சில இக்கட்டான தாளங்களில் பல்லவிகளை அமைத்து, மற்ற வித்வான்களை வலுவில் ''இதை உம்மால் பாட முடியுமா?'' என்று கேட்கிற வாடிக்கை இவரிடம் உண்டு.

ராமனாதபுரம் சமஸ்தானத்தில் அரண்மனை வித்வானாக விளங்கி அடிக்கடி விசேஷப் பரிசுகள் பெற்று வந்தார். இவர் காலத்திலிருந்த மகாராஜா பாஸ்கர சேதுபதி அவர்களின் பேரில் பரத சாஸ்திரத்திற்கு அனுகுணமாக அநேக சௌக வர்ணங்கள் கவனம் செய்து அரங்கேற்றியிருக்கிறார். சங்கராபரண ராகத்தில் ''ஸாமிகி ஸரி எவ்வரே'' என்ற வர்ணமும், இன்னும் அநேக ராகங்களில் செய்த வர்ணங்களும் இன்றைக்கும் விளங்கி வருகின்றன. தஞ்சையில் பிரசித்தமாய் விளங்கிய வடிவேல் நட்டுவனார் இரண்டு நடிகர்களைத் தயார் செய்து அவர்கள் கும்பகோணத்தில் அனுபானூர் வீட்டில் மேற்படி சங்கராபரண வர்ணத்தைக் கைபிடித்துப் பாடியதை நான், பூச்சி அய்யங்கார், பி.ஏ. வரதாச்சாரி, பிடில் கோவிந்த ஸாமி பிள்ளை முதலானோர் கேட்டுப் புகழ்ந்தோம்.

ஒரு சமயம் ராமனாதபுரம் சமஸ்தானத்தில் பல வித்வான்கள் முன்னிலையில் ரொம்பவும் சொற்கள் அடங்கிய ஒரு பல்லவியை 64 களை சவுக்கத்தில் கிருஷ்ணய்யர் தயார் செய்து கொண்டு மகா வைத்யநாதய்யரிடம் திடீரென்று ஒரு ஆவர்த்தி பாடிக் காண்பித்து ''இதைப் பாட வேண்டும்'' என்று அய்யரவர்களைக் கேட்டார்.

மகா வைத்யநாதய்யர், 'மற்ருெரு ஆவர்த்தி ஸாஹித்யத்தைச் சொல்லுங்கள்'' என்ருர்.

கிருஷ்ணய்யர் ''இந்த சாதாரண பல்லவியின் சாஹித்யத்தை இன்னெரு ஆவர்த்தியும் சொல்ல வேணுமோ?'' என்ருர்.

அதற்கு மகா வைத்யநாதய்யர் சிரித்துக் கொண்டு ''பல்லவியாய் இருந்தால் மறுமுறை சொல்லத் தேவையில்லை. ஆனல் இது தமிழ் பாஷையிலுள்ள கட்டளைக் கலித் துறை'' என்றார். இம்மாதிரியாகக் கிருஷ்ணய்யர் தன் வித்வத் பலத்தினால் அடிக்கடி வித்வாகளிடத்தில் போய் வலுவில் வாதம் செய்யப் பிரியமுள்ளவர். இவரை 'சிகிபிகி இரட்டைப் பல்லவி கிருஷ்ணய்யர் என்றும் சொல்வதுண்டு.

தற்காலத்தில் ஒரு பல்லவியை ஒரு ஆவர்த்த தாளத்தில் இரண்டு அல்லது நாலு ராகங்கள் கலந்து, உதாரணமாக, ''சங்கராபரணனை அழைத்தோடி வாடி கல்யாணி தர்பாருக்கு'' என்று பாடி வருகிருர்களே. இவ்விதம் பாட ஒரு புதிய வழி காண்பித்தவர் இந்தக் கிருஷ்ணய்யர்தான். பட்டணம் சுப்ரமணிய அய்யர் மாதிரியே கன சாரீரமுள்ள இவரும் உயர்ந்த ஸ்தாயி சுருதியையே வைத்துக் கொண்டு பாடுவார். இவர் காலத்தில் குன்றக்குடியில் சபாபதி பாகவதர், அம்பி பாகவதர், ராஜம் பாகவதர் முதலான கர்நாடக வித்வான்கள் விளங்கி வந்தார்கள்.

4. தலைஞாயர் சோமு அய்யர்

இவருடைய கர்நாடக சங்கீத ஞானம் ரொம்பவும் உயர்ந்தது. இவருடைய கானத்தை அடிக்கடி நான் மாயவரம் முதலான இடங்களில் கேட்டு சந்தோஷித் திருக்கிறேன். தாளம் ஸ்வரப்ரஸ்தாரங்களில் நிர்ணயமான ஞானம் உள்ளவர். அபூர்வ ராகங்களைக் கையாளக்கூடிய சக்தி வாய்ந்தவர். இவருடைய பூரண ஞானத்தை வெளிப்படுத்தி ஜனங்களை சந்தோஷிக்கச் செய்வதற்குப் போதுமான சாரீரம் இல்லாததினுல் அநேக வித்வான்களைக் கியாதியினுல் ஜெயிக்கக்கூடிய சந்தர்ப்பம் நேரவில்லை.

எவ்வளவு பெரிய வித்வான்களாயிருந்தாலும் இவர் முன்னிலையில் பாடுவதற்கு அச்சப்படுவார்கள். கர்நாடக

பத்ததியை விட்டு நளினம் சேர்த்து ஜனங்களை சந்தோஷப் படுத்துகிற வித்வான்களை இவர் வெறுப்பார். இவர்காலத்தில் மகா வைத்யநாதய்யர், பட்டணம் சுப்ரமணிய அய்யர் முதலான வர்கள் இருந்ததுடன் மிகவும் பிரசித்தி பெற்ற சின்ன வைத்தி, பெரிய வைத்தி, சிவகங்கை வைத்தி என்ற வித்வான்களும் விளங்கி வந்தார்கள். இதில் பெரிய வைத்தி என்பவர் நாதஸ் வரத்திற்கு ஏற்பட்ட ஒத்தை சுருதியாக வைத்துக் கொண்டு, அதற்குமேல் கம்பீரமாகப் பாடுவது வழக்கமாம். சின்ன வைத்தி பல்லவிக்குப் பாடுகிற ஒவ்வொரு ஸ்வர கற்பனையும் சிட்டஸ் வரம் மாதிரியே இருக்குமாம். மேற் குறிப்பிட்ட விஷயங் களை மாயவரம் வீணை வைத்யநாதய்யர் முதலான வித்வான் களிடமிருந்து நான் அறிந்து கொண்டேன்.

சோமு அய்யருடைய குமாரராகிய ராதா கிருஷ்ணய்யர் என்பவர் பிடில் வாத்யத்தைப் பரிச்சயம் செய்து கொண்டு அத்துடன் கானம் செய்து கச்சேரி அழகாகச் செய்வார். இவர் தன் தகப்பனாரிடத்திலிருந்தே வித்தையை அப்பியசித்தவர்.

5. பல்லவி பீமாசார்

இவருடைய கானத்தை நான் முதலில் திருச்சி ஆண்டார் தெரு, சிந்தாமணி நாராயணய்யர் கிளப்பில் கேட்கும்படியாய் நேர்ந்தது. அக்காலத்தில் மகா வைத்யனாதய்யரைக் காட்டிலும் கியாதி வாய்ந்த அந்தண நல்லூர் சுப்பய்யர் அவர்களுடைய சிஷ்யர் இவர். எந்த விதமான இக்கட்டான பல்லவியையும் சிரமமில்லாமல் சுலபமாய்ப் பாடுவார். இவருக்கு இதனாலேயே பல்லவி பீமாசார் என்ற ஒரு பட்டப் பெயர் கிடைத்தது.

இவருடைய குமாரர் ஸ்ரீநிவாஸ என்பவர் இவரிடத் திலேயே தயாராகி நல்ல சாரீரத்துடன் பாடி வந்தார். இவர் நாஸர்வாள் பதம் பாடுவதில் மிகவும் தேர்ச்சியடைந்தவர். பீமா சாருடைய சஞ்சாரம் முழுவதும் அநேகமாய்த் திருச்சி ஜில்லா விலேயே இருந்தது. மேற்படி பீமாசாரிடத்தில் யான் கேட்டது பைரவி ராகத்தில் ''பெத்தமனம் பித்தோ பிள்ளை மனம் கல்லோடி'' என்ற ஸாஹித்யம், சாபுதாளம்.

6. குருமனூங்குடி ஸாமி அய்யர்

மெல்லிய குரலில் ஸ்தாயி சுருதியை வைத்து கொண்டு எளிய நடையில் பாடி ஜனங்களைத் திருப்திப் படுத்தக்கூடியவர். நான் ஐந்தாறு தடவை இவருடைய கானத்தைக் கேட்டிருக் கிறேன். நல்ல ஸாத்வீக சுபாவமுடையவர். ஸ்வர ஞானம் செம்மையாய் அமையப்பெற்றவர். பல்லவி சோமு அய்யர் முதலான வித்வான்களுடன் இவரும் சேர்த்து அநேக இடங் களில் கச்சேரி செய்து பரிசு பெற்றார்.

இவர் காலத்திற்குச் சற்று முன்பின், பல்லவி கோபாலய் யர், சிதம்பரம் கிருஷ்ணய்யர், மிலட்டூர் அருணாசலய்யர் முதலானவர்கள் கர்னாடக சங்கீதத்தில் ஆழ்ந்த ஈடில்லாத ஞானத்துடன் விளங்கினார்கள். இவர்களுக் கெல்லாம் நல்ல சாரீரம் அமையாததால் ஞானத்திற்குத் தக்க கௌரவத்துடன் பிரகாசிக்க முடியாமல் போயிற்று.

7. நாமக்கல் நரஸிம்ம ஐயங்கார்

இவர் ஒரு பிரஸித்திபெற்ற வித்வான். மகா வைத்யநாத அய்யர் காலத்திலேயே ஆங்காங்கு கச்சேரி செய்து புகழ் பெற்ற வர். கர்னாடக பாணியிலும் ஸ்வர ஸஞ்சாரத்திலும் நிச்சய ஞானத்தை வகித்தவர்: அடிக்கடி இவர் ''கேதாரகௌள'' ராகத்தைப் பாடிப் பல்லவி பாடுகிற வழக்கமாதலால் இவருக்குக் கேதாரகௌள நரஸிம்ம அய்யங்கார் என்ற பெயரும் வழங்கிற்று.

இவர் கச்சேரியை நான் முதல் முதலில் தஞ்சை வெண்ணாற்றங்கரையில் ஒரு கல்யாண சமயத்தில் திருக்கோடி காவல் கிருஷ்ணய்யர் பிடில் ஸஹிதம் கேட்டேன். அன்றும் கேதார கௌள ராகம் பாடி, பல்லவி பாடினார். கச்சேரி அழகாகவே யிருந்தது. இவர் விசேஷமாகச் சேலம், திருச்சி, கோயமுத்தூர் முதலான இடங்களிலேயே ரொம்பவும் ஸஞ்சாரம் செய்தவர். இவரைச் சேர்ந்த சில வைஷ்ணவ அபிமானிகள் இவர் கச்சேரியை ஆங்காங்கு சென்று போஷாக்குப் படுத்துவதுடன் இவரைக் காட்டிலும் பிரஸித்தி பெற்ற வித்வான்களுடைய கச்சேரியை இறக்கிப் பேசுகிற வாடிக்கையும் உண்டு.

ஒரு சமயம் இவருடைய கச்சேரியில் இவரைச் சேர்ந்த

கோஷ்டிகள் சேர்ந்து மகா பிரசித்தி பெற்ற அந்தண நல்லூர் சுப்பையர் அவர்களுடைய பாட்டு இவருடைய பாட்டுக்குச் சமம் என்று பேசிக் கொண்டார்கள். அப்பொழுது கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருந்த திருக்கோடிகாவல் பிடில் கிருஷ்ணய்யர் அவர்கள் புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டு ''அய்யங்கார்வாள் பாட்டு உயர்ந்ததுதான். ஆனல், சுப்பையர் பாட்டை இதற்குச் சமம் என்று சொல்வதினல் சுப்பய்யருடைய பாட்டின் கௌரவம் குறைந்து விடும். ஆகையால் அப்படிச் சோல்லாதே யுங்கள்'' என்ருர். ராமனுதபுரம் சமஸ்தான வித்வான் ஸ்ரீநிவாசய்யங்கார் இவரிடத்தில் விசேஷப் பிரியம் வகித்தவர். அடிக்கடி இவர் கச்சேரியை வந்து கேட்பதுண்டு. இவருடைய வயது காலத்தில் ஹரிகேச நல்லூர் ஸ்ரீ முத்தையா பாகவதர் அவர்களால் ஆதரிக்கப்பட்டார்.

8. ஸ்ரீவில்லிபுத்தூர் முத்தையா பாகவதர்

சென்னையில் வித்வான்களுக்கு மிகவும் ஆதரவு அளித்துக் கொண்டு வந்த ஹோட்டல் ஸ்வாமினுத சாஸ்திரிகளின் ஜாகை யில், நான், மிருதங்கம் துகாராமப்பா, தஞ்சை கிருஷ்ண பாக வதர் முதலானவர்கள் சேர்ந்திருக்கும் சமயம், தங்கசாலேத் தெருவில் நடந்த இவருடைய கச்சேரிக்குத் துகாரமப்பா மிரு தங்கத்தை அபேட்சித்தார்கள். அவருடன் கூட நானும் பிடில் வாசிக்கும்படியாய் நேர்ந்தது. அன்றுதான் மேற்படி முத்தையா பாகவதருடைய கச்சேரியை முதன் முதலில் கேட்டது. ''ஹம் ஸத்வனி'' ராகத்தில் வாதாபி கணபதிம் என்று உபக்ரமம் செய்து அதற்கு சுமார் அரைமணி நேரம் ஸ்வரம் பாடினுர். சபையார் இவருடைய ஸ்வர சஞ்சாரத்தைக் கேட்டு மகிழ்ச்சி கொண்டு ஆரவாரித்தார்கள். பிறகு சுமார் நாலு மணி நேரம் கச்சேரி நடந்தது. பக்கவாத்யம் வாசிப்பதில் உயர்வுள்ள மிருதங்கம் துகாராமப்பா இவருடன்கூட ஸ்வரத்திற்குக் கலந்து பின்னி வாசித்தபோது, இரண்டிற்கும் பேதமில்லாமலே இருந்தது.

இவருடைய ஸ்வர ஞானத்துற்கு ஈடான ஞானமுள்ளவர் மிக்க அபூர்வம். இவருடைய நடை உடை ஆரவாரங்களே கண்டு இவரை ஜமீன்தார் என்றும் சொல்வதுண்டு. அநேக பெரிய சமஸ்தானங்களில் விசேஷமாகக் கொண்டாடப்பட்டவர்.

எந்தப் பெரிய சமஸ்தானங்களிலும் எந்த விதமான வித்வத் கோஷ்டியிலும் நிர்ப்பயமாய்த் தன்னுடைய யோக்யதையைப் பிரகடனம் செய்வார். வித்வான்கள் ஸம்பாவனேக்கு ஆங்காங்கு சென்று ஆசைப்படுவது போல் இவர் அதுரராயில்லாமல் தம்மை விசேஷமாய் அபேட்சித்தாலொழிய வெளிச் செல்வதில்லே. கௌரவத்தையே பெரிதாகச் கருதியவர்.

௯. உமையாள்புரம் கிருஷ்ண பாகவதர்; சுந்தர பாகவதர்

இவ்விருவரும் ஸ்ரீ தியாகப்ரும்மதின் நேர் சிஷ்யர்களாகை யால் பிரும்மத்தின் கீர்த்தனங்களே சுத்தமாய்ப் பாடுவதில் இவர் களுக்கீடானவரில்லே. இவர்கள் என்னுடைய ஜாகையிலும், மற்றும் அநேக இடங்களிலும் கச்சேரி செய்து கேட்டிருக்கிறேன். ஜோடியாய்க் கீர்த்தனங்கள் பாடி ஜனங்களே சந்தோஷப்படுத்து வதில் இவர்களுக்கு இணே ஒருவருமில்லே என்றே சொல்லலாம். தவிர கீர்த்தனங்கள் பாடிக் கொண்டு வருவதில் ஒரு கீர்த்தனம் முடிந்தவுடன் அதனுடைய பாவத்தை உபன்யாஸத்தின் மூலம் வெளியிட்டு ஸ்ரீ தியாக ப்ரும்மத்தின் மஹிமையை நினேத்து மனது உருகி இதரர்களேயும் கண்ணீர் விடும்படி செய்வார்கள். இவர்கள் விசேஷ ஸ்வரஞான முள்ளவர்களா யிருந்தாலும் ஸ்ரீ தியாகப்ரும்மத்தின் அபிப்ராயத்தை முன்னிட்டு பல்லவி, ஸ்வரம் பாடாமல் கீர்த்தனம், ராக ஆலாபனே இவைகளாலேயே அபார மாகக் கச்சேரி செய்தார்கள்.

தொன்றுதொட்டு நடந்து வருகிற பிரசித்தி பெற்ற திருவையாற்று ஸ்ரீ சப்த ஸ்தான உத்ஸவத்தில் ஸ்ரீ பிரண தார்த்திஹர ஸ்வாமி பல்லக்கின் பின்னேடு கானம் செய்து கொண்டே ஒவ்வொரு கிராமத்துக்கும் க்ஷேத்திரத்துக்கும் போய் சிரமத்தைப் பாராட்டாமல் கைங்கரியம் செய்தவர்கள். ஒரு வருஷம் மேற்படி உத்ஸவத்தில் நான் மகா வைத்தியனுதய்யர் வீட்டு வாசலில் நின்று கொண்டு பல்லக்கு சேவை செய்தேன். அப்பொழுது பல்லக்கின் பின்னுல் கானம் செய்து கொண்டு வந்த இவ்விருவரும் மகா வைத்தியனுதய்யர் வீட்டு வாசலில் நின்று கொண்டு கானம் செய்ய எத்தனம் செய்தார்கள். அப் பொழுது காலே சுமார் ஆறு மணி இருக்கலாம். இவர்களுடைய கானத்தைக் கேட்க ஐயரவர்களும் தம் வீட்டிலிருந்து வெளியில்

வந்து இவர்களுடன் கூட நின்ருர். சிறிது நேரத்திற்குள் திரள் திரளாக ஜனங்கள் சேர்ந்து விட்டனர். இவ்விருவரும் பிலஹரி ராகத்தைப் பாடி அதில் ''தொரகுனு எடுவண்டி'' என்ற பிரும் மத்தின் கிருதியைப் பாடினுர்கள். சர்வ ஜனங்களும் அந்த கானத்தில் லயித்துப் பரவசமடைந்து ஆனந்தக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்ததுடன் ஐயரவர்களும் தன்னை மறந்து சந்தோஷித்து மெச்சினுர்கள்.

கூடவே நின்று கொண்டிருந்த ''சாந்தசாமி'' என்ற ஒரு பெரிய சன்யாசி மகா வைத்தியனுதய்யரையும் ஒரு கீர்த்தனம் பாடும்படி சொன்னுர். ஐயர்வாள் உடனே அதே பிலஹரியில் ''நாஜீவதாரா'' என்கிற கீர்த்தனத்தைப் பாடி முடித்தார். கிருஷ்ணபாகவதரும் சுந்தர பாகவதரும் பாடிய பிலஹரி கீர்த் தனம் மாதிரி மகா வைத்தியனுதய்யருடைய கீர்த்தனம் அவ் வளவு அமைச்சலாக விழவில்லை. இதைக் கருத்தில் உணர்ந்த அவர் உடனே ''நாஜீவதாரா'' என்ற இடத்திற்கு ஸ்வரம் பாட எத்தனம் செய்தார். இரண்டு ஆவர்த்தம் பாடுவதற்குள் ஜனங்களை பரவசப்படுத்தி விட்டார். அன்று இரவே ஐயரவர்கள் தன் ஜாகையில் சுமார் பத்தாயிரம் ஜனங்கள் மத்தியில் கச்சேரி செய்து எல்லோரையும் பிரமிக்கச் செய்தார்.

எப்பொழுதாவது சில சமயங்களில் ஸ்ரீ தியாகப்ரும்ம சிஷ்யர்களுள் முக்யஸ்தராயும், உயர்ந்த சாரீரத்தை வகித்த வராயும் விளங்கின திருநெய்த்தானம் ஸ்ரீ ராமய்யங்கார் அவர் களும் உமையாள்புரம் கிருஷ்ண பாகவதரும் சேர்ந்து கானம் செய்கிற வாடிக்கையுண்டு. அவ்வமயத்தில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடி ''ராம கிருஷ்ணுள்'' சேர்ந்து கானம் செய் கிருர்கள் என்று சொல்லிக் கொண்டு பரவசமாவார்கள். மேற்படி ராமய்யங்கார் ஸ்வரம் பாடுவதில் சமர்த்தரா யிருந்தாலும், ஸ்ரீ தியாகப்ரும்மம் அவரை ஸ்வரம் பாடுவதால் கீர்த்தனத் தினுடைய பங்கி அழியலாம் என்ற கருத்துடன் ஸ்வரம் பாடக் கூடாது என்று உத்திர விட்டதாகச் சொல்வதுண்டு.

10. திருவிசநல்லூர் நாராயணசாமி அய்யர்

இவர் மகா வைத்யனுதய்யர் காலத்திலும் அதற்குப் பிறகு ரொம்ப காலமும் இருந்தவர். பெரிய வித்வான்கள்

கூட ஸ்வரப்ரஸ்தாரத்தில் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் இவரைக் கலந்து கொள்வதுண்டு. இவருடைய சாரீரம் இவர் ஞானத்திற்குத் தக்கபடி அமையாததால் ஜனங்கள் பிரமிக்கும் கச்சேரீ செய்ய சாத்யப்பட வில்லே. அநேக வித்வான்கள் தாங்கள் பாடுகிற கீர்த்தனங்களுக்கு சிட்டை ஸ்வரம் அபேட்சை யிருந்தால் இவரிடத்தில் ஏற்பாடு செய்து கொண்டு பாடுகிற வழக்கம். இவருடைய கச்சேரியை நான் அடிக்கடி அநேக இடங்களில் கேட்டிருந்தாலும் வேணுகானம் ஸ்ரீ சரப சாஸ்திரிகள் ஜாகையில் மேற்படியாருடைய சீமந்தமுகூர்த்தத் தின்போது திருக்கோடி காவல் கிருஷ்ணய்யர் பிடிலுடனும் பழநி கிருஷ்ணய்யர் கடத்துடனும் கேட்டமாதிரி வேறு ஓரிடத்திலும் கேட்டதில்லே. அன்று அவர் சங்கராபரண ராகம் பாடி ''ஹிருதய கமல வாசஹரே கிருஷ்ண'' என்ற ஆதிதாளப் பல்லவியில் பாடிய ஸ்வரங்கள் வர்ணங்களுக்கு ஏற்பட்ட சிட்ட ஸ்வரங்கள் மாதிரியே ஒவ்வொரு ஆவர்த்தமும் இருந்தது. கட வாத்யத்திற்கென்றே அவதாரம் செய்த பழநி கிருஷ்ணய் யருடைய வாத்யத்தின் பெருமையை அளவிட முடியாது! அன்று இரண்டு கிருஷ்ணய்யர்வாளும் சேர்ந்து நர நாராயணர்கள் போல் விளங்கினுர்கள்.

பூலோகத்தில் வேணு கானத்தின் பெருமையை நிலேநாட்ட வந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அம்சமாகிய ஸ்ரீ சரப சாஸ்திரி கள் அவர்களே நாராயணஸ்வாமி அய்யர் ஸ்வரம் பாடும் விமரிசையில் மயங்கி ரொம்பவும் மெச்சினுர்கள் என்ருல் அதை எவ்வாறு வர்ணிக்க முடியும்? மற்றெரு சமயம் நான் என் இல்லத்தில் நடத்தி வருகிற ஸ்ரீ ராதா கல்யாண உத்ஸவப்ர மயத்தில் ஐயரவர்கள் வேணுகானம் ஸ்ரீ சரப சாஸ்திரிகள் பிடிலுடன் செய்த கச்சேரி ரொம்பவும் உயர்ந்தது. அன்று அவர் பியாகடை ராகத்திற்குப் பாடிய ஸ்வரங்கள் இன்னமும் என் காதை விட்டகலவில்லே. அநேகமாய் இவரும் திருக்கோடி காவல் கிருஷ்ணய்யரவர்களும் சேர்ந்தே கச்சேரி செய்வார்கள்.

11. விசலூர் கிரீசய்யர்

சிவபக்தி வாய்ந்த இவர் கனமுள்ள சாரீரத்தை வகித்து ஸ்தாயி சுருதியை வைத்துக் கொண்டு மேல் பஞ்சமம் வரையில் சுலபமாய்ச் சஞ்சாரம் செய்யக் கூடியவர். கர்னுடக சங்கீத

பாதையை விட்டு விலகாமல் கச்சேரி செய்யக் கூடியவர். சோழ தேசத்திலும் இன்னும் மற்ற ஜில்லாக்களிலுமுள்ள ஜமீன்தார் களிடத்திலும் கச்சேரி செய்து பரிசு பெற்றிருக்கிறுர். இவர் குன்றக்குடி பல்லவி கிருஷ்ணய்யருக்கு சமீப பந்து. இவர் முக்கியமாக ஆரபி, ஸ்ரீராகம், மோகனம் முதலியவைகளுக்கு ஸ்வரம் பாடும் அழகு குறிப்பிடத் தக்கதாகும். சங்கீதத்தைக் கேவலம் திரவியத்தை உத்தேசித்து மாத்திரம் உபயோகப்படுத் தாமல், ஆங்காங்கு சென்று வித்வான்களுடைய ஜாகையில் கலந்து கொண்டு குஷியாய்க் கச்சேரி செய்து காலம் கழித்தவர்.

என் ஜாகையிலும் அநேகம் தடவை வாரக் கணக்காக இருந்து, காலம் நேரம் பார்க்காமல், சங்கீதத்தில் ஈடுபட்டுக் கச்சேரி செய்திருக்கிறுர். வீர சைவராகையால் திருவாசகத்தை மோஹன ராகத்தில் இவர் கையாண்டது போல் ஒருவராலே யும் முடியாது என்பதைத் திண்ணமாமாய்ச் சொல்லலாம். ரொம் பவும் வைதிக சிரத்தை உள்ளவராகையால், ஏகலிங்க சிவபூஜை யில்லாமல் போஜனம் செய்யார். ராக ஆலாபனே விஷயத்தில் வெகு நேரம் வந்த ஸங்கதி வராமல் வின்யாஸப்படுத்திப் பாடுவதில் இவர் மிகவும் நிபுணத்வம் பெற்றவர். கச்சேரியில், ராகம் பல்லவியில் விசேஷ ப்ரஸ்தாரம் ராகத்தில்தான் செய் வார். சிவநேசச் செல்வம் நிறைந்த இவருடைய கிராமத்தில் வருஷந்தோறும் ஆதிரை உத்ஸவம் வெகு விமரிசையாக நடக் கும். அதில் இவர் முகனே வஹித்து அநேக வித்வான்களைத் தருவித்துச் சிறப்பித்து வந்தார். லோபத்தை வகிக்காமல் பந்து சிநேகிதர்களுடன் கூடவே போஜனுதிகள் செய்து கொண்டு எப்பொழுதும் குதூ ஹலமாகப் இருக்க பிரியமுள்ளவர். அநேக இடங்களில் கச்சேரி செய்யும் பொழுது இவர் சம்பாவனே யைப் பெரியதாக நினைத்துத் தப்பு ஸ்தோத்திரங்கள் செய்து பயந்து கொண்டிருக்காமல் நிர்ப்பயமாய் மனச்சாட்சிக்கு விரோத மன்னியில் பேசிப் பரிசு பெறுவார்.

12. விஷ்ணு பாவா

வடதேசமிருந்து ராமச்சந்திர பாவா என்ற பெயருடைய வரும் மஹாராஷ்டிர பாஷையில் ஹரிகதை செய்கிறவருமான ஒரு மகான் தம் குடும்பத்துடன் சேது யாத்திரை நிமித்தம் தஞ்சை வந்து சேர்ந்தார். இவர் கான வித்தையிலும், இதர

பாஷைகளிலும் சிறப்புற்று விளங்கினவர். தஞ்சை அரண்மனையில் அநேக ஹரி கதைகள் செய்து கியாதியுடன் பரிசு பெற்றுக் கடைசியில் துரியாச்ரமத்தை வகித்துத் தஞ்சையிலேயே சித்தி அடைந்தார். மகா பிரசித்தி பெற்ற தஞ்சை மிருதங்கம் நாராயணஸ்வாமி அப்பா அவர்களை மிருதங்கம் வாசிக்கத் தயார் செய்தவர் இவரே. பிரும்ம வித்யா பாரங்கதரான இவரது அனுக்கிரத்தினுலே அப்பாவுக்கு மிருதங்கம் வாசிப்பதில் ஈடில்லாத கியாதி ஏற்பட்டு அதில் அவருக்கு சமானம் ஒருவருமில்லை என்று சொல்லிக் கொள்ளும்படியாய் இருந்தது. இம் மகிமை வாய்ந்த ஸ்ரீ ராமச்சந்திர பாவாவின் குமாரர் தான் விஷ்ணு பாவா என்பவர்.

விஷ்ணு பாவா தம் பிதாவைக் காட்டிலும் வியாபகராய்த் தஞ்சையில் விளங்கி ஹரிகதை செய்து வந்தார். இவருடைய கதைகளை நான் முதன் முதலில் புதுக் கோட்டையில் இவருக்காக அமைக்கப்பட்டிருக்கும் மடத்தில் கேட்டிருக்கிறேன். இவருடைய சாரீரத்தின் மாதுர்யம் அளவிடக் கூடாதது. உயர்ந்த ஸ்தாயி சுருதியை வைத்துக் கொண்டு சுருதியில் இழைந்து நுழைந்து ஸஞ்சாரம் செய்த அழகை வர்ணிக்க இயலாது. ஒரு மகராஷ்டிர பதத்தைக் கர்னுடக சங்கீதத்தில் பல்லவி பாடுவது போல் மணிக்கணக்காய் விஸ்தரித்துப் பாட சக்தி வாய்ந்தவர். வடமொழியில் பண்டிதரான இவருடைய உபன்யாஸம் எல்லோரையும் உருகச் செய்யும். ஸ்ரீராமபிரானிடத்தில் விசேஷ பக்தி கொண்ட இவர் ஸ்ரீராமநவமி யன்று நாலு ஐந்து இடங்களில் ஹரி கதைகள் செய்து சளைக்காமல் ஜனங்களைத் திருப்தி செய்து உபவாஸமிருந்து பகவத் அருளைப் பெற்றவர்.

மகா கியாதி பெற்ற மகா வைத்யனுதய்யர் கூட இவருடைய சங்கீதத்தின் இனிமையையும் சாரீரத்தின் மாதுர்யத்தையும் கண்டு பிரமித்திருக்கிருர். ஒரே இடத்தில் ஐயரவர்கள் கச்சேரியும் அடுத்து இவருடைய ஹரி கதையும் நேர்ந்திருக்கிறது. மகா வைத்யனுதய்யர் வைத்துக் கொண்டு பாடிய சுருதியைக் காட்டிலும் கொஞ்சம் அதிக ஸ்தாயி சுருதியை வைத்துக் கொண்டு கதை செய்வார். அநேக புராண சாஸ்திரங்களில் பரிச்சயமுள்ள இவர் எந்த நிபுணத்தையும் சிரம மன்னியில் கான ரஸத்துடன் கையாண்டவர். இவருடைய ப்ரவசனமானது மஹாராஷ்டிர பாஷையிலிருந்தாலும் மேற்படி பாஷை தெரியாத சாமான்ய ஜனங்கள் கூடக் கவனித்துச் சந்தோஷிக்கும்படியாய் உபன்யாஸம் செய்து வந்தார். தற்காலம் தமிழ் நாட்டு பாகவதர்கள் மிருதங்கம் வாசிப்பவர்களை பெஞ்சியில் வைத்துக் கொண்டு, பின் பாட்டுப் பாடுகிறவர்களை ஜோடி

யாய்ப் பின்னுடி நிறுத்தி நாதம் சிதருமலிருக்கும்படி கதை சொல்கிறுர்களே, இந்தப் பந்தாவை வடதேசமிருந்து வந்த இவர்கள்தான் இத் தேசத்தில் நிலே நாட்டினது. தவிர கர்னுடக சங்கீதத்தில் கச்சேரி செய்கிறவர்கள் கரதாளம் போடும் சம்பிரதாயத்தைக் கதைக்கு அனுசரிக்காமல், ஏகநாத மாய் இருக்கும் பொருட்டு, வெண்கலத் தாளத்தை உபயோகப் படுத்தி எழு அடி உசு முதலானதுகளே முதலில் ஏற்படுத்தியவர் கள் இவர்கள்தான். ஏற்கனவே தமிழ் நாட்டுக் கதாகார்கள் கூட்டமாய் அநேக பின் பாடகர்களே ஏராளமான ஜாலர் ஜோடிகளுடன், வைத்துக் கொண்டு சுநாதத்தை கெடுத்துக் கதை செய்து வந்த பிரகாரமில்லாமல் மேற் கண்ட பந்தாவைக் கச்சிதமாக உண்டாக்கியவர்களும் இவர்கள்தான். இந்த மார்க்கத்தை முதலில் அனுசரித்து சீர்திருத்தத்துடன் கதையை அழகாய்த் தமிழ் பாஷையில் செய்தவர் தஞ்சை ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் அவர்களே.

13. தஞ்சை கிருஷ்ண பாகவதர்

கிருஷ்ண பாகவதர் அவர்களுக்கு பால்யத்திலேயே சங்கீத வித்தையில் ருசி ஏற்பட்டது. தஞ்சையில் வசித்த அநேக வித்வான்களுடைய பரிச்சயத்தினுல் பிடில், மிருதங்கம், சொர கத்து முதலான வாத்யங்களே வாசித்து வந்தார். அதிலிருந்து நல்ல ஸ்வர ஞானமும் ஏற்பட்டது. பிறகு ஸ்ரீ தியாகப்பிரும்ம கீர்த்தனங்களேச் சொல்லிக்கொள்ள ஆவல் ஏற்பட்டு திருவை யாற்றுக்குச் சமீபமுள்ள திருநெய்த்தானத்தில் வசித்த ப்ரும்மத் தின் முக்ய சிஷ்யரான ராம அய்யங்கார் அவர்களிடத்தில் சில கீர்த்தனங்களேயும் சொல்லிக்கொண்டார். தஞ்சையில் இருந்த பாவாக்களிடத்தில் கதைகளே அடிக்கடி கேட்டு கர்னுடக சங்கீதத்தைத் தவிர வடதேச சம்பிரதாயத்தையும் தெரிந்து கொண்டார். இந்த இரண்டு மார்க்கமும் இவருக்குச் செம்மை யாய் மனதில் பதிந்தபடியால், இவர் மேற்படி இரண்டு மார்க் கத்தையும் கலந்து கதை செய்ய எத்தனம் செய்தார். வட மொழியில் விசேஷ ஞானம் இவருக்கில்லாமல் இருந்தாலும், மஹாராஷ்ட்ரம், தெலுங்கு, இந்துஸ்தானி முதலான பாஷை களில் விசேஷப் பரிச்சய மிருந்தபடியால் வடமொழியின் குறைச் சலேக் காட்டாமலே ஸம்ஸ்க்ருத பண்டிதர் மாதிரியே கதை செய்வார். இவருடைய காலக்ஷேபங்கள் மிக மேன்மை பெற் றிருந்தன. ஏனென்றுல் இவர் செய்யும் கதைகளில் பாவங்

களையும் ரஸங்களையும் பூர்ணமாக, தத்வத்தாக வெளிக்காட்டி ஜனங்களை ரஸிக்க செய்வார். ஜனங்கள் கதைகளைக் கேட்கும் போது அவர்களுக்குச் சரித்திரங்கள் நேரில் நடைபெறுவது போல் தோன்றுமே தவிர உபன்யாஸமாகத் தோன்ருது. ஆகையால் பண்டித பாமரர்கள் எல்லோரும் அவருடைய கதையில் ஈடுபட்டார்கள்.

கிருஷ்ண பாகவதருக்குப் பரத சாஸ்திரத்திலும் நல்ல பரிச்சயம் உண்டு. கதை செய்யும்பொழுது எப்பொழுதாவது ஒரு பிரமேயத்தில் தாளத்திற்கு ஏற்பட்ட ஐந்து ஜாதிகளையும் நர்த்தனம் செய்து சபையை அல்லோலகல்லோலப் படுத்து வார். சபையில் நின்று கதை செய்வதற்கு லாயக்குள்ள சுந்தர புருஷராகையால் இவர் செய்கிற ஒவ்வொரு அபிநயமும் பொருத்தமுள்ளதாகவே யிருக்கும். விசேஷ உயர்ந்த சாரீரத்தை உடையவரா யில்லாமலிருந்தாலும் மகா வைத்யனு தய்யர் முதலானவர்கள்கூட சந்தோஷப்படும்படி தன்னுடைய ஞானபலத்தால் சாரீரத்தில் பெரிசு, சிறுசு, கன, நயம் கொடுத்துப் பாடுவார்.

இவருடைய சுருதி ஞானத்தின் பெருமை விசேஷமானது. சுருதியை விட்டு அகலாமல் உபந்யாசம் செய்ததோடுகூட, தன்னிடமிருந்த கால் கஜ்ஜைகள், தாளங்கள், முதலியவற்றைக் கூட சற்றேறக் குறைய ஒரே சுருதியிருக்கும்படி அமைத்து வைத்திருந்தார். அநேக பெரிய இடங்களில் போய்க் கதை செய்து சம்பாவனை பெற்றிருந்தாலும், இவர் புதுக் கோட்டை சமஸ்தானத்தில் சர்வ பாஷைகளிலும் பாரங்கதராயிருந்த ஸ்ரீராமசந்திர மகாராஜா அவர்கள் முன்னிலையில் அநேகக் கதை கள் செய்து மேற்படி மகாராஜா அவர்களால் கொண்டாடப் பட்டவர். இவரும் விஷ்ணு பாவாவும், மேற்படி மகாராஜா அவர்கள் முன்னிலையில் மாறிமாறிக் கதைகள் செய்து பரிசு பெற்ருர்கள். இவர் ஞானத்திற்குத் தகுந்தாற்போல் பின் பாடகர்கள் இவருக்கு அமைந்தது குறிப்பிடத் தக்கதாகும். பஞ்சாபகேச பாகவதர் என்றும் மருதப்பா என்றும் பெயருடைய இரண்டு பெரிய வித்வான்கள் இவருக்கு ஸாதகர் களாகக் கதையில் பாடும்பொழுது, மூன்று பேருடைய பாட்டும் ஒன்று சேர்ந்து ஒருவர் பாடுவதுபோல் தோன்றுமே தவிர வித்தியாசமே தெரியாது.

ஒரு சமயம் மன்னர்குடியில் பிரக்கியாதி அடைந்த பிரம்மஸ்ரீ பருத்தியூர் கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் வால்மீகி ராமா யணத்தை உபன்யாஸம் செய்து கொண்டிருந்தார். இவரை

வால்மீகி அம்சம் என்று சொல்லுவதுண்டு. தஞ்சை கிருஷ்ண பாகவதர் ஒரு பிரமேயத்தை ஒட்டி இச்சமயத்தில் அங்கு கதை செய்வதற்கு வந்திருந்தார். அப்பொழுது எல்லோரும் சேர்ந்து கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களை சபா நாயகராகச் செய்தார்கள். பாகவதர் அவர்களை சீதா கல்யாணம் செய்ய வேணுமென்று எல்லோரும் கேட்டுக் கொள்ள அவர் அவ் விதமே செய்தார். கதை முடிந்தவுடன் கதையில் ஈடு பட்டிருந்த கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் தன்னை மறந்து ஒரு வார்த்தை சொன்னார். ''ஓய் பாகவதரே! நானும் சீதா கல்யாணத்தை உபன்யாஸம் செய்துகொண்டு வருகிறேன். ஆனால் நீர் இக் கல்யாணத்தை மிதிலையில் நடந்தது போலவே நடத்திக் காண்பித்து விட்டீர்!'' என்றார். இதிலிருந்து இவருடைய கதையின் பெருமை எவ்வளவு என்பதை நன்கு தெரிந்து கொள்ளலாம்

நானும் பாகவதரும் சேர்ந்து சென்னையிலும் நாட்டுக் கோட்டைப் பக்கங்களிலும் அநேக பிரமேயங்களில் கதைகள் செய்திருக்கிறோம். அவருடைய கதையை அடிக்கடி நான் கேட்டதினால்தான் கதை செய்ய வேண்டிய பத்ததி என் மனதிற்குச் செம்மையாய் விளங்கிற்று. திருவிசநல்லூர் அக்ரஹாரத்தில் விளங்கும் ஸ்ரீ அய்யாவாள் மடத்தில் வெகு வருஷங்களாய் நடந்து வருகிற ஸ்ரீ அய்யாவாள் உத்ஸவத்தில் இவர் முக்கியஸ்தராக இருந்து கதை செய்து வட மொழியிலும் கான வித்தையிலும் சிறப்புற்றோங்கின வித்வான்களால் மெச்சப்பட்டார். மேற்படி ஊரில் மஹாமஹோபாத்யாய பட்டம் பெற்று ஈடில்லாத கியாதியுடன் விளங்கின பிரும்மஸ்ரீ ராமசுப்பா சாஸ்திரிகள்கூட இவர் கதையில் சந்தோஷித்தார் என்றால் வேறு அத்தாட்சியும் வேண்டுமோ? ஆனால் இவருடைய உபன்யாஸத்தில் ஒரு விசேஷம் சொல்வ துண்டு. அதாவது ஒரு நிரூபணத்தில் சொல்ல வேண்டிய வார்த்தைகளையும் சங்கீத உருப்படிகளையும் எவ்வளவு அழகாக ரஸனை செய்து சொன்னால் ஜனங்களுக்கு ருசிக்குமோ அதைச் சிட்டையாய்த் தயார் செய்து வைத்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்வதுண்டு. அப்படியிருந்த போதிலும் எவ்வளவு ஆவர்த்தி ஒரே கதையை அவரிடம் கேட்டாலும் ருசி கொஞ்சம்கூட மாறாமல் அதி கரித்துக் கொண்டேதான் இருக்கும்.

14. கும்பகோணம் நடேச தீக்ஷிதர்

அத்வைத சாஸ்திரத்தில் நிச்சய ஞானத்தை வகித்த பிரும்மஸ்ரீ கும்பகோணம் தியாகராஜ தீக்ஷிதருடைய குமாரர் இவர். ஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதரவர்கள் சாஸ்திரங்களில் நல்ல பரிச்சயமுள்ளவர். நடராஜ பக்தியில் லயித்து இவர் கும்பகோணத்தில் சிற்சபை என்று ஒரு கட்டிடம் கட்டி அதில் ஸ்ரீ நடராஜ மூர்த்தியை ஆராதித்தவர். இவர் சுயமாகவே சம்ஸ்கிருத பாஷையிலும் தெலுங்கிலும் அநேக நிரூபணங்கள் கவனம் செய்து பிரகடனம் செய்திருக்கிறுர். இப்பவும் அவர் செய்த நிரூபணங்களின் கற்பனுபதங்கள் மற்றெருவருடைய சாஹித்யத்தில் இல்லை என்று சொல்லலாம்.

இவருடைய குமாரரான நடேச தீக்ஷிதர் இவரைக் காட்டிலும் மராட்டி, இந்துஸ்தானி முதலான பாஷைகளில் பரிச்சயம் ஏற்பட்டு, பிதாவைப் போலவே தானும் நிரூபணங் கள் கவனம் செய்து அழகாகக் கதை செய்து வந்தார். இவர் உபன்யாசங்களைத் தமிழில் செய்தாலும், மராட்டியிலும் தெலுங்கிலும் யாராவது இவரை உபன்யாஸம் செய்ய வேணு மென்று அபேட்சித்தால் அம்மாதிரி செய்து காட்டு வார். விசேஷமாய் ஸ்ரீ தியாகப் பிரும்ம கீர்த்தனங்களை இவர் கையாண்டு நான் கேட்டதில்லை. ஸ்வர கத்து முதலான வாத்தியங்களைக் கையாண்டு வந்தபடியால் இவருக்கு நல்ல ஸ்வரஞானமிருந்தது. வைஷ்ணவ சம்பந்தமான சரித்திரங்களைக் காட்டிலும் இவர் பிதாவினுலும் இவராலும் செய்யப்பட்ட சைவ நிரூபணங்களைச் செய்வதில் நைபுண்யம் பெற்றவர்.

தஞ்சை அரண்மனையில் முதல் முதலில் கோலாப்பூரிலிருந்து வந்து மராட்டி பாஷையில் டிராமாக்கள் நடத்தின செட்டைப் பார்த்து இவர் தமிழ் நாட்டிலும் அதே மாதிரி ஒரு டிராமா செட் தயார் செய்ய வேணுமென்று ஆவல் கொண்டு, அதற்குத் தக்க ஆக்டர்களைப் பொறுக்கி, வேணுமென்கிற கிருதிகளையும் கவனம் செய்து அபார வைபவத்துடன் நடத்தினார். அதில் கியாதி அடைந்தவர்களின் பெயர்கள் இன்றுவரை அழியாமல் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. ஸி.எஸ். கல்யாணராமய் யர், கோனேரிராவ், ராக்ஷஸ பார்ட் ராமஸ்வாமி அய்யர் முதலானேர் இவரால் தாயரிக்கப் பட்டவர்களே.

இவர் வம்ச பரம்பரையில் ஆயுர்வேத வைத்தியத்தில் கியாதி அடைந்தவராகையால் அரண்மனை வைத்தியராகவு

மிருந்தார். இவர் ஜாகையில் அடிக்கடி அநேக வித்வான்கள் கூடித் தமாஷாய்க் கச்சேரிகள் செய்வது உண்டு. கதைகளில் இவர் பாவா மாதிரி மராட்டிப் பதங்களை வின்யாஸப் படுத்திப் பாடுவதில் சமர்த்தர். ஒரு சமயம் இவருடைய கதை என் ஜாகையில் வேணுகானம் சரப சாஸ்திரிகள் பிடில் பக்க வாத்தியமாகக் கொண்டு நடைபெற்றது. அன்று, இவர் வெகு அழகாக ''பார்வதி கல்யாணம்'' என்ற நிரூபணத்தைச் செய்தார். சாஸ்திரியார் தீக்ஷிதரவர்களுடைய கதையை ரொம்பவும் கொண்டாடிப் போற்றிப் பேசினர்.

15. திருநெய்த்தானம் நரஸிம்ம பாகவதர்

இவர் பால்யத்தில் மெலட்டூரில் ஸ்கூல் மாஸ்டராக இருந்து பிறகு கதைத் தொழிலில் கியாதியை அடைந்தார். இவருக்கு வடமொழியில் நல்ல பாண்டித்தியம் உண்டு. ஸ்ரீ தியாகப் பிரும்மம் கீர்த்தனங்களில் சுமார் நானூறுக்கு மேல் பத்ததி தவருமல் பாடுவார். மேற்படி கீர்த்தனங்களைச் சாகித்தியத்துடன் அச்சிட்டு வெளியிட்டு மிருக்கிறுர். இவர் தஞ்சை ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் காலத்தில் சமமாகக் கதை செய்து வந்தார். விசேஷக் கற்பனையுடன் வடமொழியில் அதிகமாக பிரயோகங்களை அடிக்கடி செய்து புஞ்சமாய்க் கதை செய்வார். சைவவைஷ்ணவ நிரூபணங்களில் சமஞானம் வகித்து இதிஹாஸ புராண சம்மதத்தோடு கதை செய்து ஜனங்களைத் திருப்திசெய்து வைப்பார். தெலுங்கிலும் நல்ல ஞானமும் மராட்டியில் கொஞ்ச ஞானமும் உண்டு. விசேஷ ஸ்வரக்ஞானம் உள்ளவரென்று சொல்ல முடியாது. திருநெய்த்தானம் ராமய்யங்காரிடத்திலும், தன் சகோதரர் பஞ்சு பாகவதர் மூலமும் பிரும்மத்தின் கீர்த்தனங்களைச் சுத்தமாய் அப்யசித்தவர்.

இவருக்கு ஸ்ரீகோவிந்தபுரம் அதிஷ்டானத்தில் தேஜோமயமாய் விளங்கும் ஸ்ரீ போதேந்த்ராளிடத்திலும், திருவிசநல்லூரில் பிரகாசித்த ஸ்ரீதர அய்யாவாளிடத்திலும் விசேஷ பக்தி உண்டு. இந்த இருவருடைய சரித்திரங்களையும் தமிழில் அச்சிட்டுப் பிரசுரம் செய்திருக்கிறுர். ஸ்ரீ வெங்கடேசார்யாள் என்கிற ஐயர் வாளுடைய கிரந்தத்தையும் தீர்த்த நாராயண ஸ்வாமிகளுடைய கிருஷ்ண லீலா தரங்கிணியையும் ஜெயதேவருடைய அஷ்டபதியையும் அச்சிட்டு வெளியிட்டு இருக்கிறுர்.

மற்றெரு முக்கியமான விஷயம். வெகு வருஷங்களாக அச்சிடப்படாமல் பெரியோர்கள் முகமாய்ப் பாடி வந்த பஜனை உத்சவ சம்பிரதாய பத்ததியை பெரியோர்களால் அங்கீகரிக்கப் பட்ட மார்க்கம் தவருமல் இவர் சுத்தமாய் அச்சிட்டு வெளி யிட்டிருப்பது ஸ்ரீராம நவமி, கோகுலாஷ்டமி முதலிய பண்டிகை களின் போது மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கிறது. மிகவும் வைதிக சிரத்தையுடன் உஞ்சவிருத்தி முதலானதுகள் செய்து சுகமாய்க் காலம் கழித்து வந்தார். ராகங்களை விஸ்தரித்துப் பாடா விட்டாலும் பிரும்மத்தின் கீர்த்தனங்களைப் பெரிய வித்வான்கள் பிரமிக்கும்படி பாடுவார். இவருக்கு அநேக பெரிய வித்வான்களுடைய சிநேக மிருந்தது. ஒரு சமயம் சோலையப்பன் தெருவில் இவருடைய கானத்திற்கு வேடிக்கை யாக சரப சாஸ்திரிகள் அவர்கள் பக்க வாத்யமாகப் புல்லாங் குழல் வாசித்து வெகு ஜனங்கள் கேட்டு ஆனந்தித்தார்கள். இதிலிருந்து வேணுகான திலகரான சரப சாஸ்திரிகளுடைய சௌலப்ய குணத்தைச் செம்மையாக அறிந்து கொள்ளலாம்.

16. சிவராமகிருஷ்ணய்யர் (பிடில்) திருவையாறு

ஸ்ரீ தியாகப்ரும்மத்தின் சிஷ்யரான சுப்பராம பாகவதர் அவர்களின் குமாரர் இவர். சுப்பராம பாகவதர் அவர்களுக்கு உயர்ந்த ஸ்வரக்ஞானம் உண்டு. ஸ்ரீ தியாகப்ரும்மத்தின் கீர்த்தனங்களுக்கு ஏற்பட்டிருக்கிற சிட்ட ஸ்வரங்களெல்லாம் அநேகமாய் இவரால்தான் இயற்றப்பட்டது. இவர் இவருடைய குமாரரான சிவராமகிருஷ்ணய்யரைப் பிடில் வாசிக்கும்படி தயார் செய்தார். சிவராமகிருஷ்ணய்யர் வாசிப்பில் ஒரு விசேஷக் கவர்ச்சி என்னவென்றல், ராகம் பல்லவியில் உயர்ந்த பரிக்ஞானமிருந்தாலும், அதில் அதிகமாய்க் கவனத்தைச் செலுத் தாமல், ஸ்ரீ தியாகப்ரும்ம கீர்த்தனங்களைப் பரிசுத்தமாய் வாசிக்க வேணுமென்கிற ஆவலுடன் ப்ரும்மத்தின் கீர்த்தனங் களின் ஒவ்வொரு ஸங்கதியையும் தன் கையில் சுத்தமாய்ப் படிகிற பரியந்தம் நாள் கணக்காகச் சாதகம் செய்து, பெரிய பெரிய முரட்டுக் கீர்த்தனங்களை வாய்ப்பாட்டைக் காட்டிலும் விமரிசையாய் விளங்கும்படி வாசித்து வந்ததுதான். திருவையாறு சப்தஸ்தான உத்ஸவத்தில் ஸ்ரீ ப்ரும்மத்தின் சிஷ்யர்கள், ப்ரணதார்த்திஹர ஸ்வாமி பல்லக்குடன் கானம் செய்து வரும்

பொழுது, இவரும் கூடவே இருந்து வாசித்துவந்ததை நான் கேட்டு ஆனந்தித்திருக்கிறேன். இவருடைய வாத்தியத்தின் நாதமானது சேர்த்தாற்போல் இரண்டு மூன்று பேர்கள் பாடினாலும், அதற்கு மேல் நோக்கி காம்பீர்யமுள்ளதாகவே இருக்கும்.

இன்னமும் ஸ்ரீ தியாகப்ரும்மத்தின் கீர்த்தனங்களை வாத்தியத்தில் வாசிப்பதில் இவருக்கு ஈடானவரில்லை என்று சொல்லிக் கொள்கிறார்கள். இவர் மாதிரி வாசிக்கச் சில சிஷ்யர்களை திருவையாற்றில் தயார் செய்தார். அவர்களில் அந்தகராய் விளங்கின திருவாதி கிருஷ்ணய்யர் ஒருவர். குருவினுடைய ஞாபகத்தைத் தான் வாசிக்கும்போது ஊட்டக்கூடிய சக்தியைப் பெற்றிருந்தார்.

17. மணமேல்குடி வெங்கடாசல பாகவதர்

பிராசீன கர்னாடகத்தை அனுசரித்துக் கதை செய்தவர்களில் இவர் ஒருவர். ஸ்ரீ ராமாயணம், பாகவதம் முதலான கிரந்தங்களில் விசேஷ பரிச்சயம் உடையவர். அக் கதைகளை ஜனங்களுக்குப் போதகம் செய்வார். இவருக்கும் சங்கீதத்தில் பரிக்ஞானம் குறைவுதான். தக்க உபசாதகர்களை வைத்துக் கொண்டிருந்தார். முக்கியமாய் மதுரை சேஷ பாகவதர் என்பவர் இவருடன் கூட இருந்து சிறப்பித்தார். வடமொழியைப் பிரதானமாக வைத்துக் கொண்டு பாகவத ச்லோகங்களை அடிக்கடி சரமாரியாகப் பொழிந்து கலந்து பிரவசனம் செய்வார். இவருக்கு ஏராளமான கூட்டங்கள் கூடி வெகு நேரம் இவருடைய உபன்யாஸங்களைக் கேட்டுச் சந்தோஷப் படுவதுண்டு. வைதிகத்தில் சிரத்தை வகித்து அனுஷ்டானமாய்த் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு அன்னமிட்டு பக்திமானாகக் காலம் கழிந்து வந்தார். சுமார் ஆறு மணி நேரத்திற்குக் குறைந்து கதை செய்கிற வழக்கமில்லை. இவர் காலத்தில் மிகவும் பிரசித்தியுடன் விளங்கியவர் நெம்மேலி வைத்யநாத பாகவதர் என்ற பெரியவர்; வடமொழியில் வேதாந்த ஞானத்தோடு கூட அநேக சரித்திரங்களைக் கையாண்டு பிரசித்தியுடன் கதை செய்து வந்தார். ஆதிச்சபுரம் முஹூர்சிங்

சீதாராமய்யர், வைத்யனதய்யர் முதலானவர்கள் இருவடைய ஆசீர்வாதத்தினல் மிக்க கியாதியுடன் விளங்கி வந்தார்கள்.

18. அண்டமீன் சிவராம பாகவதர்

தஞ்சை கிருஷ்ண பாகவதர் — நரசிம்ம பாகவதர் இவர்களின் காலத்தில், ஹரி கதைகள் செய்து வந்தவர்களில் அண்டமீன் சிவராம பாகவதர் ஒருவர். இவருக்கு விசேஷ சங்கீத ஞான மில்லாமலிருந்தாலும் பிரவசன விஷயத்தில் சற்றேறக் குறைய முதன்மை ஸ்தானத்தை வகித்தவர். எங்கள் ஊரிலும், சென்னை முதலான இடங்களிலும், இவருடைய கதையை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். பின் பாடகர்களாலேயும், முகர்சிங்கு, கடம் முதலான பக்க வாத்தியங்களாலேயும் தன்னுடைய பிரவசனத்தைப் பிரகாசிக்கும்படி செய்து தொழிலைச் சிறப்பித்து வந்தார். மிருதங்கம் முதலான பக்க வாத்தியங்களைப் பெஞ்சியில் வைத்துக் கொள்ளாமல் பிராசீன சம்பிரதாயத்தை அனுசரித்துக் கதை செய்தவர். தமிழிலும் தெலுங்கிலும் சமஸ்கிருத பாஷையிலும் இவருக்கு நல்ல ஞான மிருந்தபடியால், இவர் பிரவசனத்தில் ஜனங்களுக்கு விசேஷக் கவர்ச்சி இருந்தது. இவருக்கு நேத்திரங்கள் இரண்டும் தெரியாமலிருந்தாலும், கண் தெரிந்தவர் மாதிரி ஞானக் கண்களால் சபையினுடைய இங்கிதத்தைத் தெரிந்து கொண்டு அதற்குத் தக்கபடி பேசுவார். பக்தி ரஸம் வரும் காலத்தில் ஜனங்களை உருகும்படி செய்வர். திருவாய் மொழியில் கொஞ்சம் பரிச்சயம் உண்டு. இவர் சங்கீதத்தை உபக்கிரமம் செய்து விட்டு அநேகமாய்ப்பின் பாடகர்களையே விஸ்தரித்துப் பாடும்படி செய்து விடுவார். ஆனல் இவர் கானம் செய்யாத குறை குறையாகத் தோன்றுது. ராகம், கீர்த்தனம் முதலியவைகள் செம்மையாய்ப் பாடக் கூடியவர்களைத் தமக்குப்பின் பாடகர்களாக வைத்துக் கொண்டிருந்தார்.

19. திருகோகர்ணம் (பிடில்) நாராயணஸ்வாமி ஐயர்

இவர் வெகு இடங்களில் சென்று அநேக வித்வான்களுக்குப் பக்க வாத்யம் வெகு அழகாக வாசித்து கியாதியை அடைந்தவர்.

இவர் ஜனன பூமியான புதுக்கோட்டை சமஸ்தானத்தில் மிக்க பிரக்யாதியுடன் விளங்கி வந்தார். அநேக இடங்களில் வெகு வித்வான்களுக்கு இவர் பக்க வாத்யம் வாசித்துக் கொண்டு வந்தாலும் ஒரு சமயம் புதுக் கோட்டை சமஸ்தானத்தில் ஜாகீர்தார் அவர்களுடைய சின்ன அரண்மனையில் மகா வைத்யனாதய்யர் அவர்களுடன்கூட, கல்யாணி ராகத்தை எல்லோரும் பிரமிக்கும்படி வாசித்து, அவராலேயே கொண்டாடப் பட்டது குறிப்பிடத் தக்கது. இவர் விரல் நுனிகளால் தந்திகளைத் தொடும் காலத்தில் உண்டாகிற நாதமானது அதிமாதுர்யமாகயிருக்கும்.

வடதேசமிருந்து முதன் முதலில் தென் தேசத்திற்குப் பிரசுரம் செய்யப்பட்ட ஹார்மோனிய வாத்யத்தை வடதேசத்துப் பாணியுடனும் கர்னுடகத்துடனும் அக்காலத்தில் அழகாக வாசித்தார். கீர்த்தனங்களை வாசிப்பதைக் காட்டிலும், ராகம் பல்லவியில்தான் விசேஷ தேர்ச்சியைப் பெற்றவர். இவருடைய முன்னேர்களும் இவரைச் சார்ந்த பந்துக்களும், சங்கீத சாஸ்திரத்தில் விசேஷ ஆராய்ச்சி செய்து நைபுண்யம் பெற்றுக் கச்சேரி செய்யக்கூடிய திறமை உள்ளவர்களாய் இருந்து வந்தார்கள். ஸங்கீத வித்வான்களைப் போஷாக்குப் பண்ணிப் பக்க வாத்யம் வாசிப்பதில் இவர் மிகவும் கைதேர்ந்தவர். ஆகையால் அநேக பிரமுக வித்வான்கள் இவரையே பக்க வாத்யத்திற்கு அபேக்ஷிபிப்பதுண்டு. இவர் கேவலம் சுத்த கர்னுடகமாக வாசிக்காமல் கொஞ்சம் நவீனத்தைக் கலந்து வாசித்து வந்ததினுல் ஜனங்களுக்கு விசேஷ பிரமை இவரிடமிருந்து வந்தது. தன் சம்பந்தப்பட்டவரையில் சுகியாயிருந்து காலம் கழிந்து வந்தவர்.

20. சேஷய்யர் (பிடில்)

இவர் தன்னுடைய சகோதரி புருஷரான பட்டணம் சுப்ரமணிய அய்யர் அவர்களைத் தவிர வேறு ஒருவருக்கும் பக்க வாத்யம் வாசித்ததில்லை. சுப்ரமணிய அய்யர் அவர்கள் ராகம், தானம், கீர்த்தனம் இவைகளைத் தான் பாடுகிறமாதிரியே இவரை வாசிக்கும்படி தயார் செய்து கச்சேரிக்கு அமைத்துக் கொண்டார். ஆகையால் இவருடைய வாத்யத்தை ஐயரவர்களுடைய பாட்டு என்றே சொல்லலாம். முக்கியமாய் தானம் பாடுவதில் நிகரில்லாத கியாதியை அடைந்த சுப்ரமணிய அய்யர்

அவர்களின் தான ஸங்கதிகளை இவர் வாத்யத்தில் கேட்கும் பொழுது சுப்ரமணிய அய்யர் கூட பிரமிக்கும் படியாயிருக்கும்.

விசேஷமாய் சுப்ரமணிய அய்யர் அவர்களைத் தவிர மற்ற வர்களுக்கு இவர் பக்கவாத்யம் வாசிக்காததினால் ஜனங்கள் அடிக்கடி இவரைக் கேட்க அவகாசமில்லாமல் போனதுடன், எங்கும் இவருடைய கியாதி நிரம்புவதற்கு இடமில்லாமல் போயிற்று.

21. பதினைந்து மண்டபம் சாம்பசிவய்யர் (பிடில்)

இவர் ஒரு பெரிய சங்கீத வித்வத் வம்சத்தில் பிறந்தவர். பெரிய வித்வான்களுடைய பழக்கம் இவருக்கு நிரம்ப உண்டு. அண்ணாமலை சங்கீத சர்வகலாசாலை தலைமை லெக்சரராக யிருந்த சங்கீத வித்வான் சபேசய்யருடைய தகப்பனார் இவர். இவர் கர்னாடக சங்கீதத்தில் திறமை வாய்ந்தவரே. விசேஷமாய் இவரை மகா வைத்யனாதய்யர் அவர்கள் தமது கச்சேரிக்கு அபேக்ஷிக்கிற வாடிக்கையுண்டு. எங்கள் ஊரிலும் இன்னும் அநேக இடங்களிலும் சிவன்வாள் கச்சேரியில் இவர் வாத்யத்தை நான் கேட்டிருக்கிறேன். சிவன்வாளுடைய கச்சேரிக்கு அதிக பழக்கத்தினால் ரொம்பவும் ஒத்துமையாக வாசிப்பார். வைதீக சிரத்தையுடன் ஐயரவர்களின் நோக்கப்படி நடந்து சுலபராய், கியாதியுடன் விளங்கினார். சிவன் அவர்கள் இவருக்கு சமீப பந்து, இவர் காலத்தில், திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் வாளுக்குச் சற்றேறக்குறையச் சமமான யோக்யதையுடனும் கியாதியுடனும் விளங்கின சீர்காழி நாராயணஸ்வாமிப் பிள்ளையைப் பற்றி இங்கு குறிப்பிட வேண்டியதவசியம். அநேக மகா ஜனங்களுடைய அபிப்ராயம் இவருடைய வாசிப்பின் உயர்வு கிருஷ்ணய்யர்வாளைக் காட்டிலும் ஒரு டிகிரி கூட என்பதே. பிடில் வாத்யத்தின் தந்திகளில் இவர் கமான் போடுகிற அழகும், தாள ஞானமும் ரொம்பவும் உயர்ந்தது என்று எல்லோரும் சொல்கிற வழக்கமுண்டு. செவிகளுக்கு இவருடைய வாத்ய த்வனியின் இனிமை ரொம்பவும் இன்பத்தைத் தரும். இவருடைய வாத்யத்தை நான் இரண்டொரு தடவை தான் கேட்டிருக்கிறேன். இவரிடத்தில் நெருங்கிப் பழகியதில்லை.

22. டோலக் நன்னுமிய்யா

டோலக் என்கிற வாத்யத்தை வாசிப்பதில் இப்பரத கண்டத்தில் தனக்கு நிகர் ஒருவருமில்லை என்ற பெயரையும் கியாதியையும் பெற்று விளங்கினவர் இந்த நன்னுமிய்யா. இவர் மகம்மதிய வகுப்பைச் சேர்ந்தவர். இவரோடு கூட சகபாடியாய் இவருடைய வாத்யத்திற்கு அடிக்கடி கானம் செய்து கொண்டு, இதே மரபில் சோட் மிய்யா என்ற ஒருவர் இருந்தார். இவ்விருவரும் புதுக் கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள். ராமச்சந்திர மஹாராஜா அவர்களால் அரண்மனை வித்வான்களாக ஆதரிக்கப் பட்டு வந்தவர்கள். இவர்களை ஜோடியாக ''நன்னு, சோட்டு'' என்று சொல்வதுண்டு.

நன்னுமிய்யாவின் வாத்யத்தின் பெருமையைப் பேசுங்கால், கந்தர்வர்களும் பிரமித்துச் சந்தோஷப்பட்டிருக்கத்தான் வேண்டும். இவருடைய வாத்யத்தைப் பட்டணம் சுப்ரமணிய அய்யர் அவர்களுடனும் இன்னும் இதர இடங்களிலும் கேட்டிருக்கிறேன். எவ்வளவு உயர்ந்த சாரீரத்தை வகித்து, எந்த விதமான துர காலத்தில் ஒரு வித்வான் பாடினாலும், அந்தக் காலத்திற்கு மூன்றாம் காலத்தில் வாத்யத்தில் வாசித்து நிரூபிக்க கூடியவர் இவர் ஒருவரே. சாமான்ய வித்வான்களுக்குகூட இவர் பக்கவாத்யம் வாசித்தால், அந்த கானத்தை இவர் ரொம்பவும் போஷாக்குச் செய்து உயர்ந்ததாய் இருக்கும்படி செய்துவிடுவார். வாத்யத்தில் ''பரன்'' வாசிக்கக்கூடிய மார்க்கத்தை ஏற்படுத்தி, அதில் ஈடில்லாத புகழை அடைந்தவர். தீர்மானங்கள் வைக்கும் பொழுது ''பரன்''களில் வந்த புரட்டல் அடிக்கடி வராமல் புதிது புதிதாய் விசேஷ கற்பனையோடு, மிருதங்கள் வாசிப்பவர்களை அலறும்படியாய், செய்வார். இந்த வாத்யத்தின் நாதத்திற்கு அனுகுணமாய் வலது கை ஒரு விரலில் சலங்கைகளை மாட்டிக்கொண்டு வாத்யத்தை இவர் வாசிக்கும் பொழுது உண்டாகிற நாதபிரும்ம ஆனந்தத்திற்கு பிரும்மானந்தமும் ஈடாகாது.

வாத்யத்தில் ''டேகா'' கொடுக்க வேணுமென்கிற மார்க்கமானது நன்னுமிய்யா வாத்யத்திலிருந்துதான் வெளிப்பட்டது. இவர் வாத்யத்தில் வாசிக்கிற ''பரனை'' அம்மாதிரியே தானும் வாசிக்க வேணுமென்று மிருதங்கம் தஞ்சை நாராயணஸ்வாமி அப்பா அவர்கள் எவ்வளவு செய்தும் அம்மாதிரி வாசிக்க சாத்யப் படவில்லை என்றால், ''நன்னு''வின் வாத்யம் எப்பேர்ப்பட்டது என்பதை நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

23. துகாரமப்பா (தஞ்சை) மிருதங்கம்

தஞ்சைமா நகரில் விளங்கின பிரசித்திபெற்ற மிருதங்க வித்வான் இவர். பால்ய முதல் அசாத்தியமாக அசுர சாதகம் செய்து உயர்ந்த யோக்யதையை அடைந்தவர். வருஷத்துக்கு ஒரு முறை எந்த விதமான சிரமம் இருந்தாலும் பண்டரிபுரம் போய்ப் பாண்டுரங்கனைத் தரிசனம் செய்து வருவது என்ற விரதத்துடனிருந்த ''விட்டல்'' என்கிற ஒரு மகானுடைய குமாரர் இவர். இவருடைய பிதாவின் அனுக்கிரஹம்தான் இவர் அடைந்த கியாதிக்கும் யோக்யதைக்கும் காரணம். பாட்டிற்கும் வீணை முதலான வாத்தியங்களுக்கும், ஒற்றுமையாய் வாசித்துத் தம்மையும் கச்சேரி செய்கிறவர்களையும் கனப்படுத்துவதில் இவருக்குச் சமானம் இவரே. இவரைக் காட்டிலும் ஞானத்தில் மட்டமானவர்கள் கச்சேரி செய்தாலும், அவரை இவருடைய வாத்திய ஒத்தாசையினால் உயர்ந்த ஞானஸ்தர் மாதிரி செய்து விடுவார்.

மகாவைத்தியனாதய்யர் முதல் ரொம்பவும் சாமான்யமாய்க் கச்சேரி செய்கிறவர்கள் பரியந்தம் உள்ள வித்வான்கள் இவரைப் பக்க வாத்தியமாக அடைவதில் ரொம்பவும் பிரியப்படுவார்கள். ஏனென்றால் வித்வான்களுக்கு இடைஞ்சலில்லாமல் பாட்டை வெகு போஷாக்குப் பண்ணி தாமும் பெயரை வாங்கக் கூடியவர். தவிர இவர் வாத்யத்தின் தொப்பியில் ''குமுகி'' பேசின நாதத் திற்குச் சமானமாய் மற்றவர்கள் எவ்வளவு சாதகம் செய்தும் இவரைப்போல் வாசிக்க முடியவில்லை. அத்துடன் இவர் தம்முடைய இடது கையைத் தொப்பியில் வைத்துக் ''கும்காரம்'' கொடுப்பதற்கு முன்னும் பின்னும் தள்ளும் போதும், இழுக்கும் போதும், பரிபூர்ண நாதம் உண்டாகி ஜனங்களை பிரமிக்கச் செய்யும். ஏனென்றால் ''கும்கார''த்திற்குக் கையை முன் தள்ளி நாதம் உண்டாக்குவது சகஜம். இழுக்கும் போது நாதம் உண்டாக்குவது என்பது ரொம்பவும் துர்லபம். மிருதங்கத்தில் வலந்தரை என்ன சுருதியோ அதற்குக் கீழ் பஞ்சமமாவது அல்லது மந்தரமாவது தொப்பி யிருக்க வேண்டிய மர்மத்தைச் செம்மை யாய்த் தெரிந்த இவர் அவ்விதமே செய்து கொண்டு வாசிப்பார். வாசித்துக்கொண்டு வருங்காலத்தில் மிருதங்கத்தினுடைய சுருதி யாவது சற்று ஏறக்குறையக் பிசகினால், அதற்காக மெனக்கட்டு மிருதங்கத்தைப் பாட்டின் மத்தியில் சுருதி பண்ணிக் கச்சேரியைக் கெடுக்காமல், இவர் தொப்பி, வலந்தரையினுடைய பலத்தினால் பிக்கட்டு இல்லாமல் வாசித்து விடுவார்.

வடதேசத்து பாவா ஸம்பிரதாயப்படி கதை செய்கிறவர்களுடைய மஹாராஷ்ட்ர தாட்டிகளுக்கு இவர் வாசித்த தினுசும், கர்னாடக வித்வான்கள் கச்சேரிகளுக்கு வாசித்த தினுசும் தனித் தனியாய்ச் சம்பிரதாயத்தை அனுசரித்து விளங்கும். இவருக்குத் தனி ஆவர்த்தம் கொடுத்தால், அதை வெகு சுருக்கமாய் வாசித்து அதற்குள் ஜனங்களை மோகிக்கச் செய்துவிடுவார். இவருடைய வாத்தியத்தைப் பக்க வாத்தியமாக அடைகிற விஷயத்தில், மகா வைத்தியனாதய்யர் அவர்களும், பட்டணம் சுப்ரமணிய ஐயரவர்களும் எல்லையில்லாத திருப்தியும் மகிழ்ச்சியும் அடைவார்கள்.

இவருடைய வாத்தியத்தைக் கேட்டுத்தான் மிருதங்கம் தக்ஷிணாமூர்த்திப்பிள்ளை, அழகநம்பியாப் பிள்ளை முதலான பெரிய வித்வான்கள் இவருடைய மார்க்கத்தை அனுசரித்து விசேஷ கியாதியை அடைந்தார்கள். இவரைத் தொப்பி துகாரமப்பா என்று சொல்வதுண்டு. நாராயண ஸ்வாமி அப்பா அவர்களுக்கும் இவருக்கும் தாரதம்யம் பேசுங்கால், மகா வைத்தியனாதய்யர் அவர்களுக்கும் பட்டணம் சுப்ரமணிய ஐயரவர்களுக்கும் என்ன தாரதம்யம் சொல்லலாமோ அதைத்தான் கூற வேண்டும்.

24. திருக்கோடி காவல் கிருஷ்ணய்யர் (பிடில்)

மகாவைத்தியனாதய்யர் காலத்திலும் சற்றுப் பின்னும் இருந்து பிடில் வாத்யத்தில் உயர்ந்த கௌரவத்தை அடைந்தவர். இவருடைய ஞானத் திறமைச் சற்றேறக்குறைய மகாவைத்யனாதய்யர் யோக்யதைக்கு ஸமாகவே சொல்லலாம். ஏனென்றால் ஐயரவர்கள் எந்த துரகாலத்தில் பாடினாலும் அவர்களுடன் சமாளித்துச் சமமாகவே வாசித்தார். இவருடைய சங்கீத ஞானத்தின் ஆழத்தைக் கண்டு பிடிப்பது ரொம்பவும் சிரமம். இவருடைய கச்சேரியை நான் அநேக தடவை கேட்டிருக்கிறேன். எனக்கு முக்கியமாய் வேண்டியவராகையால் என்னிடத்தில் விசேஷப் பிரியம் வகித்து என் ஜாகைக்கு அடிக்கடி கச்சேரி செய்ய வந்திருக்கிறார். இவரைப் பக்கவாத்தியமாக வைத்துக்கொண்டு லட்சியமில்லாமல் பாடக்கூடியவர் மகாவைத்யனாதய்யர் முதலான சிலரே. ஆகையால் இவர் பக்கவாத்தியத்தை வைத்துக் கொள்ளும்

வித்வான்கள் பயத்தால் தங்கள் நிஜயோக்யதையில் பாதிதான் வெளிப்படுத்தும்படி நேரிட்டுப் பார்த்திருக்கிறேன்.

ஒரு சமயம் திருப்பாப்புலியூரில் உத்ஸவ சந்தர்ப்பத்தில் கிருஷ்ணய்யரவர்களும் கர்நாடக சங்கீதத்தில் அஸகாய சூரராய் விளங்கின எட்டியாபுரம் ராமச்சந்திரய்யரவர்களும் சேர்ந்து கச்சேரி செய்தார்கள். நானும் கூடவே இருந்து இந்தக் கச்சேரியைக் கேட்கும்படி நேர்ந்தது. அன்று ராமச்சந்திரய்யர் அவர்கள் ''நாதநாமக்ரியை'' ராகம் பாடி ''எங்கும் நிறைந்தநாத நாமகிருபாநிதே'' என்ற பல்லவியையும் பாடினார். ஐயரவர்கள் எவ்வளவு அழகாய்ப் பாடினாலும் கிருஷ்ணய்யர் அவர்கள் கூட வாசித்ததால் அவருடைய யோக்யதை முழுவதையும் வெளியில் பிரகடனப்படுத்த முடியவில்லை. இதனாலேயே அனேக வித்வான்கள் இவருடைய பக்க வாத்தியத்தை வெறுப்பதுண்டு. இவருடைய வாத்தியத்தை மகாவைத்தியனாதய்யருடன் மூன்று தடவையும் வேணுகானம் சரபசாஸ்திரிகளுடன்கூட அநேகம் தடவைகளும் கேட்டிருக்கிறேன். இந்த இரண்டு பேர்களுடைய கச்சேரியில்தான் இவருடைய வாத்தியம் மேல் ஓங்காமல் சமமாக இருந்து கச்சேரி நடைபெறும்.

ஒரு சமயம் சென்னையில் தங்கசாலைத் தெருவிலிருந்த புனர்வசு சபாவில் இவருடைய வாத்தியத்தை வேணுகானம் சரப சாஸ்திரிகளுடனும், சேதுராம ராவ் மிருதங்கம்—உமையாள்புரம் நாராயணய்யர் கடத்துடனும் கேட்டேன். அன்று ஒரு விசேஷ சம்பவம் நடந்தது. வழக்கப்படி கீர்த்தனங்கள் ஜோடியாய் வாசித்த பிறகு சாஸ்திரிகள் அவர்கள் காம்போஜி ராகத்தை உபக்ரமம் செய்து ஐந்து நிமிஷம் வாசித்துக் கிருஷ்ணய்யரவர்களிடம் விட்டார். கிருஷ்ணய்யர்வாள் வாசிக்க ஆரம்பம் செய்தவுடன் பிடில் வாத்யத்தில் சர்வ சாதாரணமாய் வாசிக்கக்கூடிய மத்யம காலத்தை ஆதாரமாய் வகித்து ஜனங்கள் கரகோஷம் அடிக்கடி செய்யும்படி செய்து அபாரமாய் வாசித்து விட்டார். இதைக் கேட்டு ஆனந்தித்துக் கொண்டிருந்த சாஸ்திரிகள் அவர்கள், இனி அதிகமாய் ராகம் வாசிப்பதில் பிரயோஜனமில்லை என்று நினைத்து உடனே பல்லவி வாசிக்க எத்தனம் செய்து விட்டார். ஐந்து நிமிஷம் அல்லது பத்து நிமிஷத்திற்குள் வீராவேசத்துடன் சாஸ்திரிகள் அவர்கள் வாசித்துக் கிருஷ்ணய்யர்வாளைப் பிரமிக்கச் செய்து ஜனங்களை ஆஹாகாரப்படுத்தி ஆவர்த்தத்துக்கு ஆவர்த்தம் கரகோஷத்தைப் பெற்றார். பிறகு இரண்டு மணி நேரம் கச்சேரி நடந்தது. இருவருக்கும் தாரதம்யமில்லாமல் இருப்பதைப் பார்த்து ஜனங்கள் சந்தோஷித்தார்கள்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் கும்பகோணத்தில் சாஸ்திரிவாளும் கிருஷ்ணய்யரவர்களும் சேர்ந்து கச்சேரி நடக்கும்பொழுது கல்யாணி ராகம் வாசித்தார்கள். அதில் ப்ரதிமத்யம ஸ்தானத்தில் ராகத்தை இருவர்களும் மாறி மாறி விஸ்தரித்து வாசித்துக் கொண்டு வரும்பொழுது கிருஷ்ணய்யர்வாள் ரொம்பவும் குதூஹலத்துடன் வாசிக்க, சாஸ்திரிகள் கிருஷ்ணய்யரைப் பார்த்து ''இந்த ப்ரதிமத்யமம்'' தங்களுக்குத்தான் சொந்தமானது என்று சொல்லி மெச்சினார் என்றால் கிருஷ்ணய்யர்வாள் வாசிப்பைப் பற்றி நான் என்ன கூற முடியும்? கிருஷ்ணய்யர் பக்க வாத்யமாக அமைந்து விட்டால், சங்கீத சக்கரவர்த்தியாய் விளங்கின சரபசாஸ்திரிகளும் ரொம்ப சிரமத்தை வஹித்துத்தான் தன் கௌரவத்தை நிலை நாட்டுவார். இதிலிருந்து ஐயரவர்களுடைய வாத்தியத்தின் பெருமை எவ்வளவு என்பதை நன்கு உணர்ந்து கொள்ளலாம். பக்க வாத்தியமாக வாசித்துக் கியாதி அடைவதைக் காட்டிலும் தனியாகக் கச்சேரி செய்து ஜனங்களை ரஞ்சிக்கச் செய்வதில் ரொம்பவும் சமர்த்தர். மிருதங்கம் கூட இல்லாமல் தனியாகப் பிடிலை வாசித்துச் சபையைச் சந்தோஷிக்கச் செய்யும் சக்தி வாய்ந்தவர்.

புதுக்கோட்டை மகாராஜா அவர்கள் காலேஜில் இவர் கச்சேரி, மகாராஜா பிறந்ததினக் கொண்டாட்டத்தைக் குறித்து தக்ஷிணாமூர்த்தி பிள்ளை மிருதங்கத்துடன் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. கச்சேரிக்குக் குறிப்பிட்ட மணிப் பிரகாரம் சரியாய் இரவு 9 மணிக்குக் கிருஷ்ணய்யர்வாள் வந்து விட்டார். சற்று முன்னாடியே மகாராஜா சகோதரர் ரீஜண்ட் ஸாஹேப் அவர்களும் ஜட்ஜுகள் முதலான பெரிய உத்யோகஸ்தர்களும் கூடியிருந்தார்கள். குறிப்பிட்ட நேரத்தில் ஸ்ரீமான் தக்ஷிணாமூர்த்தி பிள்ளை அவர்கள் வரவில்லை. கிருஷ்ணய்யர்வாள் தனியாகவே தம்பூருடன் பிடிலை சுருதி செய்து கொண்டு கச்சேரி செய்ய ஆரம்பித்து விட்டார்.

அன்று சாயங்காலம் நானும் ஒரு கதை செய்ய வேண்டியிருந்ததால் அதை முடித்து விட்டு இவர் கச்சேரிக்கு வந்தேன். மந்திரத் தந்தியில் வில்லைப் போட்டுக்கொண்டு அத்துடன் தன்னுடைய கன சாரீரத்தையும் அமைத்து சங்கராபரண ராகத்தில் ''மஹிமதெலிய தரமா'' என்ற பல்லவியைப் பாடினார். சபையோர்கள் நிச்சப்தமாய்க் கேட்டு மெய்மறக்கலானார்கள். எவ்வித ஒத்தாசையுமின்றி ஏக சூரராய் விளங்கக் கூடியவர் என்பது இதனால் தெளிவாற்று. இவ்வளவு கியாதியுடன் விளங்கினதற்குக் காரணம் இவருடைய ஆழ்ந்த ஞானத்தோடுகூட

வாத்தியத்தில் இடைவிடாமல் சாதகம் செய்ததேயாகும். ஒரே தினத்தில் அநேக இடங்களில் கச்சேரி செய்துவிட்டு வீடு வந்து சேர்ந்தவுடன் போஜனத்தை முடித்துக்கொண்டு சிரமத்தைப் பாராட்டாமல் உடனே பிடிலை வைத்துக்கொண்டு சாதகம் செய்ய எத்தனம் செய்வார்.

ஒரு உத்ஸவத்திற்குத் திருக்கோடி காவலில் நான் கதை செய்யும்படி நேரிட்டது. அன்று அவர் மிக்க பிரியத்துடன் என் கதைக்கு வந்து முற்றிலுமிருந்து கௌரவப்படுத்திச் சந்தோஷித்தார். கதை முடியும் பொழுது இரவு சுமார் 12 மணியிருக்கலாம். என்னை அவர் ஜாகைக்கு வரவேணுமென்று அபேட்சித்தபடியால் என் போஜனத்தை முடித்துக்கொண்டு சுமார் 2 மணிக்கு அவர் ஜாகைக்குச் சென்றேன். உடனே அவர் தன் வாத்யத்தை எடுத்துக் கொண்டு வாசிக்கலானார். சூரியோதய பரியந்தம் இடைவிடாமல் வாசித்து என்னை மிகவும் பிரமிக்கும்படி செய்து விட்டார். விடாமுயற்சியுடன் ஸதா சர்வகாலமும் நாதப்பிரும்மத்தில் மனதை ஈடுபடுத்தி மற்ற சுகங்களைக் கருதாமல் ஸாதகம் செய்து காலம் கழித்து வந்தார். ஸ்ரீ தியாகப்பிரும்ம கீர்த்தனங்களில் விசேஷப் பரிச்சியமுள்ளவராகையால் இவர் ராகம் வாசிக்கும் காலத்தில் ஸ்ரீ ப்ரம்மம் கீர்த்தனங்களில் சஞ்சாரித்திருக்கிற ராக பாவங்கள் தோன்றி ராகத்தின் உயர்ந்த பாணியை வெளிப்படுத்தும். இவ்வளவு யோக்யதை உள்ள இவர் குதூகலத்துடன் தன் ஊர் கிராம முனிசீப் வேலையை வகித்துப் பார்த்து வந்தார்.

25. நாராயணசாமி அப்பா (தஞ்சை) மிருதங்கம்

இவர் ஆதியில் சர்க்கார் உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்து பிறகு மிருதங்க வாத்தியத்தில் அபார கியாதியை அடைந்தவர். மிருதங்கம் வாசிக்கிறவர்களுக்கு உயர்ந்த கௌரவத்தைக் கொடுக்கும்படியான மார்க்கத்தை இவர் காட்டியவர். மிருதங்கம் வாசிப்பதில் இவர் அடைந்த கியாதிக்குக் காரணம் நல்ல சாரீரத்துடன் இவருக்கிருந்த உயர்ந்த சங்கீத ஞானம்தான். மிருதங்க வாத்தியத்திலிருந்து எவ்வளவு சுநாதங்கள் ஏற்படுமோ, அந்த மர்மத்தைத் தெரிந்து வெளிப்படுத்தியவர். தாள ஞான விஷயத்தில் இவருடைய லட்சண ஞானத்தைக் காட்டிலும் லட்சிய ஞானம்தான் ரொம்ப உயர்வு. அக்காலத்தில் லட்சண ஞானத்

தோடு விளங்கின அநேக வித்வான்கள் இவர் வாசிப்பில் திகில் அடைந்திருந்தார்கள். மிருதங்கத்தில் மீட்டு என்றும், சாப்பு என்றும், தொப்பிநாதமென்றும் சொல்லப்படுகிற நாத வித்தியாசத்தைத் தனித்தனியாய்ச் செம்மையாய் நிரூபித்துக் காண்பிப்பதுடன், இந்த மூன்று நாதங்களைச் சேர்த்து ஜனங்களை ரஞ்சிக்கச் செய்த சக்தியில் இவருக்குச் சமமான மற்றொருவரைச் சொல்ல முடியாது.

பரத சாஸ்திர வித்வான்கள் தொனிப்பிக்கிற ஜதிமார்க்கங்கள் இவர் கையில் வெகுசுலபமாய்ப் பேசும். இவர் தொப்பியில் மா வைத்து உபயோகப்படுத்தி வலது பக்கத்தைச் சேர்த்துச் சாப்புக் கொடுத்தால் அந்த நாதமானது ஜனங்களுக்குப் பிரணவ நாதமாகவே தோன்றும். இவர் மிருதங்கத்தை வாசிக்கும் காலத்தில் சரீரத்தில் எந்த அவயவத்திலும் சேஷ்டை இல்லாமல், இவருடைய விரல்களைப் பார்த்து மிருதங்கம் வாசிக்கிறார் என்று தெரிந்து கொண்டாலொழிய, சாமான்யமாய் உட்கார்ந்து கொண்டிருக்கிற மாதிரியே தோன்றும். எவ்வளவு பெரிய வித்வான்கள் எந்தக் காலத்தில் பாடினாலும் அக் காலத்திற்கு மூன்று கலாத்தையும் நிர்ணயமாக அமைத்து நாதத்தைக் கவர்ந்து கொண்டே வாசிப்பார். ‘பரன்’ முதலானதுகளைப் புரட்டும் காலத்தில் அதிலிருந்து சாப்பு நாதம் மாதிரி சுநாதமானது உள்ளிருந்து கவர்ந்துகொண்டே வந்து கொண்டிருக்கும்.

இவர் தன் வாத்தியமானது தனக்கு வாசிப்பதற்கு லாயக்குள்ளதா யிருக்கிறதென்று தெரிந்தாலொழிய எந்த வித பிரதி ப்ரயோஜனத்தை உத்தேசித்தும் வேறு எந்தவித வாத்தியத்திலும் வாசிக்கிறதே இல்லை. தவிர வித்வான்களுக்கு வாசிக்கும் முன்னமே அவர்களுடைய சுருதியைத் தெரிந்துகொண்டு அதற்குத் தக்க வாத்தியத்தைக் கொண்டு வருவார். கொண்டு வந்த பிறகு கச்சேரி செய்கிற வித்வான், வாத்தியத்தின் சுருதி கூடக் குறைச்சலாக இருக்கிறதென்று சொன்னால் அவருக்குத் தக்கபடி இவர் மிருதங்கத்தை சுருதி செய்யமாட்டார். தான் கொண்டு வந்திருக்கும் மிருதங்க சுருதிக்குக் கச்சேரி செய்ய வேண்டுமென்று சொல்லிச் செய்யச் சொல்வார். ஏனென்றால் மிருதங்கத்தை ஒரு சுருதியில் தயார் செய்ய வேண்டியிருந்தால், அந்த ‘சுருதி’ செய்கிற வேலையை, மிருதங்கம் கட்டித் தயார் செய்கிற ஜாதியரைக் கொண்டே செய்கிற வாடிக்கையே தவிர தன் கையால் சுருதி சேர்க்கிற வாடிக்கையே கிடையாது. அநேக சுருதிகளுக்குத்தக்கபடி வாத்தியங்கள் இவரிடம் ஏராளமாயிருந்தபடியால் இவர் தொழிலைச் சிரமமன்னியில் நடத்தும்படி ஏற்பட்டது. ஒரு சமயம் என் ஜாகையில் உத்ஸவப் பிரமேயத்தில் என்னுடைய

கதைக்கு இவரை வாசிக்க வேணுமென்று கேட்டுக் கொண்டேன். என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி வாத்யம் சகிதம் வந்திருந்தார். ஆனால் அவர் கொண்டு வந்த வாத்தியத்தின் சுருதியானது என்னுடைய சுருதிக்கு ஒரு ஸ்வரம் கம்மியாக யிருந்தது. ''கொஞ்சம் மிருதங்கத்தை ஏற்ற வேணும், அப்பா!'' என்று நான் கேட்டுக் கொள்ள அவர் ''சாத்யப்படாது'' என்று தெரிவிக்க, கடைசியில் அவர் கொண்டு வந்த மிருதங்கச் சுருதி யிலேயே நான் கதை செய்தேன்.

தன்னுடைய யோக்யதையை அனுசரித்துத் தனக்கு எவ் வளவு பெருமை வகிக்க வேணு மென்று தோணுகிறதோ அதற்குப் பதின்மடங்கு வகித்துக் காலம் கழித்து வந்தார். இவர் தன் னுடைய ஜாகையில் பிரதி சனிக்கிழமைதோறும், ஒரு பஜனை மகோத்ஸவம் நடத்தி வந்தார். இந்த பஜனையின் விமரிசையைச் சுருக்கிச் சொல்லின், இவர் ஸ்ரீ ராமபிரானிடத்தில் வைத்திருக்கிற அன்பு மேலிட்டு விசேஷ செலவுடன் செய்து வந்தார். இந்த பஜனையில் இவரே மிருதங்கம் வாசித்துக் கொண்டு கானம் செய்ததானது, சர்வ ஜனங்களையும் ரஞ்சிக்கச் செய்யும். கட்டி டத்திற்கு வெளியிலிருந்து கேட்கிறவர்களுக்கு, ஒருவர் பாடுகிறாப் போலேயும் மற்றொருவர் மிருதங்கம் வாசிக்கிறாப் போலேயும் தோன்றும். வட தேசத்துப் பாவாக்கள் செய்த பஜனையை இது அனுசரித்தது. ஆகையால் அநேக ஜமீன்தார்கள் பிரபுக்கள் இவர் ஜாகைக்கு வந்து பஜனையைக் கேட்டு ஆனந்திப்பார்கள். வித்வான்கள் இந்த பஜனையில் பாட ஆசைப்படுவதுண்டு. சிலர் பஜனையின் சுநாதத்தைக் கண்டு பிரமித்துப் பாடாமலே பயந்து போவதுமுண்டு. ராமனாதபுரம் சமஸ்தானத்தில் ஜமீன்தாராக விளங்கின பாண்டித்துரை அவர்கள் இந்த பஜனையைக் கேட்டு ஈடுபட்டு இதற்காக அநேக வருஷ காலம் லௌகிக ஒத்தாசையும் செய்து வந்தார். அப்பா அவர்கள் காயகர்களுக்கு வாசிப்பதைக் காட்டிலும் வாத்தியங்களுக்கு வாசிப்பது மிக்க ஆச்சர்யகர மானது. தந்திவாத்தியங்களின் பெருமையைக் கெடுக்காமல், அந்த வாத்திய நாதத்திற்குள் மிருதங்க நாதத்தை நுழைத்து வாசிப்பது இவரைப்போல் மற்றொருவருக்கும் சாத்தியபடாது என்றே சொல்லலாம்.

பெரிய சங்கீத வித்வான்களுக்கு ஏற்பட்டிருந்த கௌர வத்தைக் காட்டிலும் அதிக கௌரவத்தை இவர் அடைந்து தக்க மனிதர்களால் கொண்டாடப்பட்டார். இவருடைய இரு நேத் திரங்களுக்கும் சிகிச்சை செய்ய வேண்டியிருந்தபோது, மகா கியாதிவானான ஹைகோர்ட் ஜட்ஜு மணி ஐயரவர்கள் இவரைச்

சென்னையில் தம் ஜாகையிலேயே வைத்துக் கொண்டு அபார உபாசரணைகள் செய்து தக்க வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்து அனுப்பினார்.

26. மாயூரம் வீணை வைத்யநாதய்யர்

இவர் இந்த வாத்தியத்தைப் பிராசீன சம்பிரதாயப்படி கையாண்டு வந்தவர். அக்காலத்தில் இந்த வாத்தியத்தை இந்தப் பிராந்தியத்தில் இவரைத் தவிர வேறு ஒருவரும் விசேஷமாகக் கையாளததினால் இவருக்கு வீணை வைத்யநாதய்யர் என்ற நாமதேயம் உண்டாயிற்று.

கர்நாடக லக்ஷண ஞானத்தில் மிகவும் ஆழ்ந்த திறமை வாய்ந்தவர். மகாவைத்ய நாதய்யர் முதலான பெரிய வித்வான் களுடன் பழகிச் சற்றேறக் குறைய சமமான கவுரவத்தை அடைந்து வந்தார். சில பிராசீன கர்னாடக வர்ணங்களையும் கிருதிகளையும் வீணையில் வாசிப்பதில் மிகவும் நைபுண்யம் பெற்றிருந்தார். இவருக்கு வைராக்ய நிதியான கோபால கிருஷ்ண பாரதி அவர்கள் முக்கிய சிநேகிதர். மேற்படியாருடைய கவி களை வீணையில் உபயோகப் படுத்துவதில் இவருக்கு நிரம்பவும் அபிலாஷை உண்டு. திருக்கோடிகாவல் பிடில் கிருஷ்ணய்யரவர் களும் இவரும் சேர்ந்து ஜோடியாய் வாசிக்கும் பொழுது இரண்டும் ஒரே ஏகநாதமாய் விளங்கி ஜனங்களை ரஞ்சிக்கச் செய்யும்.

இவர் திருவாவடுதுரை ஆதீனத்தில் விசேஷ ஆதரவை அடைந்து கௌரவமாகக் காலம் கழித்தார். அந்த ஆதீனத்திற்கு முக்கியஸ்தரான வைணீக வித்வான். புதுக்கோட்டை சமஸ்தான திவானாக இருந்த காலஞ் சென்ற கணபதி சாஸ்திரிகள் அவர் களுடைய பிரதாமஹர் திருவாலங்காடு தியாகராஜ தீக்ஷிதர் இவ ருக்கு முக்கிய சிநேகிதராகையால் அடிக்கடி ஆதீனத்திற்கு சேர்ந்தாப்போல் வந்து ஜோடியாய்க் கச்சேரி செய்வதுண்டு. வீணையோடு சேர்ந்தாப்போல் இவர் பாடுவதும் உண்டு.

ஆனால் சாரீரம் அவ்வளவு உயர்ந்தது அல்ல. தாளப் பிரஸ்தாரத்திலும், விவகார விஷயத்திலும் கை தேர்ந்தவர். தனக்குச் சரியானபடி சாரீரம் இல்லாததினால் தன் முழு யோக்கியதையையும் பிரகடனப்படுத்த சாத்தியப்படவில்லை என் பதை உணர்ந்த இவர் தன் குமாரன் வீணை சபேசனை அஸகாய சூரனாகத் தயார் செய்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

27. உமையாள்புரம் நாராயண ஐயர் (கடம்)

கட வாத்யம் என்ன? அதை எப்படி உபயோகப்படுத்து கிறார்கள்? அது எவ்வளவு பரியந்தம் சங்கீதக் கச்சேரிகளுக்கு உபயோகமுள்ளது, என்பவைகளை இவர் மூலமாய்த்தான் நான் தெரிந்து கொண்டேன். இந்த வாத்யத்தை இவருக்குமுன் யார் கையாண்டு வந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. பட்டணம் சுப்ரமணிய ஐயர் அவர்கள், திருக்கோடிகாவல் கிருஷ்ண ஐயர் முதலானவர்களின் கச்சேரியில் இவர் வாத்தியத்தை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். எப்படி மிருதங்கத்தில் வலந்தரை, தொப்பி என்று இரண்டு நாதங்கள் ஏற்பட்டிருக்கிணறதோ அவ்விதம் இவர் இரண்டு நாதங்களையும் இந்தக் கடவாத்யத்தில் காட்டி உயர்வாக வாசித்ததினால் இதுவும் மிருதங்கம்போல் ஒரு அவசிய மான வாத்தியம்தான் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

இவர் உயர்ந்த சங்கீத ஞானமுடையவ ராகையால் இவர் கச்சேரிகளை போஷாக்கு செய்து வாசிப்பது குறிப்பிடத் தக்க தாகும். இதனாலேயே வித்வான்களும் இவர் வாத்தியத்தை விரும்புவதுண்டு. இந்த வாத்தியத்தில் மிருதங்கம் அப்பா, முதலானவர்கள் போல் மூன்று காலத்தையும் நிர்ணயமாகக் காட்டி ''பரன்'' முதலானதுகளோடு கூட வெளிப்படுத்தி ஜனங்களால் பெரிதும் புகழப்பட்டவர். எந்த உருப்படிகளுக்கும் சமகாலத்தை அமைத்துக் கொண்டு, மிருதங்கத்தின் 'டேகா' மாதிரி இவர் வாசித்துக்கொண்டு வருவது மிகவும் மெச்சத் தகுந்தது. தற்காலம் மிருதங்க வித்வான்களாக விளங்கும் ஸ்ரீ கோதண்டராமய்யர், ஸ்ரீ கணேசய்யர் இவ்விருவர்களுடைய பிதா இவர்.

28. ஜகன் மோஹன சித் விலாச ஸபா

கும்பகோணத்தில், தமிழ் தேசத்தில் நாடகத்தை வெளிப் படுத்துவதற்கு யத்தனம் செய்து, அதற்கு வேணுமென்கிற தக்க மனிதர்களைப் பொறுக்கி எடுத்து, முதன் முதலில் நாடகத்தை வெளியிட்டவர் பிரும்மஸ்ரீ நடேச தீக்ஷிதர் அவர்களே யாவர். இவர் தஞ்சை அரண்மனை வைத்தியரும் வித்வானுமா யிருந்தபடி யால், ஒரு சமயம், கோலாப்பூரிலிருந்து வந்து தஞ்சை அரண்

மனையில் நடத்தின மஹாராஷ்டிர டிராமாவைப் பார்க்கும்படி நேர்ந்தது. அதில் இவர் மிகவும் ஈடுபட்டுத் தாமும் தமிழ் தேசத்தில், அம்மாதிரி ஒரு டிராமா ஸெட் தயார் செய்து நடத்த வேண்டுமென்ற பேரவாவுடன் முயற்சிசெய்து அதன் பிரகாரம் நடத்தின மகா புருஷர். அவர் ஆரம்பித்த இந்த சித்விலாஸ சபாவைக் கல்வியில் சிறந்தவர்களும், கானத்தில் சிறந்தவர்களும், அலட்சியமாய் உபன்யாஸம் செய்யச் சக்தி வாய்ந்தவர்களும் சேர்ந்து மிகவும் பரிமளிக்கச் செய்தார்கள்.

இன்னும் அழியாத பெயருடன் விளங்குகிற எஸ். கல்யாண ராம ஐயர் அவர்கள் (ஸ்திரீ பார்ட்), கோனேரி ராவ் அவர்கள் (ராஜபார்ட்), ராக்ஷஸ பார்ட்டில் மகா கியாதி அடைந்த ராம ஸ்வாமி ஐயர் அவர்கள், உடாணி வைரம் போல் சாரீரத்தை வகித்துத் தேனைக் காட்டிலும் ருசியுடன் பாடிய தேப்பெருமா நல்லூர் வைத்தியனாதய்யர் அவர்கள் எல்லோரும் சேர்ந்து இந்த சபாவில் உழைத்து எல்லையில்லாப் புகழை அடைந்தார் கள்.

அந்த நாளில் ஸ்ரீ கல்யாணராம ஐயர் அவர்களால் நாட கத்திற் கென்று எழுதப்பட்ட ‘ஸ்ரீராமாயணம்’ ‘சாகுந்தலம்’ முதலான சரித்திரங்களின் வசனங்கள் பல கம்பெனியார்களால் இன்றும் கையாளப்பட்டு மிக்க அழகாக விளங்கி வருகின்றன. ஸ்திரீ ஜாதியாய்ப் பிறந்தவர்கள் கூட சி. எஸ். கல்யாணராம ஐயர் அவர்கள் நடிப்பதுபோல, ஸ்திரீகளின் பாவாபிநயங்களை நிரூபணம் செய்ய முடியவே முடியாது. ஒரு சமயம் பரிக்ஷார்த்த மாகத் திண்டுக்கல்லில் பகலிலேயே இவர் வேஷம் தரித்து வெளியில் சஞ்சாரம் செய்தார். ஆனால் ஒருவராலேயும், இவர் வேஷதாரி என்று கூற முடியவில்லை என்றால், இவர் நடிப்பின் திறமை எவ்வளவு உயர்ந்தது என்பதை நன்கு ஊகிக்க கலாம். சமீப காலத்தில் ஸ்திரீ பார்ட்டில் புகழுடன் விளங்கிய கே. எஸ். அனந்தநாராயணய்யர் அவர்களிடத்தில் கல்யாணராம ஐயர் அவர்களுடைய ஞாபகத்தை உண்டு பண்ணக்கூடிய அம் சங்கள் இருந்துவந்தன.

சங்கீத மில்லாமல் கேவலம் பிரவசனத்தினாலேயே, சர்வ ஜனங்களும் மெய் மறந்து கண்ணீர் விடும்படி செய்யக்கூடிய சக்தியைப் பெற்றவர் ராஜபார்ட் கோனேரி ராவ். இவரைப் பகலில் பார்த்தால்கூட ராஜா மாதிரிதான் இருப்பார். தேப்பெருமா நல்லூர் வைத்தியனாதய்யர் கானத்திற்குப் பிறகு அப்பேறீபட்ட கானத்தின் ஞாபகத்தை உண்டு பண்ணி, அந்தப் பந்தாவை நாடகத்தில் நாம் மறக்காம லிருக்கும்படி செய்து, அவரைக்

காட்டிலும் அதிக ருசியுடன் நாடகத்தில் பாடி மிக்க புகழடைந்தவர் ஸ்ரீ எஸ். ஜி. கிட்டப்பா அவர்கள் ஒருவர்தான் என்று திண்ணமாய்க் கூறலாம்.

29. மஹாதேவ நட்டுவனார் (தஞ்சை)

இவர் பரத சாஸ்திரத்திற்கு உற்பத்தி ஸ்தானமா யிருக்கிற தஞ்சைமா நகரில் அரண்மனை வித்வான்களாய் விளங்கின வம்சத்தைச் சேர்ந்தவர். இவர் பரத சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்று கானத்தில் விசேஷப் பிரசித்தி பெற்றதோடு கூட பாவ நர்த்தன தாளம் இவைகளில் ஆழ்ந்த ஞானத்தை வகித்து அநேக நடிகர்களைத் தயார் செய்து பிரகடனம் செய்தவர். பரத சாஸ்திர சம்பந்தமான அநேக சப்தங்களும், தீர்மானங்களும், ஜதிஸ்வரங்களும் இவருக்குப் பாடாந்தரமுண்டு. கர்னாடக ராகத்தை விஸ்தரித்துப் பாடுவதில் கைதேர்ந்தவர். நர்த்தனம் செய்வதில் மிகக் கியாதி அடைந்த 'சுந்தரம்' என்கிற மானை சின்ன மேளத்தில் ஆட்டி வைத்து இவர் கானம் செய்து ஜனங்களை ரஞ்சிக்கும்படி செய்ததை நான் அநேகம் தடவை பார்த்திருக்கிறேன். சௌகவர்ணங்கள் பாடுவதிலும், தமிழ்ப் பதங்களை விந்யாஸப்படுத்துவதிலும் இவர் மிகவும் கைதேர்ந்தவர் என்றே சொல்ல வேண்டும்.

கன சாரீரத்தை வகித்த இவர் பாடும்போது கொஞ்சமும் சிரமமின்றிக் கற்பனைகள் செய்து தன்னுடைய முழு ஞான பலத்தை வெளிப்படுத்துவார். அந்நாளில் அத்தொழிலில் இவர் முதன்மை ஸ்தானம் வகித்து வந்தார் என்பதை நிர்ணயமாய்ச் சொல்லலாம். அக்காலத்தில் இவருடன் கூடத் தொழில் செய்தவர்கள் இவரை மிகவும் பயபக்தியுடன் கொண்டாடிக் கொண்டே யிருந்தார்கள். இவர் நாத நாமக்ரியை ராகத்தில் ''மதக் கலகத்தில் என்னை'' என்ற தமிழ்ப் பதத்தைச் சின்ன மேளத்தில் விந்யாஸப்படுத்திப் பாடும் காலத்தில் எப்பேர்ப்பட்ட மகா வித்வானும் தலை சுற்றாமலிருக்க முடியாது.

30. அணஞ்சபெருமா பிள்ளை (ஹரிச்சந்திர நாடகக் காலாட்டம்)

ஹரிச்சந்திர மகாராஜா சரித்திரத்தைப் பழைய கால முறையை அனுசரித்து வேஷங்கள் தரித்துக் காலாட்டங்கள் மூலமாய்ப் பதினாயிரக் கணக்கான ஜனங்களைத் திருப்தி செய்து விளங்கி வந்த நாடகக் கம்பெனிகளில் பல இருந்தன. அவற்றுள் மிகவும் உயர்ந்த கம்பெனியில் சேர்ந்து நடத்திவந்த முக்கியஸ்தர்களில் அணஞ்சபெருமா பிள்ளை ஒரு பெரிய சங்கீத வித்வான். இவர் உயர்ந்த ஸ்தாயி சுருதியில் அநேக ஆயிரம் ஜனங்களுக்குக் கேட்கும்படி மிக்க காம்பீர்யத்துடன் பாடிக் கிருதிகளை பாவ ரஸத்துடன் வெளிப்படுத்தி ஜனங்களைச் சந்தோஷ சாகரத்தில் மூழ்கச் செய்வார். இந் நாடகத்தில் சந்திரமதியாய் நடித்த உக்கர் சுப்பன் என்பவருடைய ரஸத்தையும் நடிப்பையும் கண்டு மதிமயங்கி வர்ணிக்காதவர்கள் கிடையவே கிடையாது. இந் நாடகமானது மிகவும் பிரசித்தி அடைந்து தென்னிந்தியா முற்றிலும் இவர்களுடைய புகழை நிலை நாட்டியது. 'மயான காண்டத்தை' மாத்திரம் ஒரு வாரம் நடத்தி ஜனங்களைக் கண்ணீர் விடும்படி செய்து கியாதியைப் பெறுவார்கள்.

அணஞ்ச பெருமா பிள்ளை அவர்கள் பாடும் உருப்படிகளில் சங்கராபரண ராகத்தில் ''மன்னா நீ மனம் நொந்து வாட'', ''கொள்வாருண்டோ கொள்வாருண்டோ'' என்ற சில முக்கிய கிருதிகள் மிகவும் மெச்சத் தகுந்தவை. இந்தக் கிருதிகளை இவர்கள் ஹெச்சு சுருதியில் பாடும்பொழுது ஜனங்கள் மயிர்க் கூச்சலிட்டு ஆராவாரிப்பார்கள்.

31. திவரூர் கந்தன் (நாதஸ்வரம்)

பந்தணைநல்லூர் வீராசாமி காலத்திலேயே நாதஸ்வர வாத்யத்தில் மிக்கக் கௌரவமடைந்து விளங்கி வந்த வித்வான்களில் இவர் ஒரு முக்யஸ்தர். ராகம், பல்லவி, கீர்த்தனங்களில் மிக்க பரிச்சயத்துடன் மூன்றிலும், ஸமமான யோக்யதையை வகித்தவர். இவர் வாத்யத்தைப் புல்லாங்குழல்வாத்தியம் என்றும் சொல்வதுண்டு. இவருடைய வாத்யம் நாதப்ரும்மத்தின் பெருமையைச் செம்மையாய் வெளிப்படுத்தும். கர்னாடக

ஸங்கீதம் அழியாமலிருக்க உழைத்துப் பாடுபட்டவர் இவர். திருமங்கலக்குடி முத்துவீராசாமி என்ற ஒரு பிரஸித்த நாதஸ்வர வித்வான், இவருக்கு ஸகபாடி. முத்து வீராசாமி, திருவாடுதுறை ஆதீனத்தால் மிகவும் ஆதரிக்கப் பட்டு வந்தவர். திருவாடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த திருப்பெருந்துறை என்னும் ஆளுடையார் கோவிலுக்கு அடிக்கடி உத்ஸவாதிகளுக்குச் சென்று கைங்கர்யம் செய்திருக்கிறார். மொத்தத்தில் இவருடைய வாத்யம் எல்லாப் பக்கத்திலும் சிறப்புற்றதாகவே விளங்கி வந்தது.

32. பந்தணைநல்லூர் வீருசாமி (நாதஸ்வரம்)

நாதஸ்வர வாத்யத்தில் முன்னும் பின்னும் இந்தப் ப்ரக்யாதியை அடைந்து ஜனங்களால் நன்கு மதிக்கப்பட்டவர். இவர் வாத்யத்தின் இனிமை, தேன், பால் இவற்றைக் காட்டிலும் மிக மிக ருசியுள்ளது. பட்டமரம் பாலாயுருகும் என்கிறதை இவர் வாத்யத்தில்தான் பார்க்கலாம். ''சிசுர்வேத்தி, பசுர் வேத்தி, நேத்திகான ரஸம் பணிஹி'' என்கிறதையும் இவர் வாத்யத்தில்தான் காணலாம். இவர் சீவாளியை வைத்து ஷட்ஜம் பஞ்சமம் சேர்த்தவுடனேயே ஜனங்கள் மெய் மறப்பார்கள். தாளம் இசை இந்த இரண்டிலும், நாராயணஸ்வாமி அப்பா மாதிரி இசையையே ப்ரதானமாகக் கொண்டு வாசித்தவர். வாசிக்கிற பாணி நிகரில்லாதது என்றே சொல்லவேண்டும்.

ஒரு சமயம் கும்பகோணம் மஹா மஹ உத்ஸவ காலத்தில் இவரும், தவுல் வாத்யத்தில் அப்ரமேயமாயிருந்த ஸ்ரீ வாஞ்சியம் கோவிந்தனும் கும்பபேச்வரர் கோவிலுக்குக் கைங்கர்யம் செய்ய வந்தார்கள். இவ்விருவரும் சேர்ந்து கும்பபேச்வரர் கோவிலில் கைங்கர்யம் செய்தால், மற்றக் கொவில்களின் பிராதான்யம் குறைந்து விடுமென்றும், கூட்டத்தைச் சாமளிக்க முடியாது என்றும் நினைத்து, இவ்விருவரையும் தனியாகப் பிரித்து ஒருவர் கும்பேச்வரர் கோவிலுக்கும் மற்றொருவர் வேறொரு தேவஸ்தானத்திற்குமாகப் பிரிக்கப்பட்டு கைங்கர்யம் செய்தார்கள் என்றால் வாத்யத்தின் பெருமையை எவ்வாறு வர்ணிக்க முடியும்! இவ்வளவு யோக்யதையை வஹித்த இவர் நிகர்வியாய், ஈச்வர பக்தியுடன் சுலபமாய்ப் பழகக்கூடிய நிலையிலிருந்தார். இவருடைய வாத்யத்தை ஜனங்கள் வெகு காலம் கேட்டு அனுபவிக்கப் பாக்யம்

பெறாததால் யோக்யதைக்குத் தக்கபடி இவருடைய கியாதி வெகுநாள் இவ்வுலகில் இல்லாமல் போயிற்று.

33. ஆளுடையார் கோவில் ஆத்மநாத பாரதி

கந்த புராணத்தைக் கீர்த்தனைகளாக அமைத்துக் குமரக் கடவுளின் பேரில் இன்னும் அநேக தனிப் பதங்களையும் ரசனை செய்து ஈசன் அருள் பெற்ற கவிகுஞ்சர பாரதி என்னும் பெரிய வருடைய நெருங்கிய பந்து இவர். இவர் பால்ய முதல் பாரதி அவர்களிடம் பழகி அவரால் இயற்றப்பட்ட கீர்த்தனங்களை அடிக்கடி பாடிக்கொண்டு, கொஞ்ச காலம் கழித்த பின் கந்த புராணக் கீர்த்தனைகள் முற்றிலுமே அவர் மனதில் பதிய ஆங் காங்கு சென்று இக்கீர்த்தனைகளைப் பாடி உபன்யாஸங்கள் செய்து வந்தார். இவருடைய சாரீரம் அதிக ப்ருகா பேசாமல் கொஞ்சம் கனமுள்ளதா யிருந்தாலும் தம்முடைய ஞான பலத் தினாலும், தாள ஞான வலுவினாலும் பெரிய வித்வான்கள் கூட மிக்க சந்தோஷப்படும்படி பாடினார். இவருடன் கூட உதவிக்கு இவருடைய முக்ய பந்துவான குஞ்சரம் அய்யர் என்ற ஒருவர் உயர்ந்த சாரீரத்துடன் கானம் செய்து வந்தார். இக் கீர்த்தனைகளைக் கேட்டு மயங்காதவர்கள் கிடையவே கிடை யாது. மற்ற வித்வான்களைக் காட்டிலும் ஒரு விசேஷமான உயர்ந்த தாளஞானம் இவருக்கு இருந்தது. அது மற்றவர்களால் சாதிக்க முடியாத காரியம். அதாவது ஒரு பதத்தின் பல்லவியை உபக்ரமம் செய்து விட்டால், அந்தப் பதத்தின் ஸந்தர்ப்பத்தை அனுஸரித்து தமிழில் அநேக அசைச் சொற்களைச் சேர்த்து, தாளம் அணுக்கூடப் பிசகாமல் பல்லவியில் கொண்டுவந்து சேர்த்து எடுப்பது ரொம்பவும் பிரமிக்கத் தக்கதாக இருக்கும். தாள பாகத்தில் ரொம்பவும் உயர்ந்த ஞானம் தனக்கு உண்டு என்று சொல்லிக் கொள்ளும் வித்வான்கள் இதைப் பார்த்து இது யாருக்கும் சாத்தியப்படாத வழி என்று சொல்லி மெச்சுவார்கள்.

கேவலம் கந்த புராணக் கீர்த்தனம் மாத்திர மல்லாமல் மகா வித்வான் அருணாசலக் கவிராயர் பாடிய ராமாயணப் பதங்களையும் இம்மாதிரியே ஜோடித்துப் பாடுவார். இவர் மாதிரி பதம் பாடியவர்கள் இருந்தது மில்லை, இனி இருக்கவும் மாட்டார்கள் என்பது என் அபிப்பிராயம். ஸ்வர ஞான மில்லாத

வரா யிருந்தாலும் ராகங்களில் ஆரோஹண அவரோஹண கிரமங்கள் தவறவே தவறாது. இந்த கந்த புராணக் கீர்த் தனைகளை அநேக இடங்களுக்கு ஸஞ்சாரம் செய்து பிராபல்ய மாக்கி யிருக்கிறார். இவர் பாடிய பதங்களில் முக்கியமாய் கேதாரகௌளம் ''அந்த ராம ஸௌந்தர்யம்'' மோஹனம் ''பயப்பட வேண்டாம் வானவரே எங்கள் பரமசிவனுக்கு அன்பானவரே'' எதுகுல காம்போதி ''திருச் சேவை செய்யாத ஜென்மம், என்ன ஜென்மம்'' ''குன்றக் குடியானை'' என்ற பதங்களுக்கு அசைச் சொற்கள் சேர்த்துப் பாடும்பொழுது ஸாக்ஷாத் முருகக் கடவுளே சந்தோஷப் படும்படியா யிருக்கும். வித்வான் கோடீச்வரய்ய ரவர்களுக்கு இவர் நெருங்கிய உறவினர்.

34. அனந்தராம பாகவதர் (பாலக்காடு)

ஸங்கீத வித்வத் கோஷ்டியில் நெருங்கியப் பழகின சிநேகிதர் களில் எனக்கு இவர் ஒரு முக்கியஸ்தர். நல்ல சாரீரத்துடன் ராகம் பல்லவி பாடி விளங்கின வித்வான்களில் இவர் ஒருவர். இவருடைய சாரீரமானது வண்டின் ரீங்காரத்தை ஒத்து இருக்கும். இவருடைய கானமானது செவிகளுக்கு நிரம்பவும் இனிமையாயும் நல்ல ஞான வலுவுள்ளதாயுமிருக்கும். எந்த இடத்தில் சஞ்சாரம் செய்தாலும் இவருடைய சாரீரம் சுருதியை விட்டு விலகவே விலகாது. இயற்கையாக அமைந்த சாரீரத்துடன் சிறந்த ஞான பலமுமிருந்தபடியால், பிக்கட்டான பல்லவியை அழகுபடுத்திப் பாடுவதில் நிபுணத்வம் பெற்றிருந்தார்.

நல்ல தேஜோமயமான சரீரத்தைவகித்து, அவயவயத்தில் கோணல் சேஷ்டைகளில்லாமல் மந்தஹாஸ முகத்துடன் இவர் பாடும்பொழுது ஜனங்கள் இவரிடம் ஈடுபட்டுப் போவார்கள். இவருடைய தாளம், காலப்ரமாண ஞானம் எந்தக் காலத்தில் எதை எடுத்துப் பாடினாலும், அதை உடும்புப் பிடி தள்ளாமலும் இழுக்காமலும் பிசகாமலும் பாடும்படியான யோக்கியதையும் குறிப்பிடத் தக்கதாகும். இவரிடத்தில் சில கீர்த்தனங்கள் பேடண்ட்டாகயிருந்தது. கரஹரப்ரியாவில், ''ராமா நீ ஸமான மெவரு'' ''ஸக்கநி ராஜ மார்க்க முலுண்டக'' முதலான சில கிருதிகளை ரொம்பவும் அழகாகக் கையாண்டார். ஸ்ரீ தியாகப் ரும்ம கிருதிகள் அநேகம் இவருக்குச் சுத்தமாகப் பாடமுண்டு.

கச்சேரி ஆரம்ப முதல் கடைசி வரையில், சாரீரம் ஒரே மாதிரி யாக இருக்குமே தவிரக் கொஞ்சம் கூடக் குறையாது. இவருடைய கச்சேரி எந்தக் காரணத்தை முன்னிட்டும், இன்று சுகமில்லை என்ற பெயர் அடைந்ததில்லை. அதற்குக் காரணம் நன்னடத்தை யும் நல்ல பழக்கமும் ஈசுவர பக்தியும் தான் என்று சொல்லலாம்.

ஒரு சமயம் இவருக்கு ஹரிகதா காலக்ஷேபம் செய்ய வேணு மென்கிற பேரவா உண்டாயிற்று. இதன் பொருட்டு, கியாதி யுடன் திருவையாற்றில் விளங்கின பண்டிட் லக்ஷ்மணாசாரியார் அவர்களிடம் சென்று கொஞ்சகாலம் அவர்களுடன்கூட வசித்து மேற்படியாரிடமிருந்து அநேக நிரூபணங்களைத் தயாரித்துக் கொண்டு ஹரிகதா காலக்ஷேபங்களும் செய்து வந்தார். ப்ரவசன சக்தி சாதாரணமா யிருந்தாலும், உயர்ந்த கானத்துடன், கால க்ஷேபம் செய்தபடியால் ஜனங்கள் மிக்க ஆவலுடன் இவர் கால க்ஷேபத்தைக் கேட்க வருவார்கள்.

இவர் கச்சேரி செய்யும்பொழுது சாரீரத்தை பெரியதாக வும், சிறியதாகவும் பண்ணிக் கொண்டு நயத்தை அதிகம் கொடுத்து ஜனங்களை ரஞ்சிக்கச் செய்வார். எவ்வளவு பெரிய வித்வான்கள் தனக்குப் பக்கவாத்தியமாக அமைந்தாலும் அவர் களைக் கொஞ்சமும் லக்ஷ்யம் செய்யாமல் நிர்ப்பயமாய்ப் பாடக் கூடியவர். தவிர தமக்கு மனதில் எது தோணுகிறதோ அதைப் பட்டவர்த்தனமாக சொல்லியும் விடுவார். ஒரு சமயம் திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் அவர்கள், இவருடன் வாசிக்கும் போது ராகத்தைக் கொஞ்சம் விஸ்தரித்து வாசித்தார். உடனே பாகவதர் ''ஓய் கிருஷ்ணய்யரே, நீரே ராகம் முழுவதையும் வாசித்து விடுவீர்போலிருக்கே'' என்று கூறினார். ஸ்ரீ ராம பிரானிடத்தில் விசேஷ பக்தியும் அன்பும் கொண்டவர். பிரதி வருஷம்தோறும் இவர் ஸ்ரீ ராமநவமி உத்ஸவத்தை ரொம்பவும் விமரிசையாய் அநேக வித்வான்களைத் தருவித்து நடத்தி வந்தார். சிநேகத்திற்கு ரொம்பவும் கட்டுப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

35. ராமநாதபுரம் சீனு அய்யங்கார்

பூச்சி ஐயங்கார் என்கிற ராமநாதபுரம் சீனுவாஸய்யங்கார் அவர்கள் எங்கும் கியாதியுடன் விளங்கின ஒரு கர்னாடக சங்கீத வித்வான். இவரிடத்தில் மிக்க அன்பு பாராட்டி வந்த ராமநாத

புரம் சமஸ்தானம் பாண்டித்துரை அவர்கள், இவருடைய பால்ய வயதிலேயே இவருக்கிருக்கும் சாரீரஇனிமையைக் கண்டு இவருக்கு சங்கீதப் பயிற்சி ஏற்பட்டால் அத் தொழிலில் பிரசித்தி அடையக் கூடும் என்ற எண்ணத்துடன், இவரைத் தக்க குருவினிடத்தில் சேர்ப்பிக்க வேணுமென்கிற பேராவல் கொண்டார். தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்து, சங்கீதத்தில் உயர்ந்த ஞானத்தையும் வகித்து பரமேச்வரனிடத்தில் எல்லையில்லா பக்தி கொண்ட ஸ்ரீ பாண்டித் துரை அவர்கள் தான், பூச்சி ஐயங்கார் அடைந்த புகழுக்கும் யோக்யதைக்கும் காரணம். க்ஷண நேரத்தில் ஒருவருடைய சங்கீத வித்வத் திறமையை அறியக் கூடிய பாண்டித் துரை அவர்கள், ராமனாதபுரம் அரண்மனையில் அடிக்கடி கச்சேரி செய்து வந்த பட்டணம் சுப்பிரமணிய ஐயர் அவர்களுடைய உயர்ந்த சங்கீத பாண்டித்யத்தை அறிந்து ஐயங்காரை அன்னாரிடம் சிஷ்யராக இருக்கும்படி நியமனம் பண்ணினார். ஐயங்கார் சங்கீதத்தில் நிரம்பவும் ஊக்கமுள்ளவராகையால், ஐயர் அவர்களிடத்தில் பூரண பக்தியுடன் குருகுல வாசம் செய்து, சங்கீதத்தில் விசேஷத் தேர்ச்சி பெற்றார். சிஷ்யர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் பந்தாவில் சுப்ரமணிய ஐயர் அக்ரேஸர் ஆகையால், சிரமமின்றியே ஐயங்கார் சங்கீத போதனையைப் பெற்றார்.

தவிர, தேர்ச்சி அடைந்தவுடன் மகா வைத்தியனாதய்யர் முதலான பெரியவர்களின் கானங்களை அடிக்கடி கேட்க வேணுமென்ற எண்ணம் உண்டாகி அவ்விதமே கேட்டு, ஆங்காங்கு தன் விருத்திக்கு வேண்டிய அம்சங்களை கிரகித்துக் கொண்டு சங்கீத சாஸ்திரத்தில் மிகவும் உழைத்து உயர்ந்த கௌரவத்தை அடைந்தார். ஏராளமான கேள்வியும் உழைப்பும் நல்ல சாரீரமும் இவருக்கு இருந்தபடியால், வெகு சீக்கிரத்தில் தென்னாடெங்கும் இவருடைய கியாதி பரவலாயிற்று. எல்லா இடங்களிலும் இவர் கச்சேரி செய்து பெருமை பெற்றுப் பரிசுகள் அடைந்தார்.

ஸ்தாயி சுருதியை வகித்துச் சிரமமன்னியில் எந்தக் காலத்தில் ராகம் பல்லவி கீர்த்தனம் பாடினாலும், அவற்றை விவரமாய்க் குண்டு குண்டாக ஜனங்களுக்குப் போதம் ஆகும்படி பாடுவார். இவருடைய சாரீரத்தில் அதிகப் பிரயாசை இன்றியே அழகான ப்ருகாக்கள் விளங்கும். இசை, தாளம், இந்த இரண்டிலும், இசையையே பிரதானமாகக் கொண்டவர். பிக்கட்டான பல்லவிகளை எடுத்து இவர் பாடி நான் கேட்டதில்லை. பக்கவாத்தியக்காரர்கள் வெகு நேரம் எடுத்துக் கொண்டு வாசிப்பதில் இவருக்கு அருவருப்புண்டு. இதை உத்தேசித்தே மிருதங்கத்திற்குத் தனி ஆவர்த்தம் கொடுப்பதைக் கூட அநேகம்

தடவை இவர் கச்சேரியின் கடைசியில் கொடுப்பார். சாதாரண பக்கவாத்தியங்களையும் வைத்துக் கொண்டு அழகாகப் பாடிக் கச்சேரி களைக் கட்டச் செய்து விடுவார். ஸ்ரீ தியாகப்ரும்மத்தின் கீர்த்தனங்களும், இவருடைய குருவின் கீர்த்தனங்களும் இன்னும் அநேக ப்ராசீன வித்வான்களுடைய கீர்த்தனங்களும், வர்ணங்களும், பதங்களும், ஜாவளிகளும் இவருக்கு ஏராளமாகப் பாடம் உண்டு. இக் காரணத்தினாலேயே இவருடைய பாட்டில் உயர்ந்த பாணி விளங்கிற்று.

ஒரு சமயம் சென்னை ஹோட்டல் சுவாமினாத சாஸ்திரிகள் ஜாகையில், இவர் அப்யங்கன ஸ்நாநம் செய்து கொண்டிருந்தார். அப்போது நானும் தஞ்சை ஸ்ரீ கிருஷ்ண பாகவதரும் ''எப்புடு கிருபா கல்குனோ'' என்ற முகாரி ராகக் கீர்த்தனத்தைக் கேட்க வேணுமென்று விரும்பவே உடனே இவர் ஸ்நான மத்தியிலேயே அதை முழுவதும் பாடிக் காண்பித்துத் திருப்தி செய்து வைத்தார். ஏராளமான கிருதிகள் இவருக்குப் பாடமாகையால், தமது குருவைப் போலத் தாமும் கிருதிகள், வர்ணங்கள், முதலானதுகளைக் கவனம் செய்ய வேணுமென்று நினைத்து அப்படியே செய்து வெற்றியும் அடைந்தார். தற்காலம் அவைகள் அநேக வித்வான்களால் வெகு அழகாகக் கையாளப்பட்டு வருகின்றன. வித்வத் சம்பந்தமான கர்வ மில்லாமல் புதிதாய் ஒரு கிருதியை எவரிடத்தில் கேட்டாலும், அதை உடனே தாம் கிரகிக்க எண்ணி, ஸ்வரப்படுத்தி மனனம் செய்துவிடுவார். இவருக்கு ஹரிகதா காலக்ஷேபங்கள் செய்ய வேணுமென்ற ஆசை நிரம்பவுமிருந்தது. ஆனால் தகுந்த பிரயத்தனமும் முயற்சியும் செய்யாமல் விட்டுவிட்டார். ஸ்ரீ ராமபிரானிடத்திலும், தியாகப்ரும்மத்தினிடமும் விசேஷ பக்தி வைத்தவர். திருவையாற்றில் நடந்து வருகிற ஸ்ரீ தியாகப்ரும்ம உற்சவத்தில் இவர் கொஞ்ச காலம் உதவித் தலைவர் ஸ்தானத்தை வகித்துக் கைங்கர்யம் செய்து வந்தார். தற்காலம் பிரசித்தியுடன் காயகர்களாய் விளங்கும் ஸ்ரீ அரியக்குடி ராமனுஜ ஐயங்கார், கண்டனூர் ஸ்ரீநிவாஸ ஐயங்கார், சேலம் துரைசாமி ஐயங்கார், காரைக்குடி ராஜாமணி ஐயங்கார், குற்றாலம் ஸ்ரீநிவாசய்யர் முதலானவர்கள் சிஷ்யர்களாவர். பூச்சி ஐயங்கார் அவர்களுடைய பெருமைக்கும் கியாதிக்கும் காரணம் அவர் தம் குருவான பட்டணம் சுப்ரமணிய ஐயவரவர்களைத் தெய்வமாக நினைத்து மிக்க வணக்கத்துடன் அன்பு பாராட்டி, கொஞ்ச நாள் அவருடன்கூட உபசாதகமாக இருந்து கானம் செய்து சிச்ருஷைகள் செய்து வந்ததேயாகும்.

36. திருவையாறு சுப்ரமணிய ஐயர்

இவருக்கு ஆளுடையார் கோயில் சுப்ரமணிய ஐயர் என்ற நாமதேயமும் உண்டு. கர்னாடக வர்ணங்கள், கிருதிகள் இவை களில் அதிகப் பிரியம் வகித்து வந்தவராகையால் தாம் செய்யும் கச்சேரிகளில் இவைகளை அடிக்கடி பாடுவதுண்டு. வர்ணங் களையும் கீர்த்தனங்களையும் பாடும்பொழுது தாள சம்பந்த மாய் விஷமம் இருக்கும்படியான வின்யாசங்கள் செய்து இதர வித்வான்கள் கலங்கும்படி பாடுவார்.

உதாரணமாக: பதினான்கு அக்ஷரங்கள் கொண்ட ''பைரவி, விரிபோணி'' அடதாள வர்ணத்தை இவர் இடது கையால் ஆதிதாள எட்டு அக்ஷரத்தைப் போட்டுக் கொண்டும் மற்றொரு கையால் அடதாளம் பதினான்கு அக்ஷரத்தைப் போட்டுக் கொண்டும் பாடி முடிப்பார். இப்படிப் பாடுங்கால் வலது கையில் நாலு அக்ஷரம் கொண்ட சதுச்ர ஜாதியும், இடது கையில் ஏழு அக்ஷரம் கொண்ட மிச்ர ஜாதியுமாக அமைத்துக் கொண்டு ஆவர்த்தத்திற்கு ஆவர்த்தம் இரண்டு தாளங்களும் வந்து சேரும்படியாய்ச் செய்து வர்ணத்தைப் பாடி முடிப்பார்.

இம் மாதிரியான வின்யாசங்களைப் பல்லவியிலும் கீர்த் தனங்களிலும் செய்வதுண்டு. இந்தக் காரணத்தினால் இவர் தாளஞான வின்யாஸத்தில் அநேக வித்வான்கள் பிரமித்தும் பயந்துமிருந்தார்கள். இக்காரணத்தினாலேயே அநேகம் பேர்கள் இவருக்குப் பக்க வாத்யம் வாசிக்க வருகிறதில்லை. சில சமயங் களில் இடைஞ்சலான பல்லவிகளை இந்தக் தாள வின்யாஸத் துடன் பாட வேணுமென்று வித்வான்களுக்கு நோட்டீஸ் கொடுத்து; அப்படி இணங்கி சரியாய்ப் பாடுகிறவர்களுக்கு இவ் வளவு சவரனில் மெடல் அளிக்கப் படும் என்றும் கூறுவார். அதில் தானும் ஒரு விசேஷப் பரிச்சயம் செய்துகொண்டு பாடி யும் நிருபித்துக் காண்பிப்பார். அநேக வித்வான்கள் இதை க்ருத்ருமமான வேலை என்று லட்சியம் செய்யாமல் போய் விடுவார்கள். தாள சம்பந்தமான சகல கேள்விகளுக்கும் இவருக்குச் சரியான ஜவாப் கடவாத்யம் பழநி கிருஷ்ண ஐயர் சொல்வதுண்டு. அதனால் இவர் அவரிடத்தில் விசேஷ அன்பும் மதிப்பும் வைத்திருந்தார்.

இசையில் ருசியைக் கொடுக்கக் கூடிய மார்க்கத்திற்கு ஈசன் இவருக்குச் சாரீர சம்பத்துக் கொடுக்காததினால், ஞான வலு வினாலேயே புகழும் பெயரும் அடைந்தார். ஸ்ரீ தியாகப்ரும்ம

கீர்த்தனங்களைத் தம் சாரீர இயல்புக்குத் தக்கபடி பாடக் கூடியவர். கீர்த்தனங்களுக்கு ஸ்வரம் பாடும்போது, வித்வான் கள் மெச்சும்படியா யிருக்கும். ப்ரும்மத்தின் கீர்த்தனங்களைச் சுத்தமான சாகித்தியத்துடன் பாடுவதில் ரொம்பவும் ஆசை யுள்ளவர். கனராகங்களில் ஸ்வரம் பாடும்பொழுது எவ்வளவு வின்யாஸப்படுத்துவாரோ அதைவிட அரை டிகிரி கூடவே இருக்கும் அபூர்வராக சஞ்சாரங்களிலும். தாளஞானத்தில் பிரக்யாதி பெற்ற மாமுண்டியாப் பிள்ளை இவருடைய தாள ஞானத்தில் ரொம்ப மதிப்பும் கௌரவமும் வைத்திருந்தார். இவர் மைசூர் அரண்மனை வித்வானாக ஆதரிக்கப்பட்டவர். திருவாவடுதுறை ஆதீனத்தில் இவருடைய யோக்யதையைச் சிலாகித்து அநேக சன்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

37. மரத்துறை வைத்தியநாத ஐயர்

சோழமண்டலத்தில் மிக்க மகிமையுடன் விளங்கிய சங்கீத வித்வான்களில் இவர் மிகச் சிறந்தவர். பால்யத்தில் அநேகம் சங்கீதக் கச்சேரிகளைக் கேட்கும்பொழுது தாமும் ஒரு பெரிய வித்வானாகக் கச்சேரி செய்ய வேண்டுமென்ற ஆவல் இவருக்கு ஏற்பட்டது. ஆனால் ஆவலுக்குத் தக்கபடி பாடி ஜனங்களைத் திருப்தி செய்து வைக்கக்கூடிய சாரீரம் இயற்கையாக இவருக்கு ஏற்படவில்லை. எப்படியாவது பூமண்டலத்தில் தம் பெருமை யைச் சங்கீதத்தால் நிலைநாட்ட வேண்டுமென்ற தீவிர பிடிவாதத்துடன் சங்கீத வித்தையை அப்பியாசிக்க எத்தனம் செய்தார். தம் இஷ்டப்படி சாரீரம் அமையாததால் சில சமயங்களில் இவர் இந்த வித்தை பிரயோஜனமில்லை என்று வெறுப்படைந்து வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதும் உண்டு.

ஒரு சமயம் ஆரம்ப காலத்தில் மாயவரம் இரட்டைத் தெரு வள்ளலார் கோயிலில் பாடினார். அதற்கு வீணை வைத்திய நாதய்யர் விஜயம் செய்திருந்தார். வீணை வைத்திய நாதய்யர் அவர்கள் பாட்டைக் கேட்டுவிட்டு, ''ஐயோ, பாவம்! வீணாக ஏன் இப்படிச் சிரமப்படுகிறாய்? இந்தச் சிரமத்தை வேறு தொழிலில் காண்பித்தால் பத்து துட்டு, துக்காணி கிடைக்கும்'' என்று ஏளனமாகச் சொல்லிவிட்டுச் சென்றார்.

அன்று வைத்தியநாதய்யர் சொன்ன வார்த்தையே, இந்த மரத்துறை வைத்திய நாதய்யருக்குச் சங்கீதத்தில் அதிகப் பிடி

வாதத்தை ஊட்டியது. எப்படி விசுவாமித்திரர் வசிஷ்டர் வாயினால் பிரும்மரிஷி என்று சொல்ல வேண்டுமென்று எண்ணங் கொண்டு தவம் செய்தாரோ, அம்மாதிரியே கோனேரி ராஜ புரம் வைத்தியநாதய்யர் அவர்களும் வீணை வைத்தியநாத ஐயர் வாக்கினால் தம்மை மகாவித்வான் என்று கூப்பிடும்படி யாய்ச் செய்ய வேண்டுமென்ற தீவிர வைராக்யத்தைக் கொண்டு இடைவிடாத உயர்ந்த சாதகத்தைச் செய்ய ஆரம்பித்தார். பிடிவாதத்தினுடைய வலிமையால் சாரீரத்தைக் கரைத்து உயர்ந்த பிருகாக்கள் பேசும்படியான சாதகத்தைச் செய்து வந்தார். நாள் ஆக ஆக இவருக்குக் கொஞ்சம் திருப்தி ஏற்பட்டு இனி சங்கீதத்தைக் கைவிடக் கூடாது என்ற உற்சாகமும் உண்டாயிற்று. சாதகமும் வரவர வலுத்து வந்தது.

கஞ்சிரா வாத்தியத்திலும், தாளத்திலும், நிகரில்லாத புகழ் அடைந்த மான்பூண்டியாப்பிள்ளை அவர்களுடைய சிநேகம் இவருக்குச் செம்மையாய் ஏற்பட்டபடியால் இவருடைய தாள ஞானமும் ஸ்வர ஞானமும் வலுத்துவிட்டன. பிரக்தியாதியுடன் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்து விட்டார். ஆரம்பத்தில், இசை, தாளம் இந்த இரண்டில், தாளத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவந்த இவர் பிற்காலத்தில் இசையை ரொம்பவும் பிராதான்யமாக வைத்துப் பாடினார். இதற்குக் காரணம், திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் அவர்களே.

ஒரு சமயம் சென்னையில் கிருஷ்ணய்யர்வாள் இவருக்குப் பக்க வாத்யம் வாசிக்கும் போது கச்சேரி முழுதும் வியவகாரக் கச்சேரியாக இருந்தபடியால், கிருஷ்ணய்யர்வாள், சில வார்த்தைகள் பட்டவர்த்தனமாய் வைத்தியநாதய்யரிடம் சொல்ல அதிலிருந்து ஐயர் இசையையே பிராதான்யமாகக் கொண்டு பாட ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் இவரிடத்தில் சாதாரண மதிப்பு வைத்திருந்த ஜனங்கள், பிறகு இவருடைய கச்சேரியைக் கேட்கும்பொழுது அடைந்த ஆனந்தம் கங்கு கரை காணாது. சாரீர பாகத்திலும், ஸ்வர சஞ்சாரத்திலும், தாள ஞானத்திலும், பாணியிலும் எவ்வளவு உயர்வு இருக்க வேண்டுமோ அவ்வளவையும் வகித்துக் கச்சேரி செய்யலுற்றார். இவர் கானத்தில் ஒரு பெரிய விசேஷம் கச்சேரி ஆரம்பிக்கும் காலத்தில் இவர் சாரீரத்தைக் கவனித்தால், ஒரு சாமான்ய ஞானஸ்தனுக்குக் கூட ''இதென்ன சாரீரம்? இவருக்குத்தானு இவ்வளவு கூட்டமும், ஆர்ப்பாட்டமும், பிரசித்தியும்? எவ்வளவு நாழிதான் இதைச் சாதிக்க முடியும்?'' என்று தோன்றும். சுமார் அரை மணி

நேரம் ஆகிவிட்டால் சாரீரத்தில் ஒருவித 'எதவு' ஏற்பட்டுப் பிரமாதமாகப் பாட ஆரம்பித்து விடுவார். அதுமுதல் கச்சேரி முடிகிற வரையில் எவ்வளவு நேரம் ஆனாலும் சாரீரத்தினுடைய காம்பீர்யமும் மிகவும், பிரமிக்கக்கூடிய பிருகாக்களும், பாடுகிற ராகத்திற்கு ஏற்பட்ட உயர்ந்த பாணியும், அடுக்கு அடுக்காக வரும் சங்கதிகளும் எப்பேர்ப்பட்டவர்களையும் தலை சுற்றும் படியாய்ச் செய்துவிடும். பல்லவி பாடுங்கால் ஸ்வரங்களை வரிசை வரிசையாக அடுக்கிக் கொண்டு போகிற அழகும் தாளப் பிடிப்பும் ரொம்ப மெச்சத் தகுந்ததாயிருக்கும். ஸ்ரீ தியாக ப்ரும்ம கீர்த்தனங்கள், பட்டணம் சுப்ரமணிய ஐயர் கிருதிகள் முதலியவற்றை இவர் ஏராளமாகப் பாடுவார். ஸ்ரீ தியாக ப்ரும்ம உத்ஸவத்திலும் திருவிசநல்லூர் ஐயாவாள் உத்ஸவத்தி லும் வருஷா வருஷம் வந்து உயர்ந்த ஸெட்டுடன் பிரமிக்கத் தக்க கச்சேரிகள் செய்திருக்கிறார். இவர் சுருதியில் கார்வை கொடுத்துப் பாடுகிற பாணி நாளது பரியந்தம் ஒருவரிடத்திலும் ஏற்படவில்லை. சுமார் மூன்று அல்லது நான்கு நிமிஷத்துக் குறையாமல் கார்வை கொடுத்து உடனே அதிலேயே ப்ருகாவை அவுட் மாதிரி உதிர்த்து விட்டால் எப்பேர்ப்பட்டவர்கள் தான் ஈடுபடமாட்டார்கள்?

ஒரு சமயம் திருவிசநல்லூர் ஐயாவாள் உத்சவத்தில் ஸ்ரீ புஷ்பவனமய்யர் கச்சேரி முதல் நாளும் மறுநாள் வைத்திய நாதய்யர்வாள் கச்சேரியுமாக நேர்ந்தது. அதுவரையில் ஸ்ரீ புஷ் பவனமய்யர் பாட்டைக் கேட்காத வைத்தியநாதய்யர் அன்று ஸ்ரீ புஷ்பவனமய்யர் கச்சேரிக்கு வந்து சபையை அலங்கரித்தார். கபடு, சூது, அசூயை இல்லாமல் மற்றவர்கள் பாட்டைக் கேட்டுச் சந்தோஷப் படக்கூடிய வைத்யநாதய்யர், ஈசனால் உயர்ந்த சாரீரம் அளிக்கப்பட்டிருந்த புஷ்பவனமய்யரின் கச்சேரியைக் கேட்டு மெய்மறந்து, ''பாடினால் இம்மாதிரி பாட வேண்டும்; இல்லாத பட்சத்தில் பாடக்கூடாது'' என்றார். மறு தினம் ஸ்ரீ வைத்தியநாதய்யர் மாலை ஆறுமணிக் கெல்லாம் தம் கச்சேரியைத் தகுந்த ஸெட்டுடன் உபக்ரமம் செய்தார். ஸ்ரீ புஷ்பவனம் ஐயரும் கச்சேரிக்கு வந்து முன் அணியில் அமர்ந் தார். ஒரு மணி நேரம் சென்றதும் ஐயர்வாள் சாரீரத்தில் சூடு ஏற்பட்டு விசேஷ அமைப்புடன் விளங்கலாயிற்று. உடனே ஸ்ரீ ரஞ்சனி ராகத்தைக் கொஞ்சம் பாடிவிட்டு ''ஸொகஸுகா மிருதங்க தாளமு'' என்ற கீர்த்தனத்தை உபக்ரமம் செய்து ''நிகம சிரோத்தமு'' என்ற அதுபல்லவியில் கார்வை கொடுத்து விஸ்தரிக்க ஆரம்பித்துப் பிருகாக்களைக் கற்பனையுடன் அள்ளிக் கொட்டினார். சுமார் ஒன்றரை மணி நேரத்திற்குக் குறை

வில்லாமல் அந்த ஒரே இடத்தை உயர்ந்த பாணியுடனும், கற்பனையுடனும், ஸ்ரீ ரஞ்சனி ராகத்தில் இனிப் பாடுவதற்கு இடமே கிடையாது என்று சொல்லும்படியாய்ச் சகல வித ஸங்கதிகளுடனும் பாடி, ஸ்வரம் பாடினவுடன், ஸ்ரீ புஷ்பவன மய்யர் தம்மை மறந்து கண்ணில் ஆனந்த பாஷ்பத்துடன், ''சமுத்திரத்தின் ஆழத்தைக் கண்டு பிடித்தாலும் பிடிக்கலாம், அண்ணாவின் சங்கீத ஞான ஆழத்தைக் கண்டு பிடிக்க முடியாது'' என்று சொல்லி மெச்சினார்.

இவ்வளவு மகிமை வாய்ந்த இவர் கர்வம் சிறிதுமில்லாமல் பெரியோர்களிடத்தில் பயபக்தியுடன் நடந்துவந்தது குறிப்பிடத் தக்கதாகும். ''உழைப்புக்குத் தகுந்த கூலி'' என்பதை நிரூபித்த சிரேஷ்டர் என்று இவரைக் கூறலாம். நாதஸ்வர வாத்யத்தில் மிக்க பிரசித்தி பெற்ற மன்னார்குடி சின்னப் பக்கிரியா பிள்ளை முதலானவர்கள் இவர் கானத்தைக் கேட்டு, இவருடைய நட்பினால் விசேஷ யோக்யதையை யடைந்து கியாதியைப் பெற்றதாகத் தெரிகிறது. இவருடைய கச்சேரிகளுக்கு பிடில் கோவிந்தசாமி பிள்ளை அவர்களும் மிருதங்கம் அழக நம்பியா பிள்ளையும் கஞ்சிரா மான்பூண்டியா பிள்ளை அவர்களும் பக்க வாத்தியம் வாசித்து வந்தார்கள்.

எந்த வீணை வைத்தியநாதய்யர் ஆரம்ப காலத்தில் இவரை வேறு தொழில் செய்யலாம் என்று சொன்னாரோ, அவரே பிற்காலத்தில் இவருடைய கச்சேரியை மாயவரத்திலேயே கேட்டு ''நீ மகா வித்வான்தான் அப்பா'' என்று சொல்லிக் கொண்டாடினார்.

38. புஷ்பவனம் ஐயர்

பெரிய சங்கீத வித்வான்கள் கோஷ்டியில் முக்கியஸ்தராக இருந்து வந்தார். சிறு வயதில் இயற்கையாகவே இவருக்கு ஜனங்கள் கேட்டு அதிக சந்தோஷத்தை அடையக் கூடிய சாரீரம் அமைந்து விட்டது. தக்கும் ஸ்தாயியும் இல்லாத சுருதியை வைத்துக் கொண்டு பாடிய இவருக்குச் சொற்ப காலத்திற் கெல்லாம் சாரீரத்திற்குத் தகுந்த ஸ்வர ஞானமும் ஏற்பட்டது.

இதற்கு முக்கிய காரணம் ஸ்வர சஞ்சராத்தில் தேர்ச்சி யுடைவரான எட்டயபுரம் சமஸ்தான வித்வான் ஸ்ரீ ராமச்

சந்திர அய்யர் அவர்களுடைய சேர்க்கைதான். ராமச்சந்திர அய்யர் அவர்களிடத்தில் மிக்க அன்புடனும் பக்தியுடனும் நடந்து கொண்டு, ஸ்வர சஞ்சார நுட்பங்களையும் சங்கீத சாஸ்திரத்தின் மர்மத்தையும் தெரிந்து கொண்டார். இவர் ஸ்ரீ தியாகப்ரும் மத்தின் கீர்த்தனங்களில் மிக்க பிரேமை கொண்டு அந்தக் கீர்த் தனங்களில் ஏற்பட்டிருக்கிற ராக பாணிகளை மனத்தில் வாங்கி அவைகளை அமைத்து ராக விஸ்தாரம் செய்து பாடி வந்தார். அத்துடன்கூட உயர்ந்த பாணியுடன் விளங்குகிற இவருடைய ராகங்கள், பிரமிக்கக்கூடிய விவரமான பிருகாக்களுடனும் விளங் கினபடியால், ஜனங்களுக்கு எல்லையில்லா இன்பத்தைக் கொடுத்தது. இவர் தம்பூராவை சுருதி செய்து, ஷட்ஜமம் பஞ்சமம் சேர்ந்து நின்றாலே ஜனங்களுக்கு நல்ல கோடையில் நடந்து வந்த மனிதனுக்கு 'ஜில்' லென்று பன்னீர் அடித்தால் எந்த ஆனந்தம் ஏற்படுமோ, அதற்கு நூறு மடங்கு செவி ஆனந்தம் ஏற்படும்.

புஷ்பவனம் ஐயருடைய கச்சேரிகளை நான் அடிக்கடி செட்டிநாடு, தஞ்சை, சென்னை முதலான இடங்களில் கேட்டிருக்கிறேன். அழகு அமைந்த சாரீரத்தை யுடைய இவர், மந்தஹாச முகத்துடன் பாடுங்கால் சர்வஜனங்களும் ஏகாக்ர சித்தர்களாயிருந்து கச்சேரியை அனுபவிப்பார்கள். ஸ்வரம் பாடுங்காலத்தில், கேவலம் வரட்டு ஸ்வரங்களாகயில்லாமல் ஒவ்வொரு ஸ்வரத்திலேயேயும் பூர்ண ராகக் களை தோன்றும். மிகவும் சொற்ப காலத்தில் அநேகம் பேர்களுடைய சங்கீதத்தைக் காட்டிலும் இவருடைய சங்கீதம் உயர்ந்த சங்கீதம் என்ற புகழை அடைந்தார்.

எப்போர்ப்பட்ட பக்க வாத்தியக்காரர்கள் தனக்கு அமைந் தாலும் அவர்களைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் பாடி வந்தார். ஈச்வரனுடைய அனுக்ரகத்தால் ஜிலுஜிலுப்பான சாரீரத்தைப் பெற்றவராகையால், பக்கவாத்தியமே இல்லாமல் வெறும் தம்பூராவை மாத்திரம் வைத்துக்கொண்டு பாடினாலே ப னாயிரக் கணக்கான ஜனங்கள் இவருடைய சங்கீதத்தை மெய் மறந்து கேட்பார்கள். தேகத்தைச் சரியாய்க் காப்பாற்றிக் கொள்ளாததால் சில சமயம் கச்சேரிகளைச் சிரமப்பட்டுச் செய் வார்.

கச்சேரிகள் செய்கிற வித்வான்களுடைய 'ரேட்' உயர்ந்த தற்குக் காரணம் இவரே. இவர் நாள்வரையில், சங்கீதத்தின் மேல் ஜனங்களுக்கு விசேஷ மோகம் இருப்பதை நன்கு உணர்ந்து உயர்ந்த 'ரே'ட்டைக் கேட்டுப் பெற்றுப் பாடி வந்தார்.

எவ்வளவு ரூபாய் இவர் கேட்டாலும், பொது ஜனங்கள் அதைப் பொருட்படுத்தாமல், சந்தோஷத்துடன் கொடுத்துத் தருவித்தார்கள். இவரிடத்தில் விசேஷ மோகம் கொண்ட அநேக மைனர்களும், ஜமீன்தார்களும் இவருடன் கூடவே அடிக்கடி இருந்து பழகியதோடு, அநேக சன்மானங்களும் பரிசுகளும் வழங்கி இருக்கிறார்கள்.

இவர் லோப குணம் இல்லாமல், தாராள மனத்துடன் பணத்தைத் திரணமாய் நினைத்துச் செலவு செய்து குஷியாய்க் காலத்தைக் கழித்தவர். அக்காலத்தில் மிருதங்கம், கஞ்சீரா, பிடில், பாட்டு முதலியவற்றில் கியாதி அடைந்த வித்வான்கள் எல்லோரும் இவரிடத்தில் மிக்க பிரியம் வகித்து, இவர் கச்சேரியை அசூயை இல்லாமல் அடிக்கடி கேட்டுச் சந்தோஷிப்பார்கள். ஸ்ரீ தியாகப்ரும்மத்தின் தேவ காந்தாரி ராகத்திலுள்ள ''க்ஷீரஸாகர சயனா'', குந்தலவராளியில் ''கலிநருலகு'', ஆபேரியில் விளங்குகிற ''நகுமோமு'' என்ற கீர்த்தனங்களையும் மற்றும் சில முக்கியமான கிருதிகளையும் ரொம்பவும் அமைப்பாகப் பாடுவதில் சிறந்தவர் என்ற புகழை இவர் அடைந்தார்.

இவருக்கு முன் சங்கீதச் சக்கரவர்த்தியான ஸ்ரீ வேணுகானம் சரப சாஸ்திரிகள் ஆபேரி ராகத்தில் இருக்கிற ''நகுமோமு'' என்ற கீர்த்தனத்தை வாத்தியத்தில் வாசித்து, இனி எப்பொழுது ஒருவராலும் இக் கீர்த்தனத்தை இப்படி வெளியிட முடியாது என்ற மகிமையை அடைந்ததுபோல், ஸ்ரீ புஷ்பவனமய்யரும் வாய்ப்பாட்டில் ''நகுமோமு'' ''கவிநருலகு'', ''க்ஷீரஸாகர சயனா'' முதலிய கீர்த்தனங்களை அதே மாதிரி உயர்ந்த பாவ, பாணியுடன், பாடி, இனி இக் கீர்த்தனங்களை எந்த வித்வான் பாடினாலும் இம்மாதிரி பாட முடியாது என்கிற கௌரவத்தைப் பெற்றார்.

இவர் தன்னுடைய யோக்கியதையை அனுசரித்து எவ்வளவு கௌரவம் வகிக்கலாமோ, அதற்குப் பதின் மடங்கு கூடவே வகித்துக் கொஞ்சம் மமதையுடனும் விளங்கி வந்தார். ஒரு சமயம் தஞ்சை ஜில்லாவில் ஒரு பெரிய மனிதர் வீட்டுக் கல்யாணத்தை ஒட்டி எல்லா வித்வான்களும் வரவழைக்கப் பட்டிருந்தார்கள். அதாவது சம்பாவனை எவ்வளவு என்பதைக் குறிப்பிடாமலே அவரவர்கள் கச்சேரி செய்ய வேண்டுமென்று மாத்திரம் குறிப்பிடப்பட்டு வரவழைக்கப்பட்டிருந்தார்கள். முக்கியமாய், கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர், பூச்சி அய்யங்கார், பிடில் கோவிந்தசாமி பிள்ளை, தக்ஷிணாமூர்த்தி

பிள்ளை, அழக நம்பியா பிள்ளை, கோட் வாத்தியம் ஸகாராம ராவ், நாதஸ்வர வித்வான் சிவக்கொழுந்து முதலான எல்லாப் பெரிய வித்வான்களும் வந்து கூடியிருந்தார்கள். நானும் கதைக்காகச் சென்றிருந்தேன். ரொம்பவும் செலவு செய்யப் பட்ட கல்யாணமாகையால் வித்வான்கள் எல்லோரும் நாலு நாளும் அவ்விடமிருந்து ஆனந்திக்கும்படியாயிருந்தது. ஜனங்கள் எல்லோரும் உயர்ந்த போஜனத்தையும், சங்கீத விருந்தையும் உண்டு களித்தார்கள்.

இந்தச் சமயத்தில் ஸ்ரீ புஷ்பவனமய்யர் ஏன் வரவில்லை என்று விசாரிக்க, தனக்கு இவ்வளவு 'ரேட்' கொடுத்தால்தான் வர முடியும் என்று எழுதியிருப்பதால் வரவழைக்கவில்லை என் பதை உணர்ந்தோம். ''ஆஹா! இவ்வளவு வைபவத்துடன் நடக்கும் இக்கல்யாணத்தில் ஸ்ரீ புஷ்பவனமய்யர் பாட்டு இல்லாமலிருப்பது ஒரு பெரிய குறைதான்'' என்று ஒரே வாக் காக எல்லோரும் பேசிக்கொள்வது எஜமான் காதில் விழுந்தது. அவர் அரை மனதுடன், ஸ்ரீ புஷ்பவனமய்யருக்கு அவர் கேட்ட 'ரேட்' கொடுப்பதாகத் தந்தி கொடுத்துக் கடைசி நாள் கச்சேரிக்குத் தருவித்தார்.

ஸ்ரீ புஷ்பவனமய்யரும் கடைசி நாள் வந்து, பிடில் கோவிந்தசாமி பிள்ளை, அழக நம்பியா பிள்ளை சகிதம் கச்சேரி செய்தார். ஆஹா! அவர் அன்று பாடிய காம்போஜி ராகமும், குந்தலவராளியும், காபியும் இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. கல்யாண வீட்டு எஜமான் ரொம்ப வும் இவர் கானத்தில் ஈடுபட்டு, ''இந்த கானத்திற்கு 'ரேட்'டே கிடையாது; எந்த ரேட்டிலும் கட்டுப்படாத கானம் இது'' என்று சொல்லி, பேசின தொகையைப் போல் இரட்டிப்புச் சம்பாவனை தந்து இவரைப் பெருமைப் படுத்தினார்.

இதிலிருந்து ஸ்ரீ புஷ்பவனமய்யர் எப்பேர்ப்பட்ட கௌர வத்தையும் பெருமையையும் வகித்தார் என்பது நன்கு விளங் கும். இவ்வளவு புகழ் வாய்ந்த இவர் புகழுக்குத் தக்கவாறு அதிக காலம் ஜீவித்திருந்து இவருடைய மதுர கானத்தைக் கேட்கும்படியான பிராப்தம் ஜனங்களுக்கு இல்லாமல் போயிற்று.

39. டைகர் வரதாச்சாரியார்

இவருடைய கான வித்தையின் பாண்டித்யத்தை நான் இவருடைய பால்ய காலம் முதல் தெரிந்துகொள்ள முடிய வில்லை. நான் தெரிந்து கொண்டதிலிருந்து சங்கீத சாஸ்திரத் தில் விசேஷ ஆராய்ச்சிகள் செய்து அநேக தக்க வித்வான்களால் கொண்டாடப்பட்டு வருகிறார். இவர் அடைந்திருக்கும் யோக்கியதைக்கு, கர்வலேச மில்லாமல் ரொம்ப சுலபராய் எல்லோருடனும் பழகக் கூடியவர்.

பாடுகிறதற்கு மிகுந்த சிரமத்தைக் கொடுக்கக்கூடிய நுட்ப மான ராகங்களிலும் நுழைந்து ராகத்தினுடைய பாவத்தைப் பூர்த்தியாய் வெளிக்காட்டி கன ராகங்களில் சஞ்சாரம் செய்வது போல் செய்து, ஸ்வரங்களைப் பாடி ஜனங்களைச் சந்தோஷப் படுத்தக் கூடியவர். என்னிடத்தில் ரொம்பப் பிரியமும் அன்பும் உள்ளவராகையால் அநேகம் தடவை இவருடைய கச்சேரியைக் கேட்கச் சந்தர்ப்பங்கள் நேர்ந்தது. இவருடைய ஆழ்ந்த கர்நாடக சங்கீத ஞானம் ரொம்பவும் மெச்சத் தகுந்தது. அபார மாய்க் கியாதி வாங்கின மகா வைத்தியநாதய்யர், பட்டணம் சுப்ரமணிய அய்யர் இவ்விருவர்களிடத்திலும் மிக்க அன்பு பாராட்டி, குருபக்தியுடன் அவர்களிடத்திலிருந்து கேட்டுவந்த மார்க்கங்களைத் தம்முடைய பாட்டுக் கச்சேரிகளிலும் உபயோகப்படுத்திச் சந்தோஷத்தை அனுபவிப்பார்.

ஸ்ரீ தியாகப் பிரும்மத்தினிடத்தில் இவர் வைத்திருக்கிற பக்தியானது வேறு ஒருவருக்கும் ஏற்படாது என்றே சொல்ல லாம். ஸ்ரீ தியாகப் பிரும்மத்தினுடைய கீர்த்தனங்களையும், அடுத்தபடியாகப் பட்டணம் சுப்ரமணிய அய்யர் கீர்த்தனங் களையும் இவர் மிக்க ஊக்கத்துடனும் சந்தோஷத்துடனும் சுத்தமாய்ப் பாடுவார். மத்தியில் அவைகளுக்கு ஸ்வரம் பாடும் பொழுது, பாடுகிற ஒவ்வொரு ஆவர்த்த ஸ்வரமும் சிட்ட ஸ்வரம் மாதிரியே தோன்றும்.

கான வித்தையின் மர்மத்தைத் தாமும் அனுபவித்துக் கொண்டு மற்றவர்களுக்கும் சந்தோஷத்தைக் கொடுப்பதில் மிகச் சிறந்தவர். ரொம்ப சொற்ப யோக்கியதை உடையவர்களின் பாட்டைக் கேட்டாலும், அதை நிஜமாகவே மெச்சிக் கொண் டாடிப் பெருமைப்படுத்துவார். ஸ்ரீ தியாகப் பிரும்மத்தின் கீர்த்தனங்களை வித்வான்கள் சாஹித்ய சுத்தமாகவும் அழகாக வும் பாடும்பொழுது இவர் மனது அதில் லயித்து மிக்க உருகி,

கண்ணீர் சொரிவதை நான் பார்த்திருக்கிறேன். இதற்கு முக்கிய காரணம், பிரும்மத்தினிடத்தில் அவர் வைத்திருந்த நிஜ அன்பும், கீர்த்தனங்களின் அர்த்த பாவமும், வர்ண மெட்டின் மகிமையும் தான் என்று சொல்ல வேண்டும். இவருடைய உத்தம ஞானத் திற்குத் தகுந்தபடி சாரீரம் அமையாததால் சாமான்ய பாமர ஜனங்கள் இவருடைய கானத்தின் குணத்தை நன்றாய்த் தெரிந்து கொள்ள பாக்கியமில்லாதவர்களானார்கள்.

இவருடைய கான வித்தையின் கௌரவத்தைக் கண்டறிந்தே இவரைச் சென்னை சர்க்கார் சங்கீதக் கலாசாலையில் 'பிரின்ஸிபா'லாக நியமித்தார்கள். சில காலம் ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் சர்வகலாசாலையில் பிரதம சங்கீத போதகரா யிருந்து கௌரவத்துடன் விளங்கி வந்தார்.

40. பழனி கிருஷ்ண அய்யர்

நம் தேசத்தில் கடத்தை வாத்தியமாக உபயோகப் படுத்திச் சங்கீதக் கச்சேரிகளுக்கு லாயக்குள்ளதாகச் செய்து ஜனங்களை ரஞ்சிக்கப்படுத்திப் பிரக்யாதி பெற்றவர்களில் இவரை முதன்மையாகச் சொல்ல வேண்டும். இவருடைய வாத்தியத்தை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். இசை, தாளம் இந்த இரண்டு மார்க்கத்திலும் நைபுண்யம் பெற்றவர். இருந்தாலும், தாளப்ரஸ்தாரத்தில் இவர் பெற்றிருந்த ஞானத்திற்குச் சமமான ஞானம் உள்ளவர்கள் மிகச் சிலரே.

புதுக்கோட்டை சமஸ்தானம் கோனாபட்டு என்ற ஊரில் சரப சாஸ்திரிகள் அவர்கள் கடம் கிருஷ்ணய்யரவர்களுடன் ஒரு கச்சேரி செய்யும்படி நேரிட்டது. அன்று மிருதங்க வாத்திய மில்லாமல் இவருடைய கடத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு சாஸ்திரிகள் செய்த கச்சேரியானது இன்னும் என் செவியை விட்டு அகலவில்லை.

அசகாய சூரர் என்ற பதம் இந்தப் பழனி கிருஷ்ணய் யருக்கே உரித்தானது. வேறு ஒருவருடைய ஒத்தாசையுமின்றி ஏகாங்கியாய்த் தமிழ்ப் பதங்களைப் பாடிக்கொண்டு மூன்று அல்லது நான்கு மணி நேரத்திற்குக் குறையாமல் கடவாத்தியத் துடன் கச்சேரி செய்து ஜனங்களை ஆனந்திக்கச் செய்வார். இவர் வாத்தியத்திலிருந்து உண்டாகிற நாதமானது மிருதங்கத் தினுடைய நாதம் மாதிரி அனுஸ்யூதமான நாதத்துடன் விளங்கி,

அதி கம்பீரமாகச் சுமார் பதினாயிரம் ஜனங்களுக்குக் கேட்கும் படியா யிருக்கும்.

ஒரு சமயம், புதுக்கோட்டையில் வடக்கு வீதி கிருஷ்ணய்யர் மடத்தில் தாளத்தில் கியாதி பெற்ற கஞ்சிரா மான் பூண்டியாப் பிள்ளை, மிருதங்கம் தக்ஷிணா மூர்த்திப் பிள்ளை, இலுப்பூர் பொன்னுசாமிப் பிள்ளை—மற்றும் அநேக பெரிய வித்வான்கள் கூடி இவருடைய தாளஞானத்தைச் சோதனை செய்ய எண்ணினார்கள். பொன்னுசாமிப்பிள்ளை அவர்கள் பிக்கட்டான தாளத்தில் விஷமமான இடத்தில் ஒரு பல்லவி அமைத்துக் கொண்டு பல்லவி பாடி அதற்கு இவரை வாசிக்கும் படி கேட்டுக்கொள்ள, இவர் சர்வ சாதாரணமாய் அப் பல்லவிக்குக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் வாசித்து ஜனங்களை ரஞ்சிக்கச் செய்ததைப் பார்த்து எல்லா வித்வான்களும் மிக்க பிரமிப்பை அடைந்தர்கள்.

அதில் முக்கியமாக, அப்பொழுது கட வாத்தியம் வாசித்துத் தொழில் செய்து வந்த ஸ்ரீமான் தக்ஷிணாமூர்த்திப் பிள்ளை அவர்கள் இனி இந்தக் கட வாத்தியத்தைத் தம் ஜன்மாவுக்குத் தொடுகிறதில்லை. என்று பிரதிக்ஞை செய்து, பிறகு மிருதங்கத்தைச் சாதகம் செய்து உயர்ந்த கியாதியை அடைந்தார்.

ஆயுர்பாவக் குறைவினால் இவருடைய வாத்தியத்தை ஜனங்கள் வெகு நாட்கள் கேட்டு அனுபவிக்கும் படியான பாக்கியத்தைப் பெற முடியவில்லை.

41. வீணை தனம்மாள்

இந்த அம்மாள் தேன்போன்ற சாரீரத்தை வகித்து வீணையுடன் கலந்து கச்சேரி செய்துகொண்டு வந்ததை நான் ரொம்பவும் அனுபவித்திருக்கிறேன். இவர் சங்கீத சாஸ்திரத்திலுள்ள சாரத்தைக் கிரகித்து வீணை சகிதம் பிரயோகப் படுத்தின தானது மற்றவர்களுக்குச் சாத்தியப் படாது என்றே சொல்லலாம்.

ஒரு சமயம், ஒரு பண்டிகையை அனுசரித்துச் சென்னை வந்திருந்த அநேக வித்வான்கள் எல்லோரும் ஒரே தினத்தில் கச்சேரி கதைகள் செய்யும்படி நேர்ந்ததில் தனம்மாள்



VEENA DHANAM



NARAYANASWAMY APPA
(Mridangist)

கச்சேரியைக் கடைசியாக வைத்துக் கொண்டார்கள். மேற்படி தினத்தில் பகல் இரண்டு மணி முதல் ஒவ்வொரு வித்வானுடைய கச்சேரியாக வரிசைக் கிரமத்தில் நடைபெற்றது. தஞ்சை ஸ்ரீ கிருஷ்ண பாகவதர், சரபசாஸ்திரிகள், மற்றும் பல பிரபல வித்வான்களின் கச்சேரி எல்லாம் ஆன பிறகு, இரவு சுமார் 10 மணிக்குக் கடைசியாகத் தனம்மாளுடைய கச்சேரி ஆரம்ப மாயிற்று.

எல்லா வித்வான்களும் ஒருங்குகூடி சதஸை அலங்கரித் தார்கள். தனம்மாள் பைரவி ராகம் பாடி ''ஜெய ஜெய கோ'' என்று பாட ஆரம்பித்தவுடன், கச்சேரி செய்யுமிடத்தி லிருந்து சற்று தூரத்தில் சிரமபரிகாரம் செய்து கொண்டிருந்த ஸ்ரீ வேணுகானம் சரப சாஸ்திரிகள் அவர்களை இந்த கானம் நிரம்பவும் ஆகர்ஷணம் செய்தது. உடனே அவர் கொஞ்சமும் சிரமத்தைப் பாராட்டாமல் எழுந்திருந்து ''நானும் அங்கு வந்து விடுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டு முன்னாடி வந்து உட் கார்ந்து கச்சேரியை எல்லையில்லா மகிழ்ச்சியுடன் அனுபவித் தார். இதிலிருந்து இந்த கானத்தின் பெருமை எவ்வளவு உயர்ந்தது என்பது நன்கு விளங்குகிறது.

ஸ்ரீ தியாகப் பிரும்மத்தின் கீர்த்தனங்கள், க்ஷேத்ரக்ஞர் பதங்கள், தீக்ஷிதர் கிருதிகள், மற்றுமுள்ள ஜாவளி முதலிய வற்றில் தனம்மாள் எதை எடுத்துப் பிரயோகம் செய்தாலும் அப்பொழுது, வேறொன்றும் இதற்கு ஈடாகாது என்று சொல்லும்படியா யிருக்கும். ஸ்வரஞானமிருந்தும் இவர் ஸ்வரம் பாடாமல் சாஹித்யங்களை மாத்திரம் பாடிக் கச்சேரி செய்ததானது ராகம் பல்லவி ஸ்வரம் பாடிக் கச்சேரி செய்கிற அநேக வித்வான்களைக் காட்டிலும் உயர்ந்ததாக இருக்கும். இவருக்கு ஏராளமான கிருதிகளும் பதங்களும் பாடாந்தரமுண்டு. அசகாய சூரராய் விளங்கின திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் தனம்மாளுடைய கானத்தில் எல்லையில்லா மதிப்பும், அன்பும் கொண்டிருந்தார் என்றால், இவரது கானத்தின் பெருமையை நிரூபிக்க வேறு அத்தாட்சியும் வேண்டுமோ?

எல்லாக் கிருதிகளும் உயர்தரமாய் இவரிடத்தில் விளங் கினாலும் முக்கியமாய் ''க்ஷீர ஸாகர சயனா'' என்ற தேவ காந்தாரி ராகக் கீர்த்தனையின் சரணமான ''நாரீமணிகி'' என்ற இடத்தை இவர் சஞ்சரித்துக் கையாண்டதுபோல், நாளது பரியந்தம் ஒருவரும் கையாண்டதுமில்லை, கையாள வும் முடியாது என்று திண்ணமாய்ச் சொல்லலாம். தனம்மா ளுடைய அனுக்ரஹத்தாலேயே, இவரது பரம்பரை சங்கீதத்தில்

தேர்ச்சியுடன் விளங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

42. வீணை சேஷண்ணா

மைசூர் சமஸ்தானத்தில் மிக்கத் திறமை வாய்ந்த ஒரு வைணீக வித்வான் இவர். இவருடைய வாத்தியத்தை நான் முதன் முதலில் அனுபவித்தது ஸ்ரீரங்கத்தில் இருந்த ''ஸங்கீத ஸமாஜம்'' என்ற சபையில்தான். இவருக்குப் பக்க வாத்திய மாக மிருதங்கம் துகாராமப்பா வாசித்தார். இவர் வீணை யிலிருந்து கம்பீரமான நாதமும், கீர்த்தனம் வாசித்து ஸ்வரத்தைக் கோவையாக வாசித்த மார்க்கமும் எல்லோரை யும் பிரமிக்கச் செய்தன. அநேகரின் சாரீர நாதத்தைக் காட்டி லும் இவருடைய வாத்தியத்தின் நாதப் பிரும்மம் காம்பீர்ய முள்ளதாயும் மேன்மையுடையதாயுமிருக்கும்.

ஒரு சமயம் தஞ்சையில் கியாதி வாய்ந்த மிருதங்கம் நாராயணஸ்வாமி அப்பா அவர்கள் தம் வீட்டுப் பஜனையில் வாசிக்க வேணுமென்று கேட்டுக்கொள்ள, அவ்விதமே ஸ்ரீ சேஷண்ணா அவர்கள் அப்பா மிருதங்கத்துடன் அபாரமாக வாசித்து ஜனங்களுக்கு இன்பத்தை ஊட்டினார். அவர் அன்று கமாஸ் ராகத்தில் ''ரவிகுல ஸார்வ பௌமாராஜா ராமச்சந்திர'' என்ற பல்லவியை அபாரமாய் வாசித்தது இன்னமும் என் காதை விட்டகலவில்லை. அப்பா அவர்கள் மிருதங்கமும் இவருடைய வாத்தியமும் ஜோடி வீணையாக விளங்கிற்றே ஒழிய, வேறு வித்தியாசமே இல்லை. வைணீக வித்வான்களில் ரொம்ப உயர்ந்த யோக்கியதையுடனும் கியாதியுடனும் விளங்கி வந்தவர் களில் ஒருவர்.

43. மான்பூண்டியா பிள்ளை

கஞ்சிரா வாத்தியத்திற்கு ஒரு பெரிய கௌரவத்தை அளித்து அதைக் கச்சேரிகளில் உபயோகப்படுத்த வேண்டியது அவசியம்தான் என்பதை முதலில் வெளிப்படுத்தியவர் இவர் தான். எனக்கு இவர் பால்ய முதல் நிரம்பவும் பரிச்சயமுள்ள

வர். ஆரம்ப காலத்தில் வேடிக்கையாய் அநேக இடங்களில் சில்லறைப் பாட்டுகளுக்கு வாசித்து வந்தவர். நாளடைவில் இவ்வாத்தியத்தில் முதன்மையான தேர்ச்சியை அடைந்தார். இவருடைய தாள ஞான வலுவினால் நிகரில்லாத பெருமையைப் பெற்றார். பல்லவி ஸ்வரம் பாடுகிற வித்வான்கள், வாத்தியக் காரர்கள் எல்லோரும் இவருடைய வாத்தியத்திற்கு விசேஷ கௌரவம் கொடுத்து இவரைத் தாளத்திற்கு ஆதாரமாகவைத்துக் கச்சேரி செய்து வந்தார்கள். பால்ய முதல் பரமேச்வர னிடத்தில் அன்பும், எப்பொழுதும் விபூதி தாரணமும், குரு பக்தியும் விசேஷமாய் இவருக் கிருந்து வந்தது.

இவருக்கு வேணுகானம் சரபசாஸ்திரிகள் வாத்தியத்திலும், தாள ஞான வலுவிலும், உயர்ந்த மதிப்பு இருந்தது. இவர் வாத்தியத்தில் அநேக ஜமீன்தார்களும் கனதனவான்களும், மைனர்களும் பிரியப்பட்டு, இவரை முக்கிய குருவாக வைத்துக் கொண்டு, வாத்திய அப்பியாசம் செய்து இவரை வெகுவாகக் கொண்டாடி யிருக்கிறார்கள். தக்க வித்வான்களுடனும், சாமான்ய யோக்கியதை உள்ள வித்வான்களுடனும் சமமாகவே பழகி, அவர்களுடன் வாசித்துப் பெருமையடைந்து வந்தார். லக்ஷக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்துச் சிவனடியார் களுக்கும் சிநேகிதர்களுக்கும் செலவு செய்தார். கடைசியில் காஷாயம் தரித்து மிக்க வைராக்கியத்துடன் சிவத்தில் கலந்த இவருக்கு வருஷந் தோறும் சிஷ்யர்கள் உற்சவம் செய்து வருகிறார்கள்.

இவருடைய முக்கிய சிஷ்யர்களில் பிரசித்தி பெற்றவர் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி பிள்ளை ஆவார்.

44. திருப்பழணம் பஞ்சாபகேச சாஸ்திரிகள்

கதா காலட்சேபம் செய்வதில் இணையற்று விளங்கியவர் களில் பஞ்சாபகேச சாஸ்திரிகளும் ஒருவர். பால்யத்திலேயே அநேக சம்ஸ்கிருத பண்டிதர்களிடத்தில் பாடம் வாசித்து, வட மொழியில் நல்ல ஞானத்தைச் சம்பாதித்துக் கொண்டார். அந்த பலத்தையும் இயற்கையாகவே ஏற்பட்டிருந்த சங்கீத ஞானத்தை யும் கொண்டு, ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தைப் பௌராணிக பந்தாவில் வெகு அழகாக உபன்யாசம் செய்து வந்தார்.

அக்காலத்தில் மிக்கக் கியாதியுடன் விளங்கின தஞ்சை ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் முதலியவர்களின் கதைகளைக் கேட்டு, தாமும் புராணம் சொல்வதை நிறுத்தி ஹரிகதைகள் செய்ய ஆவலுற்றார். அதற்கு வேணுமென்கிற நிரூபணங்கள் இல்லாததினால் தஞ்சை ஸ்ரீ கிருஷ்ண பாகதவரை அடைந்து சில நிரூபணங்கள் கொடுத்து ஒத்தாசை செய்ய வேணுமென்று கேட்க கொடுக்க முடியாதென்று மறுதளித்து விட்டார். இதில் கொஞ்சம் மனத்தாங்கல் சாஸ்திரிகளுக்கு ஏற்பட்டிருந்தது.

இருந்தாலும், கர்நாடக சங்கீதத்தில் ஆரம்பத்திலேயே நல்ல ஞானம் உள்ளவராகையால் எப்படியாவது கதை செய்ய வேணுமென்ற ஆவல் இவருக்கு அதிகரித்துக்கொடே வந்தது. அதனால் நிரூபணங்கள் எங்கு கிடைக்கக்கூடும் என்பதை ஆங்காங்கு விசாரித்துக் கொண்டு என்னிடம் வந்தார். நான் ''தருகிறேன்'' என்று சொல்லி, என்னுடன் கொஞ்ச நாள் வசிக்கச் சொன்னேன்.

ஒரு நாள் ராமாயணம் கேட்க வேணுமென்று இவரை அபேக்ஷிக்க, அவர் அவ்விதமே ''விபீஷண சரணாகதி' கட்டத்தை அமர்க்களமாய் உபன்யாசம் செய்து, ஏராளமாய்க் கூடியிருந்த ஜனங்களைப் பிரமிக்கும்படி செய்தார். நானும் ஏற்கனவே இவருடைய யோக்கியதையைத் தெரிந்து கொள்ளாதவனாகையால், அன்று இவருடைய கர்நாடக சங்கீத ஞானத்தின் வலிவையும் பாவனா சக்தியையும், வட மொழியின் பாண்டித்தியத்தையும் கேட்டுப் பிரமித்து அக மகிழ்ந்தேன். உபன்யாசம் முடிந்தவுடன், ''சாஸ்திரிகளே! உங்களுடைய சாமர்த்தியத்தை இவ்வளவு நாளும் காட்டாமல் என்னை ஏமாற்றி விட்டீரே'' என்று சொன்னேன். அவர் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு அங்கீகாரம் செய்தார். பிறகு சில நிரூபணங்களை அளித்து அதன் மார்க்கத்தையும் தெரிவித்தேன். இவைகளை வைத்துக்கொண்டு, இதர சாதகத்தினால், சுயமாக நல்ல நவீன வர்ண மெட்டுக்களுடன் கவனங்கள் செய்துகொண்டு, கதை செய்தார்.

வரவர சுக்கில பட்சத்துச் சந்திரன் மாதிரி இவருடைய புகழ் விருத்தி அடைந்தது. ஜனங்களுக்கு அதிக பிரமை இவர் காலட்சேபங்களில் ஏற்பட்டது. உபசாதகர்கள் இவருக்கு அமைந்தது போல இதர பாகவதர்களுக்கு அமையவே இல்லை என்று சொல்லலால்.

பிரதி கதைகளுக்கும் ஸ்ரீ தியாகப் பிரும்மம் கீர்த்தனங்

களை அழகாய்ப் பாடிச்சிறப்பித்து வந்தார். எந்த உருப்படியை இவர் பாடினாலும், கச்சிதமாயும், பிசிறு இல்லாமலும், காதுக்கு மிகவும் ரம்மியமாயும், தாளப் பிடிப்புடனும் இருக்கும். உபன்யாச சக்தியில் ரொம்பவும் தேர்ச்சி அடைந்தவர். ஜனங் களுக்குக் கவர்ச்சியும் ருசியும் உண்டாகும்படி, கற்பனா சக்தி யுடன் பேசுவார். இவர் தியாகப் பிரும்ம உத்ஸவத்தில் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகித்து வெகு காலம் கைங்கரியம் செய்து வந்தார்.

வருஷந்தோறும் தம்முடைய ஜாகையில், எல்லா வித்வான் களையும் தருவித்து, ஏராளமான பொருள் செலவு செய்து, ஸ்ரீ ராமநவமி உத்ஸவத்தை நிரம்பவும் சிறப்பாக நடத்தி வந்தார்.

45. லக்ஷ்மணாசாரியார்

வேத சாஸ்ரங்களில் தெளிவான ஞானத்தை அடைந்து, அத்துடன் ஜனங்களுக்குப் பகவானுடைய குணத்தைப் போதிக்க வேணுமென்று ஹரிகதா காலக்ஷேபங்களும் செய்து வந்தார். காலக்ஷேபங்கள் செய்வதற்குத் தக்க சங்கீத ஞானமும் சாரீரமும் உடையவரென்று சொல்ல முடியாது. ஆனால் எவ் வளவு நேரம் காலக்ஷேபம் செய்தாலும் இவர் தம்முடைய பாண்டித்யத்தைக் கொண்டு யாரையும் பிரமிக்கும்படி செய் வார். இவருக்கு அநேக விஷயங்களில் பரிபூர்ண யோக்கியதை இருந்து வந்தது.

முக்கியமாக, வேதங்களுக்கு வர்ணக்ரமம் சொல்லக் கூடிய சக்தி இவருக்கு உண்டு.

அவைகளிலே சதாவதானம் செய்யும்படியான ஒரு யோக்யதையும் இருந்தது.

பகவான் ஸ்ரீகிருஷ்ணனே சொல்லுகிறாப்போல் ஸ்ரீ கீதா சாஸ்திரத்தைச் சொல்லும்படியான பரிக்ஞானமும் பெற்றிருந் தார்.

தெலுங்கு, கன்னடம், மஹராஷ்ட்ரம் முதலான பாஷை களில் கவனம் செய்யக்கூடிய உயர்ந்த ஞானமும் இவருக்கு இருந்தது.

இத்தியாதி யோக்யதைகளை வகித்து அநேக சாஸ்திர புராண இதிஹாஸ சாரத்தைக் கதைகளில் பிரயோகம் செய்து பண்டித பாமரர்களை ரொம்பவும் திருப்தி செய்து வைத்தவர்: உபன்யாஸ காலத்தில் ஒவ்வொரு வார்த்தையும் மிக ருசியுடன் விளங்கும். ஒரு சமயம் ஜகத்குரு சிருங்கேரி ஸ்வாமிகளிடத்தில் கீதை பதினெட்டு அத்தியாயத்தையும் பதினெட்டு நாள் சொல்லி, த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் இம் மூன்றிலும் மேற்படி கீதைக்குப் பாஷ்யமும் சொல்லி, ஸ்வாமி களால் மிகவும் கொண்டாடப்பட்டு விசேஷ சன்மானங்களைப் பெற்றார். சென்னையில் மாதக்கணக்காக வசித்து ஏராளமான கதைகளும் உபன்யாசங்களும் செய்து மிக்க புகழை அடைந்தவர்.

ஸ்ரீ தியாகப்ரும்ம உத்ஸவத்தின் தலைவர் ஸ்தானத்தை வகித்துக் கைங்கர்யம் செய்து சிறப்பித்து வந்தார். பகவத் கீதையைப் பதினெட்டு நிமிஷத்திலும் சொல்லுவார்; பதினெட்டு நாளும் சொல்லுவார். பதினெட்டு மாதமும் சொல்லச் சக்தி வாய்ந்தவர். கீதைக்கு உயர்தரமான பாஷ்யமும் எழுதி அச் சிட்டு வெளியிட்டிருக்கிறார். அநேகமாக இவர் வாழ்நாட் கள் சென்னையிலேயே கழிந்தது. ஒரே நாளில் இரண்டு மூன்று ஆவர்த்தி உபன்யாசங்களைச் செய்து கொண்டு ஆயிரக்கணக் கான சிஷ்யர்கள் இவரை வணங்கப் பெற்றுத் தக்க சன்மானங் களையும் அடைந்து புகழுடன் விளங்கினார். ஸ்ரீ பஞ்சநத க்ஷேத்திரத்தில் தர்மாம்பிகையின் ஸந்நிதியில் விளங்குகிற ஆஞ்ச நேய மூர்த்தியை உபாசித்து, அந்த அனுக்ரஹ பலத்தால் லக்ஷ்மணாசாரியார் ஜகத் கியாதியை அடைந்தார்.

46. திருமருகல் நடேசன்

நாதஸ்வர வாத்தியத்தில் மிக்க பெருமை அடைந்த இவர் நாதப் பிரும்மத்தின் மர்மத்தை ஜனங்கள் தெரிந்து ஆனந்தப் படும்படியாக வெளியிட்டவர். இவருடைய வாத்தியத்தின் பெருமையை அளவிட முடியாது. இவர் வாசிக்க உபக்ரமம் செய்து விட்டால் சேதன, அசேதன வஸ்துக்கள் யாவும் கேட்டு சந்தோஷிக்காமலிருக்க முடியாது. ஒவ்வொரு ராகத்தினுடைய தேவதையைப் பிரத்யட்சமாக நிறுத்தி எல்லோரும் அதைத் தரிசிக்கும்படியான நிலையில் செய்து வைத்தவர்.

இவருக்குச் சரிசமமாக இவர் காலத்தில் மிகவும் பிரசித்தி அடைந்த மன்னார்குடி சின்னப்பக்கிரியாப் பிள்ளை என்பவரை ஒரு சமயம் காரைக்குடியில் நகரத்தார்கள் திருமருகல் நடேசனுடன் சேர்ந்து கச்சேரி செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

இந்தச் சமயத்தில் இவர்களுடைய யோக்கியதையை நிர்ணயம் செய்யும் பொருட்டுப் பிரசித்தி பெற்ற வித்வான்களையும், தக்க கனதனவான்களையும் தருவித்துச் சபையை அலங்கரித்தார்கள். முதலில் யார் உபக்ரமம் செய்வது என்பதை ஆலோசிக்கும்பொழுது ஸ்ரீ நடேசப் பிள்ளை சின்னப் பக்கிரியாய் பிள்ளையை முதலில் ஆரம்பம் செய்யும்படி கேட்டுக் கொள்ள, அவ்விதமே பக்கிரியாப் பிள்ளை உபக்ரமம் செய்து, 'கீரவாணி' ராகத்தை மற்றொருவர் சீவாளியை வைத்து வாசிப்பதற்கு இடமில்லாமல் சங்கதிகளை அடுக்கு அடுக்காகக் கோத்து, வந்த கற்பனைகள் வராமல், வாயுவேக மனோவேகமான பிருகாக்களை உதிர்த்தார். இனி கீரவாணி ராகத்தில் சஞ்சாரம் செய்வதற்கு இடமே கிடையாது என்று சொல்லும் படியாக வாசித்தார்.

சபையோர்கள் கேட்டு மெய் மறந்து மிக்க ஆரவாரத்துடன் இனி இந்த ராகத்தை நடேசப் பிள்ளை வாசிப்பதில் என்ன பிரயோசனம் இருக்கப் போகிறது என்று ஒருவருக்கொருவர் பேச ஆரம்பித்தார்கள். அச்சமயத்தில் ஈச்வர கடாட்சம் பொருந்திய நடேசப் பிள்ளை சீவாளியை வைத்து நாஸூக்காக உபக்ரமம் செய்தார். நாதஸ்வரத்திலிருந்து நாதம் வெளிப் பட்டவுடன் சர்வ ஜனங்களும் ஆகர்ஷணம் செய்யப்பட்டு ஆஹாகாரம் செய்தனர்.

சின்னப் பக்கிரியாப் பிள்ளையும் எல்லையில்லாத சந்தோஷத்தை அடைந்து, ''அண்ணன் அவர்கள் பூர்வ புண்ணியத்தால் அடைந்திருக்கும் ஊற்றின் பெருமையை ஒருவனாலும் ஜயிக்க முடியாது'' என்றார். பிறகு இரண்டு பேர்களும் பல்லவி முதலியவற்றைச் சமமாகவே வாசித்துக் கச்சேரியை முடித்தார்கள். சபையோர்கள் எல்லோரும் கரகோஷம் செய்து, இவ்விருவரும் இவ்வாத்தியத்திற்கு ஏற்பட்ட இரண்டு நேத்திரங்கள் என்று தீர்மானித்தார்கள். இருவருக்கும் சமமாகவே சம்பாவனை செய்து, மெடல்களும் கொடுத்துப் பெருமைப்படுத்தினார்கள்.

ஸ்ரீ வேணுகானம் சரப சாஸ்திரிகள் கூட ஸ்ரீ நடேசன் வாத்தியத்தைக் கேட்டு, அகமகிழ்ந்து மிகவும் மெச்சியிருக்கிறார்

என்றால் அவரது வாத்தியத்தின் கௌரவத்தை யான் எவ்வாறு வர்ணிக்க முடியும்? கானடா, அடாணா, ஃஹானா இந்த ராகங்களில் இவர் மாதிரி சஞ்சாரம் செய்தவர்களே கிடையாது.

செம்மனார் கோவில் ராமஸ்வாமிப் பிள்ளையும் ஸ்ரீ நடேசனுமாகச் சேர்ந்து ஜோடியாய் சென்னை சென்னகேசவப் பெருமாள் கோவிலில் வாத்தியம் வாசித்து முதல் முதலில் தங்க நாத ஸ்வரத்தைப் பரிசாகப் பெற்றார்கள்.